

உலக சம்பியனுக்கு அதிர்ச்சி வரலாறு படைத்த போலந்து

பக்கம் 18


# உதயன்

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 322 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 28, செவ்வாய் 14.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


14 OCT 2014

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04




24 வருடங்களின் பின்னர் நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்தது யாழ்தேவி.

யாழ்தேவி ரயில் சேவையானது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்றுப் பளையிலிருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முற்பகல் 10.10 மணிக்கு பளையிலிருந்து ஆரம்பமான ரயில் முற்பகல் 11.13 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, போக்குவரத்துத் துறை அமைச்சர் குமார வெல்கம, வடக்கு ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா உள்ளிட்ட இந்தியத் தூதரக அதிகாரிகளும் மற்றும் அரசதரப்பு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# வடக்கு முதலமைச்சருடன் பேசவுள்ளாராம் மஹிந்த

## மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர்கள் பங்குபற்றாமை வருத்தமளிக்கின்றது என்றும் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

"வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் பேச்சு நடத்தவுள்ளேன். மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பங்கெடுக்காமை குறித்து கவலையடைகின்றேன்"- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் இறுதியில் சிங்கள மொழியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் நலன்களுக்காக மேற்கொள்ளப்படும் அபி

22 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் நேற்றுக் கடும் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்ததை அடுத்து பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் எனப் பெருமளவானோர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

யாழ். நகர் பகுதியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பஸ்நிலையம், பிரதான வீதிகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, பளை, சாவகச்சேரி,

22 ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடு நீர்த் திட்டம் மாகாண சபையின் வேலை

### அவர்களுக்குரிய அதிகாரத்தில் தலையிடாராம் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், ஒக். 14

"இரணைமடுக் குளத்துக்கு மகாவலி கங்கையிலிருந்து நீரைக் கொண்டு வந்து, அதிலிருந்து குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்வதற்கே திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கான பணத்தை ஒதுக்கியுள்ளோம். அதனை செய்ய வேண்டியது வடக்கு மாகாண சபை

22 ஆம் பக்கம் பார்க்க

## சிங்களவரை மீண்டும் குடியேற்ற வேண்டும்



யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கிலிருந்து 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளியேற்றப்பட்ட சிங்கள மக்களை, மீளவும் இங்கு குடியேற்ற வேண்டும் என்று யாழில் வைத்து தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தமிழ் மக்களின் மீள்குடியமர்வு நிறைவுக்கு வந்துள்ள நிலையில், இங்கிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள், சிங்கள மக்களை மீளவும் குடியேற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வீரசிங்கம்

22 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி தலைமையில் அபிவிருத்திக் குழு கூட்டம்

### கூட்டமைப்பினர் முற்றாக புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புறக்கணித்திருந்த நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

வடக்குக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்துள்ள ஜனாதிபதி யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வந்திருந்தார். பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவையை காலை 10.30 மணியளவில் ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் வீரசிங்கம் மண்டபம் முன்பாக வைத்து இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய காரியாலயத்துக்கு புதிய பஸ்களை கையளித்தார்.

புதுப்பொலிவுபடுத்தப்பட்ட வீர

22 ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம்களின் வீட்டுத் திட்ட பிரச்சினையை தீர்க்கக் குழு

### அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நியமிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்கான வீட்டுத் திட்டப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் 5 பேர் கொண்ட குழு நேற்று நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வீட்டுத் திட்டத்திலுள்ள முழுமையான பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பர் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## மாணவர் ஆர்வக் கோளாறு; நிலைதடுமாறிய ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்தேவி ரயிலை வரவேற்பதற்காகக் கூடி நின்ற மாணவிகள் ரயிலில் வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையை ஆர்வக் கோளாறால் பிடித்தனர். அதனை எதிர் பார்க்காத ஜனாதிபதி சற்று நிலைதடுமாறிய

21 ஆம் பக்கம் பார்க்க

# மஹிந்த ராஜபக்ஷவுக்கு பதவி ஆசை ஏற்பட்டுள்ளது

## இப்படிக் கூறுகின்றார் ஜே.வி.பி. கட்சியின் செயலர் ரில்வின் சில்வா

கொழும்பு, ஒக்.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு சாதகமாக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். ஜே.வி.பியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது அரசியல் அமைப்புக்கு முரணான செயல். எனவே ஜனநாயகத்துக்கு எதிரான இந்தச் செயலைக் கண்டிக்க ஒன்றிணைய வேண்டியது அவசியம்.

அவர் 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், தனது அதிகாரத்தையும், குடும்ப ஆதிக்கத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்காக, சட்டத்துக்கு முரணான வகையில் அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு அவசரம் காட்டுகிறார். இதன் மூலம், நலிந்திருக்கும் அரசியல், பொருளாதாரத் துறைகளைக் கட்டியெழுப்ப அவர் முனையவில்லை. இன்னும் ஆறு வருட காலத்துக்கு கோலோச்ச வேண்டும் என்கின்ற பதவியாசையும், வெறியுமே இதற்கு மூல காரணமாகும்.

ஒருவருக்கு இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்றிருந்த 18ஆவது சட்டத் திருத்தத்தை 2010இல் நாடாளுமன்றின் ஊடாக மாற்றியமைத்தே, மஹிந்த மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முனைகிறார். ஆனால், இதற்காகப் பெற்றுக்கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை வரம் மக்கள் விருப்பத்தின் பேரில், 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ஊடாக அளிக்கப்பட்டதல்ல.



நாட்டின் அரசியலமைப்பை முதல்தர பிரஜை ஒருவர் மீறும் போது அமைதியாக இருக்க முடியாது. இந்தநிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் முறை போட்டியிடும் சட்டவிரோத செயலை ஏற்றுக் கொண்டதைப் போலாகிவிடும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)












வடக்குக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அங்கு அவர் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொண்டார். அவற்றின் புகைப்படத் தொகுப்பு. (ற-21,05,109)






















# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 28 செவ்வாய் (14.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 322


# 24 வருடங்களின் பின்னர் நேற்று யாழ்ப்பாணம் வந்தாள் யாழ்தேவி

யாழ்ப்பாணம், ஒக். 14

**இலங்கை - இந்திய தேசியக் கொடிகளைச் சுமந்தவாறு 24 வருடங்களின் பின்னர் அலங்கரிக்கப்பட்ட யாழ் தேவி ரயில் நேற்று யாழ். நகரை வந்தடைந்தது.**

**காலை 10.10 மணியளவில் பளையிலிருந்து ஆரம்பமான ரயில் 11.13 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தை வந்தடைந்தது.**

பளை ரயில் நிலையத்திலிருந்து யாழ்தேவி ரயில் சேவையை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொடிகாமம், நாவற்குழியிலுள்ள ரயில் நிலையங்களையும் திறந்து வைத்தார். இதையடுத்து யாழ்ப்பாணத்தில் ரயில் நிலையத்திலுள்ள அதிதிகளின் கையேட்டில் முதன்முதலாகக் கையெழுத்திட்டார்.

### அலங்கரிக்கப்பட்ட யாழ்தேவி

24 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்த யாழ்தேவி ரயில் வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ரயிலின் இயந்திரத்தின் வலது புறத்தில் இந்திய தேசியக் கொடியும் இடது புறத்தில் இலங்கைத் தேசியக் கொடியும் கட்டப்பட்டிருந்தன. மேலும் முன் பக்கத்தின் இரு மருங்கிலும் வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்ததுடன் தோரணங்கள், மாலைகளும் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் பளை ரயில் நிலையமும் பல வர்ண மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

### பளையில் மஹிந்த

நேற்றுக் காலை 10.05 மணிக்கு பளை ரயில் நிலையத்துக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த. ரயில் பயணத்துக்கான ரிக்கெட்டைப் பெற்றுக்கொண்டு 2ஆம் இலக்கப் பெட்டியில் உள்ள மூன்றாவது ஆசனத்தில் அமர்ந்து பயணத்தை ஆரம்பித்தார். பளை ரயில் நிலையத்தில் இந்து, பௌத்த கலாசார நடனங்கள் இடம்பெற்றன. இங்கு யாழ் தேவி ரயிலைக்காண பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், பெரியோர்கள் என (22ஆம் பக்கம் பார்க்க)




## தினமும் காலை 7.25 க்கு யாழ் தேவி கொழும்புக்கு

### நாளை முதல் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஒக்.14

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான ரயில் சேவைகள் அனைத்தும் நாளை புதன்கிழமையில் இருந்து சேவையில் ஈடுபடும் என்று யாழ்.ரயில் நிலையம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில்,பொது மக்களுக்கான ரயில்கள் அனைத்தும் நாளையில் இருந்தே சேவையில் ஈடுபடும்.

இதற்கமைவாக 4002 இலக்க யாழ்தேவி ரயில் சேவை தினமும் காலை 7.25 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டுப் பிற்பகல் 3.47 மணிக்குக் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

4094 இலக்க விசேட ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் முற்பகல் 10 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மாலை 6.11 மணிக்குக் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

4018 இலக்க நகர்சேர் கடுகதி சேவை (22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவி ஆசனப் பதிவு எதுவும் நேற்று இல்லை

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ்தேவி நேற்று உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தபோதும் யாழ்ப்பானத்தில் இருந்து கொழும்புக்கோ, பளையில் இருந்து கொழும்புக்கோ செல்லும் ரயில் பயணத்துக்கான ஆசனப் பதிவுகள் எவையும் நேற்று எங்கும் முன்னெடுக்கப்படவில்லை.

இதுவரை காலமும் பளையில் இருந்து கொழும்பு வரையான ஆசனப் பதிவுகளை மேற்கொண்ட குறிப்பிட்ட நிறுவ-மொன்று நேற்று ஆசனப் பதிவுகளைக் கைவிட்டிருந்தது. இது குறித்து உதயன் யாழ்.ரயில் நிலைய அதிகாரிகளிடம் கேட்ட பொழுது, ஆசனப் பதிவுகள் மற்றும் முன்கூடிய ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கான படிமுறை இன்னமும் வரவில்லை. குறிப்பிட்ட இந்தச் சேவையானது நாளை (இன்று) காலை 8 மணி முதல் நடைமுறைக்கு வந்து விடும் எனத் தெரிவித்தனர். (த-ரி)

## 2016 இல் அனைவருக்கும் இலத்திரனியல் அ. அட்டை

யாழ்ப்பாணம், ஒக். 14

2016 இல் பெரும்பாலும் அனைவருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கப்படும். கூடுதல் பாதுகாப்பும் இலகுவான ஆள் அடையாளம் காணும் தன்மையுமே இந்த அடையாள அட்டையின் சிறப்பியல்பாக அமையும்.

இவ்வாறு குறிப்பிட்டார் ஆள் பதிவு திணைக்களத்தின் அதிகாரி ஆர்.எம்.எஸ்.சரத்குமார.

உதயன் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலத்திரனியல் அடையாள அட்டையில் மூன்று சிறப்பம்சங்கள் அமைந்திருக்கும். ஒன்று அடையாள அட்டைக்குரிய குறிப்பிட்ட நபரின் சகல தரவுகளும் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும். இரண்டாவது அடையாள அட்டைக் குரிய குறிப்பிட்ட நபரின் வளர்ச்சிக் கட்டங்கள் தொடர்பான புகைப் படங்களும் ஏனைய அவர் தொடர்பான புகைப்படங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும். மூன்றாவது நபரின் கைவிரல் அடையாளம பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும். இவை ஒரு நபர் தெட்பான ஆள் அடையாளங்களை இலகுவில் வெளிப்படுத்தவும் தனிநபர் மற்றும் நாட்டுப் பாதுகாப்புக்கும் சிறப்பாக அமையும் - என்றார்.

(த-ரி)

## யாழ். - கொழும்பு ரயில் கட்டணம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.14

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான ரயில் சேவை கட்டண விப ரங்களை யாழ்.ரயில் நிலை யம் அறிவித்துள்ளது. இதற்கமைவாக யாழ். தேவி ரயில் சேவையில் மூன்றாம் வகுப்பு இருக் கைக்கு 320 ரூபாவும், இரண்டாம் வகுப்பு இருக் கைக்கு 570 ரூபாவும், முதலாம் வகுப்பு இருக்கைக்கு ஆயிரத்து 100 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படும்.

இதேவேளை, முற்பதி வுக் கட்டணங்களாக மூன் றாம் வகுப்பு இருக்கைக்கு 500 ரூபாவும், இரண்டாம் வகுப்பு இருக்கைக்கு 700 ருபாவும் கட்டணங்களாக அறவிடப்படும். இதே கட்டணம் இரவு தபால் சேவை ரயில் கட் டணங்களாகவும் அறவிடப் படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட ரயில் சேவைகளுக்கான கட்டணங்கள் சாதாரண கட்டணங்களில் இருந்து அதிகரித்த கட்டணங்களாக அறவிடப்படும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது. (த-14-ரி)

## காப்புறுதிச் சுற்றறிக்கையால் துரையப்பாவில் குழப்ப நிலை

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கு வடக்கில் இல்லாத காப்புறுதி நிறுவனத்திடமே காப்புறுதி பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டமையால் அங்கு சிறிது குழப்பம் ஏற்பட்டது. குறித்த நிறுவனத்திடமே காப்புறுதி பெறவேண்டும் என்று அரச உயர் மட்டத்தினால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டமையே (22ஆம் பக்கம் பார்க்க)

## பெண்களே பெண்களைத் தாக்கும் சம்பவங்கள் குடாநாட்டில் அதிகம்

### அதற்கும் தனிச் சிகிச்சை விடுதி அமைக்க வேண்டிய நிலைமை

தென்மராட்சி, ஒக்.14

ஆண்களால் தாக்கப்படும் பெண்களுக்கான தனியான விடுதி சாவகச்சேரி மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பெண்களால் தாக்கப்படும் பெண்கள் அதிகளவில் விடுதியில் அனுமதிக்கப்படுவதால் அவ்வாறு பாதிக்கப்படுபவர்களுக்குத் தனியான விடுதி ஆரம்பிக்க வேண்டிய நிலை மருத்துவமனை நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

ஆண்களின் வன்முறைகளுக்கு ஆளாகும் பெண்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்கெனத்தனியான விடுதி அமைக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெறுவோருக்குச் சிகிச்சையுடன் கூடிய ஆற்றுப்படுத்தல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு (22ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களுக்கும் மோ. சைக்கிள்கள்

### வேண்டும் என்கிறது சங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.14

ஆசிரியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்காதமை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளதோடு அவர்களுக்கு அவற்றை வழங்குமாறும் கோரியுள்ளது.

இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:-

வடக்குக்குப் பயணம் மேற் (22ஆம் பக்கம் பார்க்க)


முதன் முறையாக யாழ். மண்ணில் 100 வீத விசா உறுதிப்பாட்டுடன் வெறும் 900 000/= ரூபா செலுத்தி **செங்கன் விசா**

* 2 மாதங்களில் **இத்தாலி, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், ஜேர்மனி** உட்பட 26 நாடுகளில் படிக்க உழைக்க 2 வருட விசா.
* மேலதிக கட்டணங்கள் எதுவுமில்லை.
* எழுத்து மூலமான விசா உறுதிப்பாடு.

(நிபந்தனைகளுடன்)

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்**

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.

இல.175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.



அரசபதிவிற்கு உட்பட்டது பதிவிலக்கம்: PV 82703

021 221 9016

# நாவற்குழி பொது நூலகத்தில் வாசிப்பு மாத செயற்பாடுகள்

தென்மராட்சி, ஒக்.14

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நூலகர் அறிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி ஆரம்ப தினத்தன்று சிறுவர், முதியோர் தின நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி தொடர் நிகழ்வுகளாக முன்பள்ளி சிறார்களின் சஞ்சிகைகள் ஆக்கப் பொருள்களின் காட்சிப்படுத்தலும், முப்பரிமாண நூலகச் செயற்பாடாக பொம்மைகளின் காட்சிப்படுத்தல்களும் இடம்பெற்றன. தொடர்ந்து சிரமதானமும் நூலகத்தை புதுப்பித்தலும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், பொதுமக்கள் கூடும் இடங்களில் நூலக விழிப்புணர்வு தொடர்பான பதாகைகள் காட்சிப்படுத்தல், தேசிய நூலக வாசிப்பு மாதத்தில் நூலகம் திறந்திருக்கும் நேரத்தை அதிகரித்தல், தேசிய வாசிப்பு மாத இலச்சினை வழங்கல், நாவற்குழி உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட பாடசாலைகள் முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றில் நூலக நடமாடும் சேவையையும் புத்தகக் கண்காட்சியையும் நடத்துதல், முன்பள்ளிச் சிறார்களிடையே கதை சொல்லும் நேரம் போட்டியையும், சிறார்கள் மற்றும் மாணவர்கள் நலன்கருதி பயன்மிக்க படக்காட்சிகளையும் காண்பித்தல்.

மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளை நடத்துவதுடன் விசேட பயிற்சி வகுப்புகளை நடத்துதல், துண்டுப் பிரசுரம் வழங்குதல், நூலக விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகங்கள் காண்பித்தல், இந்தக்காலப் பகுதியில் நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைவோருக்கு இலவசமாக அங்கத்துவம் வழங்கல்.

உப அலுவலக பிரிவில் உள்ள தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் நடமாடும் சேவை வழங்கல், மரம், செடி, கொடிகள் காட்சிப்படுத்தலும், விளக்கமளித்தலும், வாசகர்கள் நலன் விரும்பிகளிடமிருந்து நூலகத்துக்கு நூல்கள் மற்றும் பொருள்கள் அன்பளிப்பாகப் பெறுதல், எழுத்தாளர்களைக் கௌரவித்தல், பாடசாலை நூலகங்கள், சனசமூக நிலைய நூலகங்கள், முன்பள்ளி நூலகங்கள் ஆகியவற்றுக்கான போட்டிகளை நடத்துதல், தொகுப்பாக்க வெளியீடுகள், சஞ்சிகை வெளியீடு போன்றவற்றை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுடன் தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதியத்தினரின் அனுசரணையுடன் அதிக நேரம் நூலகத்தைப் பயன்படுத்தும் ஐந்து வாசகர்களைத் தெரிவு செய்து பரிசில்களும் மரக்கன்றுகளும் வழங்கல், கட்டுரைப் போட்டி நடத்துதல், பௌர்ணமி அரங்க நிகழ்வுகள், நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன, இறுதிநாள் நிகழ்வாக பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும் என்றும் நூலகர் தெரிவித்தார். (வ-9)

## மாணவரைக் கௌரவித்த நலனோம்பு கூட்டுறவுச் சங்கம்



யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ்.மாவட்ட பணியாளர் நலனோம்பு கூட்டுறவுச் சங்கம் 2013ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கூட்டுறவுப் பணியாளர்களின் பிள்ளைகளை பாராட்டி பரிசில்களை வழங்கியுள்ளது. நலனோம்பு கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் கெங்காதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நலனோம்பு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் செ.இலகுநாதன் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்களை வழங்கினார். மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கியின் சமாச மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கூட்டுறவு பணியாளர்கள் மற்றும் நல நோம்பு கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள் கலந்து கொண்டனர். (வ-17)

## சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் சாதனை

இந்தோனேஷியாவில் நடைபெற்ற சர்வதேச கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் ஆகியோர் சாதனை படைத்துள்ளனர்.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தரம் -7 மாணவன் நடேசமூர்த்தி சிவமைந்தன் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் சென்ற வருடம் பிலிப்பைன்ஸில் இடம் பெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் அடுத்தடுத்து சர்வதேச ரீதியில் வெவ்வேறு துறைகளில் பதக்கங்களை வென்று வரும் தமிழ் மாணவனாவார்.

◆◆◆



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தரம்-8 மாணவன் தனராஜ் சுந்தர்பவன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். குறித்த போட்டியில் கலந்து கொள்வதற்கான பயணச் செலவை கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஐக்கிய ராஜ்ஜியக் கிளையினர் வழங்கி யிருந்ததாக அதிபர் அ.கயிலாயபிள்ளை தெரிவித்தார். (ஒ-9)

## நெஞ்சக் கதவை- கொஞ்சம்........

### பூதாகரம் நீட்டும் டி.சி.டி.

நாட்டில் விற்பனையாகிக் கொண்டிருக்கும் பால்மா வகைகளில் 20 வீதமானவற்றில் டி.சி.டி. இரசாயனக் கலப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருப்பது பால்மாக்களைப் பாவிப்போரது வயிற்றில் டி.சி.டி. இரசாயனத்தைக் கரைத்தது போலுள்ளது. ஆயிரத்துக்கு மேற்பட்ட பால் மா வகைகளின் மாதிரிகளிலிருந்தே இந்தத் தகவல் பெறப்பட்டுள்ளது. இதே சிக்கெடுப்பு முன்னரும் ஓர் உற்பத்தி நிறுவனத்தின் பால்மா வகை பற்றி பெரிதாக மூண்டு அடங்கியது. இப்போ எந்தப் புற்றில் எந்தப் பாம்பு என்பது போன்று பால்மா பாவனையாளர் பால்மாப் பைகளை மிரட்சியுடன் பார்க்கும் பரிதாப நிலையிலும் பால் தேநீரை விடமுடியாத நிலை.

கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆயிரம் பசுக்களே உள்ளதாகவும், இருந்தும் தினமும் 5000 லீற்றர் பால் சேகரிக்கப்படுவதாகவும், பால் பழுதடையாது சேகரிக்கும் நிலையம் ஒன்றின் அவசியம் பற்றியும் கோரிக்கை எழுந்துள்ளது. "வட மாகாணத்தில்தான் அதிகூடிய பால்மா விற்பனை" என்று முன்னர் வெளியான தகவலை மேவும் வகையில் வன்னிப் பிரதேசம் வடக்கின் பால் உற்பத்தித் தேவையை மட்டுமல்ல நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் கணிசமான பாகத்தை வகிக்க முடியும் எனலாம்.

இங்கும் இரு கூட்டுறவு நிறுவனங்கள் தமது கிளைகளினூடாக பால் கொள்வனவு - விற்பனவுகளை மேற்கொள்கின்றன. இவற்றின் எல்லை தாண்டி வசிப்பவர்கள் குறித்த சேவைகளைப் பெற முடிவதில்லை. அதேவேளை, இவை தாம் கொள்வனவு செய்த பாலை விற்பனை செய்ய முடியாத வேளைகளில் வெளியூர் நிறுவனத்துக்கு தமது கொள்வனவு விலையிலும் குறைத்து விற்க வேண்டிய கட்டாயமும் உள்ளது. சுவையூட்டி, குளிரூட்டி விற்கப்படும் 'அந்தப்பாலை' நாடும் எங்களின் நாட்டம் இங்குள்ள தூய பசுப்பாலின் மீது ஏற்பட வேண்டுமாயின் - டி.சி.டியின் பூதாகரங்களிலிருந்து விடுபட வேண்டுமாயின் - பசுப்பால் விநியோகிப்போரின் சைக்கிள் மணி ஓசை எங்களது வீட்டு வாசல்களில் தினமும் ஒலிக்க வேண்டும்.

செல்வவேலாயுதம்.


### விற்றுத் தீர்த்தல்

நெல்லியடி பஸ் நிலையத்திற்கு மிக அருகில் உள்ள பிரபல்யமான மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் உள்ள உதிரிப்பாகங்கள் முழுவதுமாக விற்பனைக்கு உள்ளன. அந்த இடத்தில் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கும் கடைக் கட்டடத்தை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கும் ஆவன செய்து தரப்படும்.

தொடர்பு:077 314 4895

(சி/16889)(6.4.3)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

IATA Accredited Agent

METRO Travles & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள். . . . .

- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
- குழு பிரயாண வசதிகள்
- வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk

(சி16755)(12.3.6)

### வேலைக்கு ஆள் தேவை

கொக்குவிலில் உள்ள கடைக்கு வேலை செய்ய ஆள் ஒருவர் தேவை.
(பெண்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு:077 851 1265/077 922 9333

(53206)(4.6.3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



தனது அர்ப்பணிப்பான சேவையால் எம்மை உருவாக்கிய எமது கணித ஆசானும் பாடசாலை பிரதி அதிபருமான செல்வி திலகவதி இராமசாமி 06.10.2014 திங்கட்கிழமை மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் அதிமேதகு பிரதமர் டி.எம்.ஜயரத்ன தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் தின விருது வழங்கும் நிகழ்வில் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சிறந்த ஆசிரியருக்கான உயர் ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா 2014 விருதினை கௌரவ கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களிடமிருந்து பெற்றமையையிட்டு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன், எதிர்கால வாழ்க்கையும் சிறப்புற்று விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: படித்த பழைய மாணவர் சார்பாக
ப.நிதர்சன், இ.ராகுலன், க.கோபிகுமார், ப.ஜீவிகா.
யா/ ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்.

(53202)(4.3.6)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



2014 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/உடுவில் அ.மி.த.க பாடசாலை மாணவனும் லக்ஸ்மன்-புஸ்பகலா தம்பதியரின் செல்வப் புதல்வனுமான செல்வன் ல.எஸ்லிடனுஷன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

Congratulation

அதே பாடசாலையைச் சேர்ந்த சித்தியடைந்த மாணவர்களையும் வாழ்த்துவதோடு, ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர் S.முரளிமோகன் அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்
க.கலாமோகன்(B.A., Dip. in Teach)
புலமைக் கல்வி நிறுவனம், மானிப்பாய்.
அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி கிருஷ்ணபிள்ளை,
திரு.திருமதி நல்லதம்பி குடும்பத்தினர்.
உடுவில்.


(53201)(5-6-3)

# கற்றல் கையேடும் இறுவட்டு வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக். 14
ஜி.சீ.ஈ. சாதாரணதர விஞ்ஞான பாட அடைவு மேம் பாட்டுக்கான இறுவட்டு வெளியீடுகள் யாழ் இந்துமகளிர் கல்லூரி விசாலாட்சி சிவகுருநாதன் மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ் கல்வி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் வட மாகாண விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜாவும் கலந்து கொள்வார்கள். சாதனை புரிந்த மாணவர்கள், கல்வி கற்பித்த ஆசிரியர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (வ-ரி)


# தீபாவளியை முன்னிட்டு நேரக்கட்டுப்பாடு தளர்வு

யாழ்ப்பாணம், ஒக். 14
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ் மாவட் டத்திலுள்ள சிகை ஒப்பனை நிலையங்களுக்கு தீபாவளி தினத்தன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. எனவே நாளை தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரை நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்படுவதுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அந்த நிலையங்களைத் திறந்து சேவையை வழங்குமாறும் யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (வ-ரி)



தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வவுனியா விபுலாநந்தாக் கல்லூரி மாணவர்கள் 64 பேர் சித்தியடைந்துள்ளனர். பாடசாலையின் முன்னாள் அதிபர் வே.இந்திரன், முன்னாள் பிரதி அதிபர் கு.சிவனேசன் ஆகியோரின் வழிப்படுத்தல்களில் சித்தியடைந்த மாணவர்களுடன் பிரதி அதிபர் அ.முரளீதரன், பொறுப்பாசிரியர் சு.விவேகானந்தராஜா, இணைப்பாளர் பொ.ஸ்ரீகலா, ஆலோசகர் திருமதி சித்திர வேலாயுதம் மற்றும் வகுப்பாசிரியர்கள் காணப்படுகின்றனர். (வ-421)

# தீவுப்பகுதி மாணவர்களுக்கு கூ.சங்கம் சேமிப்பு புத்தகம்



யாழ்ப்பாணம், ஒக்.14
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தீவுப்பகுதியில் முதலிடம்பெற்ற மாணவனுடன் மிகவும் கூடுதல் புள்ளிகளைப்பெற்ற மாணவர்களுக்கு நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம் சேமிப்புத் புத்தகங்களை வழங்கியது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன், பல.நோ.கூ. சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம் மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் மற்றும் ஆசிரியர்களுடன் சித்தியடைந்த மாணவர்களைக் காணலாம். (வ-7)

# வடமாகாண ஒன்றியம் 2 வாரங்களில் தெரிவு

## யாழ்.மாவட்ட தனியார் பஸ் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவில் வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.14
வடமாகாண சபையால் 5 மாவட்டங்களிலும் சங்கங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதற்காக முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று யாழ். மாவட்டத்திலும் 15 கிளைச் சங்கங்களையும் இணைத்து புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்ட பின்னர் இன்னமும் 2 வாரங்களில் 5 மாவட்டங்களையும் இணைத்து வட மாகாண ஒன்றியம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.
யாழ்.மாவட்ட தனியார் பஸ் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
"கட்சிகளின் கொள்கைகளுக்கு அப்பால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சி பேதமின்றி மக்களுக்காக சேவையை வழங்கத் தயாராக இருக்கின்றோம். எதிர்கால நடவடிக்கைகளும் அவ்வாறே அமையும்.
தனியார் போக்குவரத்து பஸ் சேவையானது மக்களது சேவைக்கு அப்பால் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையை சகல மாவட்டங்களிலும் வழங்கி வருகிறது.
தனியார் பஸ்கள் தனியாக பணத்தைச் சம்பாதிப்பது மட்டுமல்லாது மக்களது சேவையை முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும். இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்ஸுடன் சண்டை போடுவது, பஸ்ஸுக்கு கல்லெறிவது, கண்ணாடி உடைப்பது போன்ற சம்பவங்களும் இடம் பெறாமல் இல்லை. அவ்வாறான சம்பவங்கள் எதிர் காலத்தில் நிறுத்தப்பட வேண்டும்.
சட்டத்தில் உள்ள நடை முறைகளுக்கு அமைவாக சங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும். மக்களுக்கான அபிவிருத்திகள் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் கட்சி பேதமின்றி எமது செயற்பாடுகள் அமைய வேண்டும்.
தனியார் வீதி போக்குவரத்து அதிகாரசபை 150 பேரைக் கொண்டதாக நியதிச்சட்டங்களின் படி உருவாக் கப்பட்டு வடமாகாண சபையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கப்படும்" -என்றார்.
இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள பொ.கெங்காதரன் யாழ். மாவட்ட தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கு சங்கத்தின் உறுப்பினர் சிலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில் வாக்கெடுப்பு நடத் தப்பட்டு தலைவராக மீண்டும் அவரே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
உப தலைவராக சி.மகாலிங்கம், செயலாளர்களாக மா.சசிகுமார், ச.கருணாகரன் ஆகியோரும் பொருளாளராக சிங்க அரியரட்ணம், உப செயலாளராக எஸ்.கரிதாஸ் ஆகியோரும் உறுப்பினர்களாக 15 கிளைச்சங்கங்களில் இருந்து ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
நிர்வாக சபைத்தெரிவுக்காக 15 கிளைச்சங்கங்களும் வட மாகாண போக்குவரத்து அமைச்சால் வரவழைக்கப்பட்டிருந்தன. தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை சங்கங்கள் ஏற்கனவே மாவட்டச் சங்கத்திலிருந்து விலகியிருந்தன. எனினும் தெரிவுக் கூட்டத்துக்கு அவையும் வந்திருந்தன. கடந்த நிர்வாகத்துக்கு எதிராக அவை போட்டி வேட்பாளர்களைக் களமிறக்கியதுடன் தெரிவு தொடர்பில் வாக்குவாதங்களிலும் ஈடுபட்டன.
ஒவ்வொரு தெரிவுக்கும் வாக்கெடுப்பை நடத்தினார் அமைச்சர். ஏற்கனவே நிர்வாக சபையில் இருந்த வர்களே மீண்டும் தெரிவின் அடிப்படையில் தலைவர் செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-14-ரி)

# நிர்வாகிகள் தெரிவு

அச்சுவேலி, ஒக் .14
நீர்வேலி கந்தசாமி கோயில் பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் அண்மையில் ஆலய மண்டபத்தில் நடை பெற்றது. புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:
தலைவர் த.நடராசா, உபதலைவர் என்.சிவசுப்பிரமணியம், செயலாளர் க.மகாலிங்கம், உப செயலாளர் ஆ.தர்சிகரன், பொருளாளர் சி.தயாநாதன், களஞ்சியப் பொறுப்பாளர் எஸ். செல்வக்குமாரன் மற்றும் 9 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ-11)

கற்றல் கையேடும் இறுவட்டு வெளியீடும்
க.பொ.த (சா/த) விஞ்ஞான பாட அடைவு
மேம்பாட்டுக்கான
வெளியீடுகள்
இடம்: யா/இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி சிவகுருநாதன் மண்டபம்
காலம்: இன்று (14.10.2014) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணி
தலைவர்
தி.கதிர்காமநாதன் அவர்கள்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்), யாழ்ப்பாண கல்வி வலயம்
பிரதம விருந்தினர்
செ.உதயகுமார் அவர்கள்
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண கல்வி வலயம்
சிறப்பு விருந்தினர்
க.அ.சிவனருள்ராஜா அவர்கள்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்),
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
விஞ்ஞான பாட ஆசிரியர்கள், யாழ்ப்பாண கல்வி வலயம்
அனுசரணை:
THIRUMURUGEN COM NET PVT.LTD
திருமுருகன் கொம் நெற்
இல.271A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212227835 / 0777554528
(துரித தபால்கள், பொதிகள் சேவை)

பணிநிலை வெற்றிடம்
காலை
9.00-12.00
மணி வரை
வரவேற்பாளர்
Receptionist
நேர்முகத் தேர்வு
15|10|2014 புதன்கிழமை
அடிப்படைத் தகைமைகள் :-
* வயதெல்லை :- 18 - 35
* க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
* கணினி அறிவு ( Ms Office )
* சரளமாக உரையாடக் கூடியவராக இருத்தல் அவசியம்
* முன் அனுபவம் விரும்பத்தக்கது

ANDRA
DIGITAL IMAGE
0776622981, 0777481696
#379, Kasthuriyar Road, Jaffna.
C/16886




கிளிநொச்சிக்கு நேற்று முன் தினம் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சி இந்துக் கல்லூரி, மற்றும் வட்டக்கச்சி மத்திய கல்லூரி ஆகியவற்றின் மஹிந்தோதய விஞ்ஞான தொழில்நுட்பக் கூடங்களை திறந்து வைத்தார். (த-18)

# வவுனியா பண்டாரிக்குளக்கட்டு வீதியை திருத்த ஒத்துழைக்குமாறு கோரிக்கை

வவுனியா, ஒக் 14

வவுனியா பண்டாரிக்குளம் குளக்கட்டுப் பாதை திருத்தப்படுவதனால் பயணிகள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துமாறு வீதி திருத்தப் பணியாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் வவுனியா பண்டாரிக்குளக்கட்டுப் பாதை ஒடுங்கிய பாதையாக இருந்தது.

இதனால் இந்தப் பாதையால் செல்லும் பயணிகள் வீதி விபத்துக்களை சந்தித்ததுடன் தமது பயணங்களை காலதாமதமாக மேற்கொள்ள நேர்ந்தது.

இதனையடுத்து இந்தப் பாதை திருத்தப்பட்டு அகலமாக்கப்படுகிறது.

இந்தப் பாதை அகலமாக்கப்படுவதனால் பண்டாரிக்குளம் வியாசர் வீதி, மாடசாமி கோவிலடியை சேர்ந்த மக்கள் பலரும் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் நாளாந்தம் சில பயணிகள் வீதி திருத்தப் பணி இடம்பெறும் வேளையில் இந்தப் பாதையை ஊடறுத்து வாகனங்களில் செல்கின்றனர். குறிப்பாக வீதிக்கு குறுக்காகக் கட்டப்பட்டுள்ள கயிற்றை அறுத்து விட்டுச் செல்கின்றனர். இதனால் வீதித் திருத்தப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த-402)


# வவுனியா சி.சி.ரி.எம்.எஸ் பாடசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட நுழைவாயில் திறப்பு

வவுனியா, ஒக் 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர்கள் தியாகராசா, இந்திரராசா ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையின் (சி.சி.ரி.எம்.எஸ்) நுழைவாயில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தனது உரையில்,

வன்னி மாவட்டத்திலேயே முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையாகும். 136 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்தப் பாடசாலையில் கடந்த 20 வருடங்களாக ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி




எதிர்வரும் 21 ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள திருமதி தர்மகுலசிங்கமும் ஆசிரியர், அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள அவரது கணவர்

தர்மகுலசிங்கமும் கல்விச் சமூகத்துக்கு ஆற்றிய பணிகளுக்காக வன்னி மக்களின் சார்பிலும், பாடசாலைச் சமூகத்தின் சார்பிலும் நன்றிகளையும் பாராட்டுகளையும் கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தற்போது இந்தப் பாடசாலை அனைத்து வளங்களையும் கொண்ட ஒரு பாடசாலையாகச் செயற்படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். கிராமப் புறங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு இந்தப் பாடசாலையில் கற்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு கல்வி கற்கும் மாணவர்களை எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு தயார் படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு அதிபர் ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி, பெற்றோர்களுக்கும் உண்டு.

ஆகவே ஒவ்வொரு பெற்றோர்களும் பாடசாலையோடும் அதிபர் ஆசிரியர்களோடும் நெருக்கமான நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக உங்கள் பிள்ளைகளின் வகுப்பாசிரியருடன் உங்கள் பிள்ளைகளின் கல்வி நிலைமை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் அவர்களை வழி நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடமாகாண சபை உறுப்பினர்களான தியாகராசா, இந்திரராசா ஆகியோரும், வவுனியா வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா தெற்கு கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா, பொருளியலாளர் எஸ்.சிவகுமாரன், பிரதிக்கல்வி பணிப்பாளர்களான திருமதி மாணிக்கவாசகம், கணேசலிங்கம், வலய பிரதிநிதி வசந்தி குலராசா, பாடசாலையின் பிரதி அதிபர் ஜெரோம் பிரதாபன் ஆகியோரும் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (த-402)


## கண்ணீர் அஞ்சலி

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த தாவரவியல் ஆசிரியரும் எமது கொழும்பு பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் Dr.ஆ.இராமநாதனின் அன்புச் சகோதரனுமாகிய



**ஆறுமுகம் சிவவீரசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள், ஊழியர்கள்
SDS,SDC
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(சி/16690)(5.3.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின்
முன்னாள் தாவரவியல்
ஆசிரியரும்,
பல மாணவர்கள்
மருத்துவத்துறை
செல்வதற்கு வழிகாட்டியாக
விளங்கியவரும், எமது
பாடசாலைக்குப் பல்வேறு
சேவைகளைச் செய்து
வந்தவருமாகிய

**ஆறுமுகம் சிவவீரசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

(53203)
(12.3.6)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லலிதாதேவி கந்தையா



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லலிதாதேவி கந்தையா 12.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-கனகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மருமகளும், கந்தையாவின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பிரதேச சபை-ஓட்டுசுட்டான்) அன்பு மனைவியும், துரைசிங்கம், இராசசுந்தரம், திருமதி ராஜேஸ்வரி அரியநாயகம், திருமதி புஸ்பராணி நடராசா, காலஞ்சென்ற தர்மபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கபிலன் (கனடா), கமலன்(கனடா), கலியுகன்(B.A.(Hons),PGDE, M.Phil,M.Ed(Rede) ஆசிரியர்- யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயம், ஆனைக்கோட்டை)ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'லலிதவாசம்'
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

தகவல்: கந்தையா (கணவர்)

(53206)(5.6.3)

### பாலபாஸ்கரன் கிருஷாந்த்

*(A/L 2012 கணிதப்பிரிவு யா.இ.கல்லூரி)*



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலபாஸ்கரன் கிருஷாந்த் நேற்று (13.10.2014) திங்கட்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் பாலபாஸ்கரன் - இந்துமதி தம்பதியரின் மூத்த புதல்வனும், அனுசாந்தின் அன்புச் சகோதரனும் பகவதி - நவரட்ணசாமி, காலஞ்சென்றவர்களான நாகராசா - மகேஸ்வரி ஆகியோரின் அருமைப் பேரனும், பாலச் சந்திரன், கோணேஸ்வரன், கமலதாஸ் ஆகியோரின் பெறாமகனும், ஸ்ரீதரன், தனா, கலைவாணி சந்திரகுமார் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2014) செவ்வாய்க் கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மனல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/27, தலையாளி ஒழுங்கை,
இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்

(53204)
(12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி கிருஸ்ணசாமி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், தொல்புரத்தை வசிப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை புலம்பெயர் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கிருஸ்ணசாமி 11.10.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி-சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமியின் (இளைப்பாறிய காவல்துறை அதிகாரி) அன்பு மனைவியும், இராஜேஸ்வரி (மலேசியா), காலஞ் சென்றவர்களான கிருஸ்ணரட்ணம் (மலேசியா), இரட்ணகோபால் (சிங்கப்பூர்), இரட்ணகுமார் (தொல்புரம்) மற்றும் நாகராஜா (இங்கிலாந்து), ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, பொன்னம்மா, குமாரசாமி, அன்னம்மா, தங்கம்மா, அப்பாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஸ்ணவதனி (டென்மார்க்), இரதிவதனி (சுவிஸ்), சுகந்தினி (சுவிஸ்), முரளிதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீதரன் (டென்மார்க்), சதானந்தன் (சுவிஸ்), யோகேஸ்வரன் (சுவிஸ்), அனுசியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நாராயணி (டென்மார்க்), நிரேஷ் (டென்மார்க்), சதீஸ் (சுவிஸ்), சங்கேஷ் (சுவிஸ்), வைதேகி (சுவிஸ்), சௌமியா (சுவிஸ்), அனோஜன் (ஆஸ்திரேலியா), கிரிஜன் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (16.10.2014) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்.

கிருஸ்ணவதனி (டென்மார்க்) (Home/Cell) 00 45 46384780 / 00 45 27236793
இரதிவதனி (சுவிஸ்) (Home/Cell) 00 41 317677611 / 00 41 796747394
சுகந்தினி (சுவிஸ்) (Home/Cell) 00 41 414971311 / 00 41 788204739
முரளிதரன் (ஆஸ்திரேலியா) 00 61 296130048

(53199)(7.6.3)

## டெங்கு பரவக்கூடிய சூழல்; 5 பேருக்கு எதிராக வழக்கு

கடந்த இரு தினங்களாகச் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட கட்டுப்பாட்டுச் செயற்றிட்டப் பரிசோதனைகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியதாக சுற்றாடலை வைத்திருந்ததாக ஐந்து பேருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள கைதடி நுணாவில் கிராம அலுவலர் பிரிவில் நடத்திய பரிசோதனையில் ஒருவருக்கும், மறுநாள் 10ஆம் திகதி சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள சாவகச்சேரி நகர், கோவிற்குடியிருப்பு, சாவகச்சேரி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட பரிசோதனை யில் நால்வருக்கும் எதிராக டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வகையில் குடியிருப்புப் பகுதியை வைத்திருந்த மைக்காக பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## மன்னார் மாவட்டசெயலகத்தின் 4 மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

மன்னார், ஒக் 14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மாவட்ட செயலகங்களை வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட செய லகத்தின் புதிய நான்கு மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி மஹிந்தவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 223 மில்லியன் ரூபா நிதியில் குறித்த கட்டடம் அமைக்கப் படவுள்ளது.

குறித்த அடிக்கல் நடும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக அரச நிர்வாக மற்றும் உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் டி.எஸ். செனவிரத்தின, கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன், அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தஸநாயக்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-56)

## யானைகளால் தினமும் அச்சத்துடன் வாழ்க்கை

### முத்துஐயன் கட்டு மக்கள் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஒக். 14

யானைகளால் நாம் தினமும் அச்சமடைந்து வருவதுடன் எம்மால் மேற்கொள்ளப்பட்ட பயிரினங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த எவரும் முன்வரவில்லை என முத்துஐயன் கட்டு ஜீவநகர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், எமக்கு பாதுகாப்பான நிரந்தர வீடு வழங்கப்படாமையால் சிறிய தற்காலிக வீடுகளில் அவையும் இன்றோ நாளையோ முறிந்து விழும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் இரவு வேளைகளில் காட்டு யானைகள் நடமாடுவதால் பீதியுடன் வாழ்கிறோம். எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற தென்னை மற்றும் ஏனைய வாழ்வாதார பயிர்களை அவை நாசம் செய்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தி நாம் நிம்மதியாக வாழ வழி சமைக்கவேண்டும். தினமும் துன்பப்படுகிறோம் - என்று கூறினர். (த-500)

## வவுனியாவில் புற்றுநோய் தடுப்பு மருத்துவ முகாம்




வவுனியா, ஒக் 14

'கர்ப்பப்பை வாயில் புற்றுநோயைத் தடுத்து வாழ்வில் வளம் பெறுவோம்' என்னும் தலைப்பில் இலவச மருத்துவ முகாம் கடந்த சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. சனத்தொகை சேவைகள் லங்கா, தேசிய புற்றுநோய் தடுப்புப் பணியகம், மாகாண சுகாதார அமைச்சு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை என்பவை கூட்டாக இணைந்து இதனை நடத்தின.

இந்த நிகழ்வில் சனத்தொகை சேவைகள் லங்காவின் இலங்கைக்கான பணிப்பாளர் வைத்தியர் அஜித் மென்டிஸ், மகரகம தேசிய புற்றுநோய் தடுப்புப் பணியகத்தைச் சேர்ந்த வைத்தியகலாநிதி றுவான்மாலி, வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் கு. அகிலேந்திரன், பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் மகேந்திரன், தாய் சேய் நல மருத்துவ அதிகாரி வைத்தியர் ஜெயதரன், பிராந்திய தொற்று நோய் தடுப்பதிகாரி வைத்தியர் யூட், சனத்தொகை சேவாலங்கா வைத்திய அதிகாரி வைத்தியர் சுபத்திராதேவி வரதராஜன், வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சண் அபேயவர்த்தன, சனத்தொகை சேவைகள் லங்காவின் மாவட்ட இணைப்பாளர் ஆர். அமலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-421)

## அச்சுவேலி கருங்காலிக்காடு காணி சுவீகரிப்பு நடவடிக்கை ஒத்திவைப்பு

அச்சுவேலி, ஒக் 14

இராணுவத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு அச்சுவேலி தெற்கு கருங்காலி காடு காணியைச் சுவீகரிப்பதற்காக நில அளவை செய்யும் நடவடிக்கை மேலிடத்து அறிவுறுத்தலுக்கு அமைய மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாகப் பிரதேச நில அளவைக் காரியாலத்தில் இருந்து அரச நில அளவையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் காணி உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சம இலக்க கடிதத்துக்கு அமைய வடக்கு மாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு அச்சுவேலி தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள கருங்காலிக் காடு என்னும் காணியை காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 456 ஆம் பிரிவின் கீழ் நில அளவை செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேலிடத்தில் இருந்து எனக்குக் கிடைத்த அறிவித்தலின் பிரகாரம் மேற்படி நில அளவை வேலைகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்கு கருங்காலி காடு என்ற தோம்புப் பெயர் கொண்ட காணியில் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ளது. இந்தக் காணியோடு சேர்த்து தனியார் 9 பேருக்குச் சொந்தமான காணி இராணுவத்தின் தேவைக்குச் சுவீகரிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டதோடு இந்தக் காணிகளை இரண்டு தடவைகள் நில அளவை செய்வதற்கு எடுத்த முயற்சியும் பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே திருநெல்வேலியில் உள்ள பிரதேச நில அளவையாளரினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நில அளவை செய்வது தொடர்பான நடவடிக்கை மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்ட போதும், பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய வளாகத்திலும் தனியார் காணியிலும் மேலதிகமாகக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் காணி உரிமை யாளர் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது. (த-11)

## பாகிஸ்தான் அரசின் உதவியுடன் மன்னாரில் 200 வீடுகள் அமைப்பு



மன்னார், ஒக் 14

பாகிஸ்தான் அரசின் நிதி உதவியுடன் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்புக் கிராமத்தில் 200 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா கடந்த சனிக்கிழமை காலை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் காசிம் குறைசி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஸ, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, மாகாண சபை உறுப்பினர்களான ஜெயதிலக்க, றிப்கான் பதியுதீன் மற்றும் பிரதேச செயலாளர்கள், கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த 200 வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெற்றதோடு புதுக்குடியிருப்பு முஸ்லிம் பாடசாலையில் விசேட கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது அமைச்சர் பஸில் ராஜபக்ஸ, பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் காசிம் குறைசி ஆகியோரால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டமைக்கான பத்திரங்கள் கையளிக்கப்பட்டன. (த-56)

## செம்மலையில் மீள்குடியேறியோர் அடிப்படை வசதிகளின்றித் தவிப்பு

முல்லைத்தீவு செம்மலை கிராமத்தில் மீள் குடியேறியுள்ள குடும்பங்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக தாம் எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருவதாக தெரித்துள்ளனர்.

முல்லைத்தீவு செம்மலை கிராமத்தில் கடந்த காலப் போர் காரணமாக மக்கள் ஐந்து தடவைகளுக்கு மேல் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களிலே தங்கியிருந்தனர். கடந்த 2010ஆம் ஆண்டு இப்பகுதியில் 326 குடும்பங்கள் மீள் குடியேறி வாழ்ந்து வருகின்றன. எனினும் இந்த மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை. போரினால் 58 வீடு கள் முழுமையாகவும், 268 வீடுகள் பகுதியளவிலும் சேத மடைந்துள்ளன.

இதில் யு.என் ஹபிற்றற் நிறுவனத்தினால் ஆறு வீடுகளும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் 251 வீடுகளும் புனரமைக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 11 வீடுகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை. அத்துடன் 31 குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஊடாகத் தற்காலிகவீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் கிணறுகள் இன்றி 45 குடும்பங்களும், மலசல கூட வசதி இன்றி 30 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன. இதை விட இந்தக் கிராமத்தில் உள்ள 20க்கும் மேற்பட்ட வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன. இவ்வாறு போதிய அடிப்படைவசதிகள் இன்றி இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-55)

## வெள்ளைப் பிரம்பு தின ஊர்வலம் கிளிநொச்சி நகரில் நாளை காலை

கிளிநொச்சி, ஒக் 14

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் வெள்ளைப் பிரம்பு தின ஊர்வலமும் தின விழாவும் கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

சங்கத் தலைவர் ச.பே. ராஜ் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பரோட் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை அல்பிரட் அருள்ராஜ், தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாண தலைவர் கே. விஜயராஜசிங்கம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல், கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் மு. இரவீந்திரன் ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி ரேணுகா ஜீவரத்தினம், குடும்ப புனர்வாழ்வு நிறுவன வடமாகாண இணைப்பாளர் வி. பிரேம்குமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

சங்கப் பிரதிநிதிகள் விருந் தினர்கள் ஆகியோர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலிருந்து விழிப்புணர்வுப் பேரணியாக விழா மண்டபம் வரை செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# வடக்கில் பட்டம் பெறும் மருத்துவர்கள் இங்கு விரும்பி சேவையாற்றவேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் சிவமோகன் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.14

வடமாகாணத்தில் மருத்துவக் கல்விக்குத் தெரிவு செய்யப் பட்டுப் பட்டம் பெற்ற மருத்து வர்கள் இங்கு வேலை செய்ய விரும்பி வரவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப் பினரும் சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழு உறுப்பி னருமான வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்.

கனகராயன்குளத்தில் நடை பெற்ற இலவச மருத்துவ முகா மில் வைத்து கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறிய தாவது:

எமது வடமாகாண மருத்துவ பீட மாணவர்கள் தங்களது உள்ளகப் பயிற்சிகளை முடித்த பின்னர் தென்பகுதி வைத்திய சாலைகளைத் தெரிவு செய் வதனால் எமது பிரதேசத்தில் சிங்கள மொழி பேசும் மருத் துவர்கள் பெருந்தொகை யாகப் பணிக்கமர்த்தப்படு கின்றனர்.

எமது மக்கள் சிங்கள மொழி யறிவு இல்லாததனால் பெரும் துயர்களைச் சந்திக்கின்றனர்.

மேலும், பெரும்பாலான சிங் கள மொழி பேசும் மருத்துவர் கள் சேவை மனப்பாங்கு அற்றுச் செயற்படுவதாகவும் வட பகுதிப் பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இதற்குத் தீர்வாக எமது இளைய மருத்துவர் சமுதா யம் எமது மக்களுக்காகச் சேவை செய்ய முன்வர வேண் டும்-என்றார்.




மேற்படி மருத்துவ முகாம் யாழ். மருத்துவர் சங்கத்தின் முழுப் பங்களிப்புடன் வைத் திய கலாநிதி சி.சிவமோக னின் ஒழுங்குபடுத்தலுடன் நடைபெற்றது.

இதில் 150க்கும் மேற்பட்ட நோயாளிகள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

இந்த மருத்துவ முகாமில் வைத்திய கலாநிதி. நாகேந் திரா (விசேட வைத்திய நிபுணர், வைத்திய கலாநிதி. வல்லிபுரநாதன் முரளி (சமு தாய மருத்துவ நிபுணர், தலைவர் மருத்துவ சங் கம்-யாழ்ப்பாணம்), வைத் திய கலாநிதி சுகந்தன் (கிளி நொச்சி மாவட்ட பொது வைத் தியசாலை), வைத்திய கலா நிதி. விஷ்ணு சிவபாதம் (யாழ். போதனா வைத்திய சாலை) ஆகியோர் பங்குபற்றி னர். (த)



## 28 போத்தல் கசிப்புடன் பிடிபட்ட மோ. சைக்கிள்

கிளிநொச்சி, ஒக். 14

கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராமத்தில் 28 போத்தல் கசிப்பை மோட்டார் சைக்கி ளில் எடுத்துச் சென்ற நபர் ஒரு வரை அக்கராயன் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் கசிப்பை எடுத்துச் செல்லப் பயன்படுத்திய மோட் டார் சைக்கிளையும் பொலி ஸார் கைப்பற்றி உள்ளனர்.

அக்கராயன் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையிலான பொலி ஸாரே கசிப்பு வைத்திருந்த நபரைக் கைது செய்துள்ள னர். (த-18)

## வியாகுல மாதா ஆலய கட்டட வேலைக்கு நிதி

மன்னார், ஒக். 14

மாந்தை மேற்கு பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட அடம் பன் தூய வியாகுல மாதா ஆலயத்தின் கட்டட நிதிக்கு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவி ருத்தி அமைச்சர் பா.டெனீஸ் வரன் குறித்தொதுக்கப்பட்ட பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒருதொகைநிதியைகடந்தவெள் ளிக்கிழமை வழங்கினார்.

அந்தக் கிராம மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அடம்பன் பங்குத்தந்தை, அருட்தந்தை நியூட்டனிடம் அமைச்சர் குறித்த நிதியை வழங்கினார்.

இதன்போது மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலா ளர், மாவட்டப் பொறியியலா ளர், வட மாகாண உள்ளு ராட்சி அமைச்சின் செயலா ளர் எஸ். திருவாகரன் ஆகி யோர் கலந்து கொண்டனர். (த-56)



*கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார். அருகில் இலங்கைக்கான அமெ ரிக்க துணைத் தூதுவர் அன்றூ காணப்படுகின்றார். (த-18)*

## பாலியாற்று விவசாயிகளுக்கு இலவச விதை நெல் வழங்கல்

கிளிநொச்சி, ஒக்.14

வடக்கு மாகாண சபையின் ஒரு வருட நிறைவையொட்டி மன்னார் பாலியாற்று விவ சாயிகளுக்கு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங் கரநேசன் இலவசமாக விதை நெல்லை வழங்கிவைத்துள் ளார்.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை வெள்ளாங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலை மையில் நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஏறத் தாழ 20 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகி றது. எனினும் இந்த வருடம் நிலவிய கடும் வறட்சி காரண மாக நெல் உற்பத்தி வெகுவா கப் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தில் விதைநெல் லுக்குக் கடுமையான தட்டுப் பாடு நிலவிவருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு, மானாவாரிச் செய்கையாகப் புழுதி விதைப்பை மேற் கொண்டு வரும் பாலியாற்று விவசாயிகளுக்கு வடமாகாண சபையின் ஓராண்டு நிறைவை யொட்டி வடமாகாண விவ சாய அமைச்சின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து 3.5 லட்சம் ரூபா பெறுமதியில் 250 புசல் பி.ஜி 358 ரக விதைநெல் விநியோகிக்கப்பட்டுள்ளது.



விதைநெல் வழங்கி வைக்கப் பட்டதன் பின்னர் பாலியாற் றின் உழுது பண்படுத்தப்பட்ட வயல் நிலத்தில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சம்பிரதாய பூர்வமாகப் புழுதி விதைப்பையும் ஆரம்பித்து வைத்துள்ளார். (த)

## இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத் தேருக்குத் தீ வைப்பு



வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் உள்ள தேரை நேற்றுமுன் தினம் அதிகாலை இனந் தெரியாதோர் தீ மூட்டி எரித் துள்ளனர்.

அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை வழமை போன்று பூசை நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் பூசைக்கு வந்த அடியவர்கள் தேர் நிறுத்தி வைக்கப்பட்ட இடம் புகை மண்டலமாகக் காட்சிய ளிப்பதைக் கண்டு அங்கு சென்ற போது தேருக்குத் தீ மூட்டப்பட் டிருந்தமை தெரியவந்தது.

உடனடியாகத் தண்ணீர் அள்ளி ஊற்றித் தீ கட்டுப்படுத் தப்பட்டதுடன், வவுனியா பொலி ஸாருக்கும் தகவல் கொடுக்கப் பட்டது. இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் தேர் எரிக் கப்பட்டமை தொடர்பாக விசார ணைகளை மேற்கொண்ட னர். (த-402)

## நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் சிரமத்தில்

வவுனியா, ஒக். 14

வவுனியா தரணிக்குளம் பாடசாலையில் நாடக மும் அரங்கியலும் பாடத்துக்கு ஆசிரியர் இல் லாமையினால் 2015 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைஎழுதவுள்ள மாணவர்கள் உட் பட பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா வடக்குக் கல்வி வலயத்துக்கு உட் பட்ட தரணிக்குளம் பாடசாலையில் கடந்த வரு டங்களில் நாடகமும் அரங்கியலும் பாடம் கற்பித்த ஆசிரியை இடமாற்றம் பெற்றுச் சென்ற பின்பு அந்த வெற்றிடத்துக்கு இன்ன மும் நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர் நியமிக்கப்படவில்லை.

மேலும் 2013 இல் ஜி.சீ.ஈ சாதாரணர தரப் பரீட் சையில் சித்தி பெற்ற பல மாணவர்கள் தமது விருப்பத்துக்குரிய பாடமாகிய நாடகமும் அரங்கியலும் பாடத்தை ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கற்க முடியாமல் சிரமப்படுகின்றனர்.

இந்தப் பாடத்தை இந்தப் பாடசாலையில் கற்க வசதியில்லை என்ற காரணத்தால் வேறு பாடசாலைக்கு மாறிச் சென்று கல்வி கற்கவும் பாடசாலை நிர்வாகம் ஒத்துழைக்கவில்லை எனப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர்.


இந்நிலையில் அடுத்த ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் தமக்குரிய பாடப் பரப்பை எங்கு கற்பது, தவணைப் பரீட்சைகள்

2013 இல் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட் சையில் சித்தி பெற்றுத் தமது விருப் பத்துக்குரிய பாடமாகிய நாடகமும் அரங்கியலும் பாடத்தை ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கல்வி கற்க முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர்.

நடத்தப்பட்டால் அதனை திருத்துவது யார்? போன்ற பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வடக்கு மாகாண கல்வியமைச்சின் உதவியுடன் நாடக மும் அரங்கியலும் பாடஆசிரியர் நியமிக்கப் படும்வரை இந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய் யும். விரைவில் ஒருவரை நியமிக்க கல்வியமைச்சு முன்வரவேண்டுமென அவர் தெரிவித்தார்.

நாடகமும் அரங்கியலும் பாடத்தை விரும்பிக் கற்கப் பல மாணவர்கள் தயாராக உள்ளனர். ஆனால் ஆசிரியர் வெற்றிடங்கள் பாடசாலை களில் நிரப்பப்படாமையினால் அந்த அபி லாசை நிறைவேறவில்லை. இதனால் வவு னியா மாவட்டத்தில் பல பாடசாலை மாண வர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (த-402)




நன்றி : டெய்லி மிரர்

## அரசைக் கவிழ்பதற்கு முயலவில்லை மு.கா.

### அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.14

அரசைக் கவிழ்க்கும் திட்டம் எதுவும் கிடையாது என்று தெரிவித்துள்ளது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அண்மையில் நடத்தப்பட்ட சந்திப்பானது அரசைக் கவிழ்க்கும் நோக்கிலானது அல்ல என்றும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஏனைய அரசியல் கட்சிகளுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுகளின் ஓர் கட்டமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகருதப்பட வேண்டும்என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசைக் கவிழ்க்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முயற்சித்து வருகின்றது என்று சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. ஐக்கிய தேசியக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பு நடத்தப்பட உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இடதுசாரி கட்சிகளுடன் விரைவில் சந்திப்பு நடத்தப்பட உள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படவிருந்து சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்ட அவர், நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமானதன் பின்னர் மீளவும் பேச்சுகள் ஆரம்பமாகவுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## சிங்களவரும் தமிழ் கற்க வேண்டும்





கொழும்பு, ஒக்.14

தமிழர்கள் சிங்களம் கற்றுள்ளது போன்று சிங்கள சமூகத்தவரும் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஊடக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல.

கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தமிழர்கள் சிலர் நன்றாக சிங்களம் பேசுகின்றனர். ஆனால் சிங்களவர்களால் அவர்கள் போன்று தமிழ் பேச முடியவில்லை. சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் தேசிய மொழிகள். எனவே மக்கள் இரு மொழிகளையும் புரிந்து கொள்ளவேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பொதுமக்களின் ஆதரவை இழந்து வருகின்றது அரசு

### அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.14

அரசு தற்போது பொதுமக்களின் ஆதரவை இழந்து, கவிழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் டியூ. குணசேகர.

வார இறுதி சிங்கள மொழிப் பத்திரிகைக்கு அளித்துள்ள நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"அரசு தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது. மஹிந்த சிந்தனை மூலம் வாக்குறுதியளிக்கப்பட்ட விடயங்கள் இது வரை முழுமை பெறவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஒழிப்பு தொடர்பான வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

போர் முடிவுற்ற பின்னர் சுயாதீன ஆணைக்குழுக்களை ரத்துச் செய்யும் 18ஆவது சட்டதிருத்தத்தை அரசு கொண்டு வந்தது.

நாங்களும் நிபந்தனையுடன் அதற்கு ஆதரவளித்தோம். ஆனால் இப்போது சுயாதீன ஆணைக்குழுக்கள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டுமென்று பொதுமக்கள் குரல் கொடுக்கின்றனர். இவை போன்ற விடயங்களால் நாளுக்கு நாள் அரசுக்கு மீதான அதிருப்தி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது தெரிய வருகின்றது.

அரசுக்கு இன்னும் இரண்டு வருட காலம் அதிகாரத்தில் இருக்க முடியும். எனவே இந்த இரண்டு வருட அவகாசத்தினுள் எமது வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டு தேர்தலுக்குச் செல்லும்போது ஓரளவுக்கு வெற்றி வாய்ப்பை எதிர்பார்க்க முடியும். அதன் காரணமாக தற்போது ஆளுங் கட்சிக்குள்ளேயே பலரும் திடீர் தேர்தல் தொடர்பாக எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## அலரி மாளிகையில் அவசர கூட்டம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக அலரி மாளிகையில் நேற்று பிற்பகலில் அவசர கூட்டமொன்று நடைபெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது என்றும், ஆளுந் தரப்பு முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் முக்கிய கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆளுந்தரப்பு பரப்புரைகளை மேற்கொள்ளும்படி அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ற)

CMYK

## ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் சிலருக்கு ஆபத்து நிச்சயம்

### எச்சரிக்கின்றார் ரங்கே பண்டார

கொழும்பு, ஒக்.14

ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் புத்தளம் - ஆனமடுவ பொலிஸார் உள்ளிட்ட சிலருக்கு நிச்சயமாக ஆபத்து என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஆனமடுவை பிரதேச சபைத் தலைவர் மற்றும் அங்குள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் கண்டிப்பாக எங்களது ஆட்சியில் அடிவாங்குவார்கள்.

ருவெலகஸ்வெவ பிரதேச சபைத் தலைவர் அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றார். நீதிமன்ற உத்தரவுகளை காற்றில் பறக்கவிடுகின்றார்.

பொதுமக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். பொலிஸாரையும் மதிப்பதில்லை.

பொதுமக்கள் இவை அனைத்தையும் பொறுத்துக் கொண்டு, சந்தர்ப்பம் வரும் வரை காத்திருக்கின்றார்கள். நமது நாட்டின் சட்டப்படி 20 ஆண்டுகள் கழிந்தாலும் குற்றம் செய்தவருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க முடியும். அதற்குள் இந்த அரசை நாங்கள் வீட்டுக்கு அனுப்பி விடுவோம்.

அதன்பின் தவறு செய்த கருவெலகஸ்வெவ பிரதேச சபைத் தலைவர் மாத்திரமன்றி, அவருக்கு உடந்தையாக இருந்த பொலிஸாரும் பொதுமக்களிடம் அடி வாங்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தலுக்கு முன்னதாக பிரதமர் பதவி மாற்றம்

கொழும்பு, ஒக்.14

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பிரதமர் பதவியில் மாற்றம் செய்யப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆண்டு முதல் பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் தேர்தலுக்கு முன்னதாக பிரதமர் பதவியில் மாற்றங்களைச் செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கும் தரப்பினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பிரதமர் பதவி பொறுப்பு வாய்ந்த செயற் திறனான ஓர் அமைச்சரிடம் ஒப்படைக்கப்படுவது அவசியமாகின்றது. அவர்கள் கூறியுள்ளதுடன், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை பிரதமராக நியமிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய பிரதமர் டி.எம். ஜயரட்ன பதவி இழப்பதனால் அவரது மகனுக்கு பதவியொன்றை வழங்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதற்கு சஜித்தே பொருத்தமானவர்

### ஐ.தே.க. உறுப்பினர் மைத்திரி குணரட்ண

கொழும்பு, ஒக்.14

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுவேட்பாளராகக் களமிறங்க சஜித் பிரேமதாஸவே என்று தெரிவித்துள்ள ஐ.தே. கட்சியின் முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ண, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் யார் என்பதை கட்சியின் செயற்குழு தீர்மானித்தால், அந்த வேட்பாளருக்கு தாம் ஆதரவு வழங்க போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிறுத்தப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி



**ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே கட்சியினரின் எதிர்பார்ப்பு.**

வரும் நிலையில், மைத்திரி குணரட்ன இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.


"ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே கட்சியினரின் எதிர்பார்ப்பு. அதனால் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# குழந்தை நட்சத்திரம் குமரி நட்சத்திரமாக



சில்லுன்னு ஒரு காதல்"படத்தில் சூர்யா-ஜோதிகாவின் மகளாக நடித்த குழந்தையை ஞாபகம் இருக்கிறதா? இந்தப் படத்தில் சுட்டிப் பொண்ணாக நடித்து அனைவரினதும் பாராட்டைப் பெற்றவர் ஸ்ரேயா சர்மா.
இவர் இப்போது கதாநாயகியாக மாறிவிட்டார். தெலுங்கில், காயக்கடு என்ற படத்தில் அலி ரெஸா ஜோடியாக நடித்து வருகிறார். இந்தப் படத்தின் இசைவெளியீட்டு விழா அண்மையில் நடந்தது. அதில் அழகுப் பதுமையாக தோன்றினார் ஸ்ரேயா சர்மா. மேலும் காயக்கடு படத்தின் ஒளிப்படங்களும் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.
தமிழில் சில்லுன்னு ஒரு காதல்,டிஎந்திரன், நீ தானே என் பொன் வசந்தம் படங்களிலும் நடித்துள்ளார். தமிழ் தவிர்த்து தெலுங்கு, ஹிந்தி மொழி படங்களிலும், தொலைக்காட்சி சின்னத்திரையிலும், ஏராளமான விளம்பர படங்களிலும் நடித்துள்ளார்.
2006 இல், சில்லுன்னு ஒரு காதல் படத்தில் நடிக்கும் போது ஸ்ரேயா சர்மாவுக்கு வயது 9, தற்போது 17 வயதில் பருவமங்கையாய் கதாநாயகியாக மாறியிருக்கிறார் ஸ்ரேயா சர்மா. மேலும் இவர் குழந்தை நட்சத்திரமாக நடித்தபோது தேசிய விருதும் வாங்கியிருக்கிறார். நல்ல கதைகள் அமையும் பட்சத்தில் தமிழிலும் நடிப்பேன் என்று கூறுகிறார் ஸ்ரேயா சர்மா.

# பளபளவென மின்னும் ஈபிள் கோபுரம்



பிரான்ஸில் உள்ள ஈபிள் கோபுரம் தற்போது கண்ணாடித் தரை அமைக்கப்பட்டு புது பொலிவுடன் திறக்கப்பட்டுள்ளது.
பிரான்ஸின் தலைநகர் பரிஸில் புகழ்பெற்ற 325 அடி உயரம் கொண்ட ஈபிள் கோபுரத்தில் புதிதாக பதிக்கப்பட்டுள்ள கண்ணாடி தரையின் மூலம் கீழே உள்ள 57 சதுர அடி பரப்பளவைக் கண்டு ரசிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.
இந்தப் புது முயற்சி பல மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
30 மில்லியன் யூரோக்கள் செலவில் இரண்டு ஆண்டுகளாக கட்டப்பட்டுள்ள இந்த கண்ணாடித் தரையில் கடைகள், ஹோட்டல், மற்றும் அருங்காட்சியகம் அனைத்தும் அமைந்துள்ளன.
மேலும், 125 வருட பழைமை வாய்ந்த இந்தக் கோபுரம் கடந்த 2013 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளால் சுமார் 73 மில்லியன் யூரோக்கள் வருமானத்தைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# 40 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான ஓவியம்!

உலகின் மிக பழைமையான ஓவியங்கள் சிலவற்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்தோனேஷியாவில் கண்டுபிடித்துள்ளனர். இந்த ஓவியங்கள் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை என்பதுதான் அதிர்ச்சி மிகுந்த செய்தி.
இந்தோனேஷியாவில் உள்ள சுலாவேசி என்ற இடத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கு உள்ள குகையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தியதில் பழைமையான ஓவியங்கள் அந்தக் குகையில் இருந்ததைக் கண்டுபிடித்தனர். அவற்றின் வயதை நவீன தொழில்நுட்பம் மூலம் சோதனை செய்து பார்த்ததில் மிகவும் அதிர்ச்சிகரமான தகவல்கள் ஆய்வாளர்களுக்குக் கிடைத்துள்ளது.
40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் நாகரிகமாக வாழ்ந்து வந்ததையே இந்த ஓவியங்கள் நிரூபிக்கின்றன என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
ஆஸ்திரேலிய மற்றும் இந்தோனேஷியா ஆராய்ச்சியாளர்கள் இணைந்து கண்டுபிடித்த இந்த குகை ஓவியங்கள் மிகவும் கவனத்துடன் கையாளப்பட்டு, அவற்றை தற்போது பாதுகாத்து வருவதாகவும், இந்த ஓவியங்களில் இருந்து பழங்காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் நாகரிகங்களை தெரிந்து கொள்ளலாம் என்றும்-ஆராய்ச்சியாளர்கள் கூறினர்.
ஆனாலும், வயதில் இதற்கு முந்தைய ஓவியங்களும் உலகில் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு ஸ்பெயின் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட ஓவியங்கள் இதைவிட பழைமையானவை. ஸ்பெயின் ஓவியங்கள் 40 ஆயிரத்து 800 வருடங்கள் பழைமையானவை என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்த ஓவியங்களில் இருந்து பழங் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் நாகரிகங்களை தெரிந்து கொள்ளலாம்**




# எரிமலை வெடிக்கும் போது....

எரிமலை வெடித்துக் குமுறும்போது யாராவது பக்கத்தில் நிற்பார்களா ?
எரிமலை வெடித்துக் கக்கி நீண்ட நேரத்துக்குப் பின்னரே யாராக இருந் தாலும் செல்வார்கள். ஆனால் ஹவாய் தீவுகளுக்கு சுற்றுலா சென்ற ஒருவர் எரிமலை வெடித்துக் குமுறும் போது அதன் அருகில் சென்றிருக்கின்றார்.
எரிமலை வெடித்து, தீப்பிழம்புகள் வெளிக்கிளம்பும். தீப்பிழம்புகள் இறுதியில் ஆறாக ஓடும் போது அதன் அருகில் சென்று சுற்றுலாப் பயணி ஒருவர் ஒளிப்படம் எடுத்திருக்கின்றார். அதன் அருகில் இருந்து ஒளிப்படம் மாத்திரம் எடுத்தால் பரவாயில்லை. அந்த தீப்பிழம்பை பெரிய கரண்டியால் அள்ளியிருக்கின்றார்.
இதை அவருடன் சென்றவர்கள் ஒளிப்படம் எடுத்துள்ளனர். அத்துடன் அதன் வீடியோவையும் யூடியூப்பில் வெளியிட்டுள்ளனர்.



# ரிலாக்ஸா வாசியுங்க

ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தார். மேசை மீது இருந்த கண்ணாடி குவளையை எடுத்து தூக்கிக் காட்டினார்.
இது எவ்வளவு நிறை இருக்கும்?
100 கிராம், 50 கிராம் என்று மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிறையைச் சொன்னார்கள்.
இதன் சரியான நிறை எனக்கும் தெரியாது. ஆனால் என்னுடைய கேள்வி அது வல்ல. ஆசிரியர் தொடர்ந்தார். இதை அப்படியே நான் கையில் பிடித்து வைத்திருந்தால் என்ன ஆகும்?
ஒன்றுமே நடக்காது.
சரி, ஆனால் ஒரு மணி நேரம் இவ்வாறே பிடித்து வைத்திருந்தால் ?,
உங்கள் கை வலிக்கும் என்றனர் மாணவர்கள்.
ஒரு நாள் முழுவதும் இப்படியே வைத்திருந்தால்,
உங்கள் கை அப்படியே மரத்து விடும் என்று மாணவர்கள் சொன்னார்கள். மிகச்சரி, ஒரு மணி நேரத்தில் என் கை வலிப்பதற்கும், ஒரு நாளில் மரத்துப் போகிற அளவுக்கு மாறுவதற்கும் இந்தக் குவளையோட நிறை கூடிக் கொண்டே போகுமா என்ன? மாணவர்கள் வழிகள் பிதுங்கியவாறு ஆசிரியரையே பார்த்துக் கொண்டிருந்தனர். எனக்கு கை வலிக்காமல், மரத்துடாமல் இருக்க வேண்டும் என்றால், நான் என்ன செய்ய வேண்டும் ?
குவளையை உடனே கீழே வைத்து விட வேண்டும் என்றனர் மாணவர்கள். சரியாகச் சொன்னீர்கள், இந்தக் குவளைதான் பிரச்சினை. ஒரு பிரச்சினை எமக்கு வந்தால், அதை அப்ப டியே மண்டைக்குள் ஏற்றி, ஒரு மணி நேரம் வைத் திருந்தால் வலிக்க ஆரம்பிக்கும். ஒரு நாள் முழுக்க அப்படியே வைத்திருந்தால் மூளை செயலிழந்து மரத்துடும். அதனாலேயே உங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் தூக்கி ஒரு ஓரமா வைத்து விடுங்கள். அதுவே சரியாகிவிடும்.



# ஹற்றன் நஷனல் வங்கியின் ஏ.ரி.எம்மில் பண வைப்பு வசதி



ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப் பாணம் மெட்ரோ கிளையின் தன்னி யக்கப் பண இயந்திரம் தற்போது பணவைப்பு வசதியை நடைமுறைப் படுத்தி வருகிறது.

புதிய ஏ.ரி.எம் இயந்திரம் ஏ.ரி.எம் அட்டை இன்றி எந்தவொரு ஹற்றன் நஷனல் வங்கிக் கணக்குக்கும் பண வைப்பை மேற்கொள்ளும் வசதி யைக் கொண்டுள்ளதுடன் 100 ரூபா விற்கு மேற்பட்ட நாணயத்தாள்களை இனங் கண்டு பெறுமதியைக் கணிப்பிட்டு ஒன்லைன் முறையில் உடனடியாகக் கணக்குக்கு வரவு வைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய ஏ.ரி.எம் இயந்திரம் ஒரே தடவையில் 50 நாணயத்தாள்களை வைப்புக்கு ஏற்கும் திறனைக் கொண்டிருப்பதுடன் கணக்குக்குப் பணவைப்பு மட்டுமின்றி மின்சாரம், தொலைபேசிக் கட்டண செலுத்துகையுடன் கைத்தொலைபேசி களுக்கான மீள்நிரப்புச் (ரீலோட்) செயற்பாடுகளை மேற் கொள்ளும் வசதியையும் கொண்டுள்ளது.

இந்த நவீன தொழில்நுட்ப வசதியுடைய ஏ.ரி.எம் இயந்திரம் வருடத்தின் 365 நாள் களும் 24 மணி நேரமும் வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வசதியை வாடிக்கையாளர்களுக்கு அளிக்கும் எனக் கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன் தெரிவித்தார். (த)



2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் நடவடிக்கையின்போது முழுமையாக அழிவுற்ற தமது வாகனத்துக்கான இழப்பீட்டை சிவனொளிபாதம் என்பவர் கோரி யிருந்தார். அந்த வாகனத்தின் இழப்பீட்டுத் தொகையான 15 லட்சம் ரூபாவை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முல்லைத்தீவுக் கிளை முகாமை யாளர் அவருக்கு வழங்கினார். (த)

# இந்தியாவில் உயர் கல்வி தொடர்பான செயலமர்வு யாழ்.மத்திய கல்லூரியில்



இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தியாவில் உயர் கல்வி கற்பது தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் சந்தேகங்களுக்கும் பதில்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள இந்திய துணைத் தூத ரகத்தின் ஏற்பாட்டில் யாழ் பாணம் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 'இந்தியாவில் மாணவர்களுக்கான உயர் கல்வி' தொடர்பான செயல மர்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.டி. தெட்சணாமூர்த்தி, துணைத் தூர்தரகப் பிரதான பொது முகா மையாளர் ஐ.எஸ். சிந்து, கலா சார ஆலோசகர் கே.எஸ். மகவன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் எம்.சின்னத்தம்பி, வடக்கு மாகா ணக் கல்வி அமைச்சின் பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.ஞான சுந்தரம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.எழில்வேந்தன் ஆகியோர் மங்கல விளக் கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தியாவில் உயர் கல்வி கற்பது தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டதுடன் மாணவகளின் சந்தேகங்களுக்கும் பதில்கள் வழங்கப்பட்டன.

முதல் தடவையாக யாழ்ப் பாணத்தில் இத்தகைய செயலமர்வு இடம் பெற்றமையால் மாணவர்கள் அதிக பயன் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (த-86)

# ஊக்குவிப்புகளை முன்னெடுக்கும் க்லோகாட்

க்லோகாட் வர்த்தகநாமமானது, பற்சிதைவைத் தவிர்க்கும் முகமாக இலங்கை குடும்பங்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அண்மையில் பற்சிதைவை தவிர்க்கும் வகையிலான தேசிய மட்ட விழிப்புணர்வு செயற்திட்டத்தை அறிமுகம் செய்திருந்தது.

ஹேமாஸ் மெனுஃபக்சரிங் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி பற்பசை வர்த்தக நாமமான க்லோகாட், அதன் 'துலக்குங்கள் - உறுதிமொழிஎடுங்கள்-வெல்லுங்கள்' என்றதலைப்பிலான வாடிக்கையாளர் ஊக்குவிப்பு திட்டத்தினூடாக வாய்ச்சுகாதாரம் மற்றும் பற்சிதை விலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்து வருகிறது.

இந்த செயற்திட்டத்தின் மூலம் சிறந்த வாய்ச் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு பொது மக்களை ஊக்குவித்து வாய்ச்சுகாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்திகளை மேற் கொண்டு வருகிறது.

இலங்கைகுடும்பங்களுடன் இணைந்து செயற்பட்டு பலரது வாழ்வை சென்றடைய நாம் எதிர்பார்த்துள்ளோம். ப்ளோரைட் அடங்கிய பற்பசைகொண்டு தினசரி பல் துலக்குவதால் ஏற்படும் அனுகூலங்கள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் க்லோகாட் பயணிக்கவுள்ளது.

இதனூடாக கணிசமான அளவு பற்சிதைவு உருவாதல் குறைக்கப்படுவதுடன், ஒட்டுமொத்த வாய்ச் சுகாதாரம் மேம்படுத்தப்படும்' என ஹேமாஸ் மெனுஃபக்சரிங் (பிரைவேற்) லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரோய் ஜோசப் தெரிவித்தார்.

'துலக்குங்கள் — உறுதிமொழி எடுங்கள் — வெல்லுங்கள்' எனும் வாடிக்கையாளர் ஊக்குவிப்பு திட்டத்தினூடாக வாய்ச்சுகாதாரம் மற்றும் பற்சிதைவிலிருந்து பாதுகாத்து வருகிறது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய மட்ட செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக, க்லோகாட் குழுவினர் இது வரை இலங்கையில் 65 இடங்களுக்கு சென்று 13,536 நுகர்வோரிடமிருந்து சிறந்த வாய்ச்சுகாதார நடைமுறைகளை கடைபிடிப்பதற்கான உறுதிமொழியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

குடும்பங்கள், விசேடமாக குழந்தைகள் மத்தியில் பற்சிதைவு ஏற்படுவதைக் குறைத்தல் மற்றும் பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கையை உருவாக்கும் நோக்கில் இக்குழுவினர் எதிர்வரும் வாரங்களில் நாடுமுழுவதுமுள்ள 126 இடங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

'பற்சிதைவு என்பது மிகவும் பொதுவான, கட்டுப்படுத்தக்கூடிய, ஆனால் விசேடமாக குழந்தைகள் மத்தியில் வலியை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகும்.

விழிப்புணர்வு, நடைமுறைகள் மற்றும் சிறந்த வாய்ச்சுகாதார திறன்கள் மேம் படுத்தலின் ஊடாக, நேர்மறை யான மாற்றம் மற்றும் நேர்மறையான வாய்ச்சுகாதார முயற்சிகளை ஊக்குவிக்கும் எமது அர்ப் பணிப்பை தொடருவோம்' என ஜோசப் தெரிவித்தார்.

கராம்பு எண்ணெய் மற்றும் விஞ்ஞான ரீதியில் பரிசோதிக்கப்பட்ட க்லோகாட், உள்நாட்டு நுகர்வோரின் தேவைகளை நன்குணர்ந்துள்ளது. பற்சிதைவைத் தடுக்கும் தேசிய மட்ட செயற்திட்டம் ஊடாக, பற்சிதைவைத் தடுத்தல் மற்றும் வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தினசரி காலை மற்றும் இரவில் பல் துலக்குவதன் முக்கியத்துவத்தை, குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர் மத்தியில் ஊக்குவிப்பதே இந்த வர்த்தக நாமத்தின் குறிக்கோளாக அமைந்துள்ளது.

இந்தச் செயற்திட்டமானது, தனது குடும்பத்தில் பற்சிதைவைத் தடுப்பதாக உறுதிமொழியை எடுக்கும் நுகர்வோருக்கு வெகுமதிகளையும் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

பரிசிழுப்பின் ஊடாக ஒவ்வொரு மாதமும் ஒரு வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு 1 மில்லியன் ரூபா பெறுமதியான நிலையான வைப்பு வெகுமதியாக வழங்கப்படும். இது மூன்று மாதங்களுக்கு தொடரவுள்ளது.

மேலும் மடிக்கணினிகள், குளிர் சாதனப் பெட்டிகள், மவுண்டேயின் சைக்கிள்கள், பைகள் மற்றும் கைக் கடிகாரங்கள் போன்றனவும் பரிசில்களாக வழங்கப்படவுள்ளன. (த)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு மாகாணசபையிடம் அரசு எதிர்பார்க்கும் ஒத்துழைப்பு

வைக்கோல் பட்டடை நாய் என்பதன் பொருள், தானும் பயன் பெறாமல் பிறருக்கும் பயன்படாமல் போகச் செய்வதைக் குறிக்கும். டோக் இன் த மேஞ்சர் என்று ஆங்கிலத்தில் உள்ள இச் சொற்றொடரை சிங்கள மொழியில் கவிதை நடையில் பல்லா பிதுரு கன்னெத்னே கன கொனாட்ட தென்னெத்னே என்பார்கள். இதன் பொருள் நாய் வைக்கோலைத் தின்பதுமில்லை தின்னுகின்ற மாட்டுக்கும் விட்டுக்கொடுப்பதில்லை என்பதாம். இதைத்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் குறிப்பிட்டு வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளைக் கண்டித்திருக்கிறார். வடக்கில் மில்லியன் கணக்கில் பணத்தை ஒதுக்கி அரசு அபிவிருத்திகளை முன்னெடுக்கின்றது. ஆனால் வடக்கு மாகாண சபையினர் எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புத்தர வைக்கோல் பட்டடை நாய் போல் செயற்பட்டு மறுத்துவருகிறார்கள் என்பது ஜனாதிபதியின் குற்றச்சாட்டு;

அரசு சகல அதிகாரங்களையும் தன்வசம் வைத்துக்கொண்டு எலும்புத்துண்டுகளை நாய்க்கு எறிவது போல் ஒரு சிலவற்றை வழங்கிவிட்டு ஒத்துழைக்கவில்லையென்ற வாய்ப்பாட்டை ஒப்புவித்துக் கொண்டிருப்பதாகவே வடமாகாணசபை ஆளும் தரப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறி வருகிறார்கள்.

இதற்கு நல்ல உதாரணமாக சமகாலத்தில் வடக்கு மாகாணசபைக்கும், அரசின் சகல அதிகாரங்களையும் வடக்கில் கையாளும் ஆளுநருக்கும் இடையில் நடைபெற்றுவந்த கருத்து மோதல்களும் ஆளுநரின் தடைவிதிப்புக்களும் எடுத்துக்காட்டுவனவாக இருந்தன.

பத்திரிகைச் செய்திகளின் படி. வடக்கின் அபிவிருத்திக்கென அரசு வாரிவழங்குவதாக ஜனாதிபதி தெரிவிக்கவில்லை. அரசு மில்லியன் கணக்கில் ஒதுக்கி செயற்பட்டு வருவதாகவே கூறியுள்ளார். அதற்குத்தான் வடக்கு மாகாண அரசின் ஒத்துழைப்பு இல்லை என்பது அவர் வாதம். அத்துடன் வழங்கப்பட்ட நிதிகளும் அவர்களால் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்கிறார். அதையேதான் இவர்களும் கூறுகிறார்கள். தங்களின் முறையான செய்ற்பாடுகளுக்கு அரசும் அரசுத் தரப்பினரும் ஆளுநரும் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் இல்லை என்று.

வடக்கு மாகாண சபையானது பல இழுத்தடிப்புக்களுக்குப் பின்னர்தான் நிறுவப்பட்டது. அதுவும் சர்வதேச நிர்ப்பந்தத்தின் காரணமாக. அதன் கன்னி முயற்சிகளுக்கு அனுபவமிக்க மத்திய அரசும் தலைவர்களும் ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்கியிருக்க வேண்டும். அவசியமான சந்தர்ப்பங்களில் வளங்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வடக்கு மக்களின் ஜனநாயக அபிலாசைகளை முன்னெடுக்க உதவியிருக்க வேண்டும். மாறாக வடக்கு மாகாணத்துக்குரிய அரசமைப்பின் விதிகளுக்கு அமைவான உரிமைகளைக் கூட தருவதற்குத் தயக்கமும், மாற்றான்தாய் மனப்பான்மையும் காட்டிக்கொண்டு அதன் செயற்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறிய முற்பட்டுக் கொண்டு, ஒத்துழைப்பு குறித்து நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி அவர்கள் பேசுவதும் குற்றஞ்சாட்டுவதும் சரியாகப்படவில்லை.

பிறந்து ஒருவருடமேயான குழந்தையைப் பார்த்து நன்றாக நடக்கவில்லை, பேசவில்லை என்று குறைப்பட்டுக் கொள்ளும் பெற்றோரைப் போலிருக்கிறது ஜனாதிபதியின் கூற்று.

நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கவும் தயாராய் இருப்பதாக கூறியுள்ளார் ஜனாதிபதி. அதற்குப் பீடிகையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழர்களும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டால் நிறைவேற்று அதிகாரத்தை மாற்றி அமைப்பதாக ஓர் இடத்தில் கூறியிருக்கின்றார். தனிநாட்டு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பல தடவைகளில் அடித்துக் கூறியுள்ளார்கள். குறிப்பாக அண்மையில் உயர்நீதிமன்றத்திலேயே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கிறது. இதன்பிறகும் அதை ஒரு பிரச்சினையாக எடுப்பது பொருத்தமாகத் தெரியவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிரான கருத்து வடக்கில் மட்டும் எழுப்பப்படும் ஒரு பிரச்சினையல்ல, தெற்கில் அதுவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய விடயமாகப் பேசப்படப் போகின்றது.

அரசில் பங்காளிகளாகவுள்ள கட்சிகள் சிலவும் குறிப்பாக சில அமைச்சர்களே நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படவேண்டும் என்று குரல் எழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில் அந்தப் பிரச்சினையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முடிச்சுப் போட்டு தென்னிலங்கையில் பரப்புரை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் தென்னிலங்கை அரசியல் நிலவரங்கள் அப்படி ஒன்றும் இப்போதைய ஜனாதிபதிக்கு எதிராக திரும்பி விடவில்லை. அதனால் அவர் அச்சம் கொள்ளப் போவதில்லை. லண்டன் சென்றிருந்த ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் சிலவற்றுடன் பேச்சு நடத்தியிருக்கிறார் என்ற துருப்புச்சீட்டு ஜனாதிபதிக்குக் கிடைத்திருக்கிறது. அதுவும்கூட அடுத்த தேர்தலில் அரசு தரப்பில் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# மஹிந்தவின் சலுகைகளுக்கு மயங்குவார்களா தமிழர்?

## நடந்தவற்றை மறப்பது முடிந்த காரியமா?



சேரலாதன்

அடுத்த ஆண்டு பரபரப்பும், எதிர்பார்ப்புக்களும் நிறைந்ததாக இலங்கையில் மலரவிருக்கின்றது. நாட்டின் முக்கியமான தேர்தல்கள் நடைபெறுமென்ற ஊகங்கள் நிலவுவதால் இத்தகையதொரு நிலை உருவாகிவிட்டது.

ஊவா மாகாண சபைக்கு இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் தந்த அதிர்ச்சியிலிருந்து ஆளும் தரப்பினர்கள் இன்னமும் மீண்டதாகத் தெரியவில்லை. மக்களின் வெறுப்பு மேலும் அதிகரிப்பதற்கு முன்னர் முக்கியமான தேர்தல்களை நடத்தியே தீரவேண்டும் என்றதொரு அவசரமும் அவர்களிடம் காணப்படுகின்றது. மேலும், தேர்தல்களை இலகுவாக எதிர்கொள்ளும் பொருட்டு மக்களுக்குச் சலுகைகளை வழங்கும் அறிவிப்புகளும் தாராளமாக இடம்பெறத் தொடங்கி விட்டன. என்றுமே இடம்பெறாத வகையில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. அதிலும் கிராமத்தில் வாழும் மக்களைக் கவரும் விதமாக அவர்கள் தினமும் அதிகளவில் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தும் மண்ணெண்ணெயின் விலையில் அதிகளவு குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடுத்தர மற்றும் உயர்தர மக்களையும் தம் பக்கம் ஈர்க்கும் பொருட்டு மின்சாரம் மற்றும் எரிவாயுவின் விலைகளிலும் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. இனிவரும் நாள்களில் மேலும் பல சலுகைகளுக்கான அறிவிப்புக்களை மக்கள் எதிர்பார்க்க முடியும். இவை யாவும் மக்களின் பொருளாதாரச் சுமைகளைக் கண்டு அரசுக்கு ஏற்பட்ட இரக்கத்தால் மேற்கொள்ளப்பட்டவையென எவரும் கருதிவிட முடியாது. ஏனென்றால் இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து மக்கள் பொருளாதாரச் சுமைகளால் அவலப்படுகின்றபோதிலும் ஆட்சியாளர்கள் அதனைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. மாறாகத் தம்மைப் பலப்படுத்துவதிலேயே அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளனர்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பன இடம்பெறவுள்ள நிலையில் அரசுக்கு மக்கள் மீது திடீர் அக்கறை பிறந்துள்ளது. இதுவரை காலம் ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் பலரும் பெரும்பான்மையின மக்களின் ஆதரவு இருந்தாலே போதுமென்ற மனப்பான்மையுடன் காணப்பட்டனர். இதற்கு ஏற்றாற்போன்று அந்த மக்களின் மத்தியில் இனவாதத்தைத் தூண்டும் பரப்புரைகளும் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டன. சிறுபான்மை மக்களை ஒரு பொருட்டாகவே அவர்கள் மதிக்கவில்லை. ஏதோ வேண்டத் தகாதவர்கள் என்ற ரீதியிலேயே அவர்கள் பார்க்கப்பட்டனர். இறுதிப் போரின்போது தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகள் இழப்புக்கள் என்பன கணக்கில் கொள்ளப்படவில்லை. மாறாக இவையாவும் நியாயப்படுத்தப்பட்டன. போரினால் இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் இன்னமும் அவல நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். தமிழர்களுக்குச் சொந்தமான பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் திட்டமிடப்பட்ட வகையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தமிழர் நிலங்களில் பெரும்பான்மை இனத்தவர் சுதந்திரமாக உலாவும்நிலை உருவாகியுள்ளது. இவை தொடர்பாக தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதிலும் பயன் ஒன்றுமே கிடைக்கவில்லை. மாறாக தீவிரமடைந்து வருவதையே காண முடிகின்றது. இந்த அரசில் தமக்கு நியாயம் கிடைக்கப் போவதில்லை என்ற இறுதி முடிவுக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டு வெகு நாள்களாகி விட்டன.

தமிழர் தரப்பின் நிலை இவ்வாறெனில் இன்னுமொரு முக்கிய சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம் மக்களின் நிலை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. அளுத்கம, பேருவளை ஆகிய இடங்களில் அவர்களுக்கு நேர்ந்த கதி இதனைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. போரின் போது தமிழ் மக்கள் எதிர்கொண்ட இன்னல்களைக் கருத்தில் கொள்ளாது பெரும்பான்மை மக்களுடன் இரண்டறக் கலந்து அரசுக்கு ஆதரவு தெரிவித்து வந்த முஸ்லிம் தரப்பினர் இப்போதுதான் உண்மை நிலையை உணரத் தொடங்கிவிட்டனர். இனிமேல் தென்பகுதியில் தம்மால் சுதந்திரமாகத் தொழில் செய்து கொண்டு வாழ முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். பொதுபல சேனா போன்ற கடும்போக்கு தீவிரவாத மத அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. பொதுபல சேனா எவருக்கும் அஞ்சாத நிலையில் செயற்படுவதைக் காண முடிகின்றது. ஆட்சியாளர்களின் ஆதரவு இல்லாமல் அந்த அமைப்பினால் இவ்வாறு நடந்து கொள்ளவே முடியாது. ஆனால் இதைத் தெரிந்து கொண்ட பின்னரும் முஸ்லிம் மக்களின் தலைவர்களெனத் தம்மைக் கூறிக்கொள்பவர்கள் அரசுடன் ஒட்டிக் கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக வுள்ளது.

தற்போதைய நிலையில் பெரும்பான்மையின மக்களின் ஆதரவு தமக்குக் கிடைக்காது என்பதால் சிறுபான்மை மக்களை வசப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பித்துவிட்டன. இதன் ஆரம்பக் கட்டமாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வடபகுதிக்கான பயணம் அமைந்துள்ளது. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஜனாதிபதி சூறாவளிப் பயணத்தை மேற்கொண்டமை ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையின் ஓர் அங்கம் என்றே கொள்ள வேண்டும். மேலும், ஜனாதிபதி வெறும் கைகளுடன் அங்கு செல்லவில்லை. அவரால் காணி உறுதிகள் பல ஆயிரக் கணக்கில் வழங்கப்பட்டன. நட்டஈட்டுக்கான கொடுப்பனவுகள், வங்கிகளில் நகைகளை அடைவு வைத்து அவற்றை மீளப்பெற முடியாதவர்களுக்கு அவற்றை வழங்குதல், அரச உத்தியோகத்தர்களுக்கு ஆயிரக்கணக்கான மோட்டார் சைக்கிள்களை வழங்குதல், மகிந்தோதய திட்டத்தின்கீழ் பாடசாலைகளில் அமைக்கப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்தல் என ஜனாதிபதியினால் பல்வேறு உதவித் திட்டங்கள் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. எதிர்வரும் காலங்களில் இவைபோன்ற பல நடவடிக்கைகளை இங்கு காண முடியும்.

ஆனால் தமிழர்களின் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீர் வடிந்து கொண்டிருப்பதை அரசு தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருகின்றது. போரின்போது கொல்லப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள் , விசாரணை ஏதுமின்றி சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் வதைபட்டுக் கொண்டிருப்பவர்கள் ஆகியோரின் விடயத்தில் அரசு இன்னமும் கண்களை மூடிய நிலையிலேயே காணப்படுகின்றது. இவற்றை விடுத்து சிறுசிறு சலுகைகளை வழங்குவதன் மூலமாக தமிழர் தரப்பினரைக் கவர்ந்து விடலாமென எண்ணுவது வெறும் பகல் கனவாகவே இருக்கப் போகின்றது. விரும்பியோ, விரும்பாமலோ ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளைத் தீர்மானிக்கப் போகின்றவர்கள் சிறுபான்மையின மக்கள்தான் என்ற உண்மையை எவருமே மறுக்க இயலாது. அரசும் இதனை உணர்ந்து கொண்டதன் பயனாகவே தனது பார்வையை அவர்கள் பக்கம் திருப்பி விட்டுள்ளது.

ஆனால் தமிழர்களின் துயரங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வைக் காணாத நிலையில் அவர்களிடம் ஆதரவைக் கோரி நிற்பதால் பயனொன்றும் கிடைக்கப் போவதில்லை என்பதுதான் யதார்த்தம்.

கட்டுரை

14 OCT 2014

# இனி என்ன ஆவார் ஜெ...

பத்ரி சேஷாத்ரி

ஜெயலலிதா பிணையில் வெளியே வந்ததும் தமிழக அரசை எப்படித் தன் கைப்பிடிக்குள் வைத்திருப்பார் என்பது குறித்து நாம் சிந்திக்கத் தேவையே இல்லை என்று நினைக்கிறேன். இதற்குப் பல முன்னோடிகள் உள்ளனர். சோனியா முதல் ராமதாஸ் வரை பட்டியல் நீளுகின்றது. பத்தாண்டுகள் இந்தியாவின் ஆட்சி சோனியா காந்தியின் கைகளின் இருந்தது.

அவர் வெறும் நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே. ஆனால், பெயரளவுக்குத்தான் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தார். சஞ்சயா பாரு, நட்வர்சிங் ஆகியோரின் புத்தகங்கள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன. சோனியா காந்தியின் ஆலோசனையைக் கேட்டு அதன்படி பிரதமர் அலுவலகத்தை வழிகாட்டி நெறிப்படுத்த என்றே புலோக் சாட்டர்ஜி என்று ஒரு தனிச் செயலர் பிரதமர் அலுவலகத்தில் இருந்தார்.

பால் தாக்கரேயின் வாழ்நாளில் மகாராஷ்டிரத்தில் அமைந்த சிவ சேனை - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி, தாக்கரேயின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. அவர் ஒரு சட்டப் பேரவை உறுப்பினராகக்கூட இல்லை. தாக்கரே விரும்பியவர்தான் முதல்வர். அவர் சுட்டிக் காட்டியவர்கள்தான் அமைச்சர்கள். ஏன், தமிழகத்திலேயே ராமதாஸ் இருக்கிறாரே. அதிகாரபூர்வமாகப் பார்த்தால், அவர் பா.ம.கவின் தலைவர்கூடக் கிடையாது.

இவர்கள் எல்லோரையும்விட பின்னிருந்து இயக்கும் வேலையை ஜெயலலிதாவால் மேலும், எளிதாகச் செய்துவிட முடியும். அ.இ.அ.தி.மு.க. என்ற கட்சியில் ஜெயலலிதாவுக்கு அடுத்து இரண்டாவது தலைவர் கூடக் கிடையாது. ஏற்கெனவே, துறைச் செயலர்கள், தலைமைச் செயலர், சிறப்பு ஆலோசகர்கள், தனிச் செயலர்கள் ஆகியோரின் துணையுடன் ஜெயலலிதா தமிழகத்தை நேரடியாக ஆண்டுவந்தார். இனி, முதல்வர் என்ற பதவி இல்லாமல் அதையே செய்வதற்கு அவருக்கு ஒரு எதிர்ப்பும் இருக்காது.

**முன்பே நடந்ததுதானே?**

அரசியல் அமைப்புச் சட்டம் இதனை எதிர்பார்த்திருக்க வில்லை. கட்சியின் தலைவர், அரசின் தலைவருக்கு மேலானவராக இருந்து, தன் விருப்பத்தை அரசின் ஆணையாக ஆக்கக்கூடிய வல்லமை படைத்தவராக இருந்தால் என்ன செய்வது என்று, அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் யோசித்திருக்க வில்லை. சோனியா காந்தியும் பால் தாக்கரேயும் இந்தப் போதாமையை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளனர். 2002ஆம் ஆண்டில் ஜெயலலிதாவே சுமார் ஆறு மாதங்களுக்கு இதனைச் செயற்படுத்திக் காட்டியுள்ளார். அப்போதும் ஓ.பன்னீர்செல்வம்தான் முதல்வர்.

அன்றிலிருந்து இன்றுவரை கட்சியின் மீதான ஜெயலலிதாவின் பிடி கூடித் தான் போயிருக்கிறது. ஜெயலலிதாவை பாரதப் பிரதமராகவே அவருடைய கட்சியினர் பார்க்கிறார்கள். இன்று ஜெயிலில் ஜெயலலிதா இருக்கும் நிலையில், கட்சி அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைக்கூடத் தீர்மானிக்கச் சக்தியற்றவர்களாக இரண்டாம் கட்டத் தலைவர்கள் இருக்கிறார்கள். இனி, ஜெயலலிதா சிறையிலிருந்து பிணை பெற்று வெளியில் வரும் வரை கட்சியும் தமிழக அரசும் செயலற்றுத்தான் இருக்கும்.

அ.இ.அ.தி.மு.க. மட்டுமல்ல; இந்தியாவில் பல்வேறு கட்சிகள் ஒரே ஒரு நபரை மட்டுமே நம்பியிருக்கின்றன. மாயாவதியின் பகுஜன் சமாஜ், மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸ், ஜெகன்மோகன் ரெட்டியின் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆகிய பலவும் அப்படியே. தி.மு.க, சிவசேனை, தேசிய மாநாட்டுக் கட்சி போன்ற கட்சிகளின் தலைவர்கள் தத்தம் குடும்பத்தவர்களைக் கட்சிக்குள் கொண்டுவந்து தொடர்ச்சியைக் கொடுத்துள்ளனர். அவ்வாறு வாரிசுகளைக் கொண்டுவர முடியாத பலரில் ஜெயலலிதா, மம்தா பானர்ஜி, மாயாவதி போன்றோரைச் சொல்லலாம். இவர்கள் சட்டெனத் தங்கள் இடங்களை விட்டுக்கொடுத்துவிட மாட்டார்கள்.



**தோட்டத்திலிருந்து ஆட்சி நடக்கும்**

தமிழகத்தின் ஆட்சி போயஸ் தோட்டத்திலிருந்து நடக்கும். ஜெயலலிதா விரும்பிய சட்டங்கள் அவரது பெயரால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும். திட்டங்கள் அம்மாவின் பெயராலேயே தொடரும் அல்லது புதிதாகக் கொண்டு வரப்படும். அவரது புகைப்படங்கள் தாம் அரசு விளம்பரங்களிலும் பெரிதாக இருக்கும். சோனியாவின் புகைப்படம் அப்படித்தான் மன்மோகன் சிங்கின் படத்துடன் கூடவே வெளியானது.

ஓ. பன்னீர்செல்வத்தின் புகைப்படத்தையும் நாம் கூடவே காணக் கூடும். அவ்வளவே. நீதிமன்றங்கள் இதில் தலையிட லாம். மற்றபடி தமிழக அரசு என்பதை வெளியிலிருந்து நடத்துவதில் ஜெயலலிதாவுக்குச் சிக்கலே இருக்காது.

**கட்சி என்னவாகும்?**

கட்சியில் ஜெயலலிதாவுக்கு எதிர்ப்பு வருமா? கட்சி கலகலத்துப் போகுமா? இன்று மட்டுமல்ல, அடுத்த சில ஆண்டுகளிலும் இதற்கு வாய்ப்பே இல்லை.

அ.இ.அ.தி.மு.கவில் ஜெயலலிதா ஒருவர்தான் வாக்கு சேகரிக்கும் வல்லமை பெற்றவர். அவரை முன்வைத்துத்தான் இதுவரையில் அ.இ.அ.தி.மு.க ஜெயித் துள்ளது. இத்தனை ஊழல் குற்றச் சாட்டுகளுக்குப் பிறகும், கடுமையான தண்டனைக்குப் பிறகும், இப்படியே தான் நடக்கப்போகிறது. இந்தமுறை ஜெயலலிதா, தான் பொய் வழக்குகளுக்கு ஆளாகி அபாண்டமாகத் தண்டனை அனுபவிக்கவேண்டி வந்ததாகச் சொல்வார். வாக்குகளை அள்ளுவார். வழக்கு இழுத்துக் கொண்டே போகும்வரை ஜெயலலிதாவுக்குப் பிரச்சினை இல்லை.

ஒருவேளை உச்ச நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டால், அத்துடன் ஜெயலலிதாவின் அரசியல் முற்றுப்பெறலாம். அவ்வாறு நடைபெறாத வரை, அவரது உடலும் மனமும் சோர்வுறாத நிலையில், அவரது கைப்பிடிக்குள்தான் கட்சியும் ஆட்சியும் இருக்கும்!

**கே.வி. சாஸ்திரி**

வெகு நாள்களுக்கு முன் அமெரிக்கத் தூதர் ஒருவருடன் ஜெயலலிதாவைப் பற்றி பேசிக்கொண்டிருந்தது ஞாபகத்துக்கு வருகிறது. எவ்வளவோ தலைவர்களை அருகிலிருந்து பார்த்துப் பழகிய அவர், ஜெயலலிதாவின் மனோதிடமும் செயற்திறனும் அபாரமானது என்று வியந்து பேசிக்கொண்டிருந்தார். அ.தி.மு.கவை 25 ஆண்டுகளாக ஜெயலலிதா நிர்வகிக்கும் திறன், அதாவது அவருடைய ஆதிக்கத்தைப் பார்க்கும் எவரும் பிரமிக்காமல் இருக்க முடியாது. இந்தப் பிரமிப்புதான் பலரையும் அவர் முன்னால் கைகட்டி, வாய் பொத்தி நிற்கவைக்கிறதோ என்றுகூட நான் நினைப்பது உண்டு.

> இந்த இடைப்பட்ட இரண்டு ஆண்டுகளில், மக்களைப் பாதிக்கும் எவ்வளவோ பிரச்சினைகளில், அரசையும் நடத்த வேண்டும்; கட்சியையும் நிர்வகிக்க வேண்டும். இந்த இரு நிர்வாகமும் ஜெயலலிதா நேரடியாகக் களத்தில் இல்லாத சூழலில், தனித்து இயங்கி சாதித்துக் காட்ட வேண்டும். அவர்களால் முடியுமா? சந்தேகம் தான்.

சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு, சிறைத் தண்டனையை ஜெயலலிதா எதிர்கொள்ளும் சூழலிலும், அவருடைய அரசியல் ஆதிக்கத்துக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாது என்று பலரும் நினைப்பதற்கும் அந்தப் பிரமிப்புத்தான் காரணம் என்று நினைக்கிறேன். தமிழக மக்களிடம் இந்தத் தீர்ப்பு இரக்க அலையை ஏற்படுத்தும்; ஜெயலலிதாவுக்கான ஆதரவு இன்னும் பல மடங்கு உயரும்; சட்டப் பேரவையிலும் நாடாளுமன்றத்திலும் அ.தி.மு.கவின் எண்ணிக்கையைப் புறக்கணிக்க முடியாத நிலையில், அவருடைய செல்வாக்குக்கு எந்தப் பாதிப்பும் வராது என்றெல்லாம் கணக்குப் போடுபவர்கள் இந்தப் பின்னணியிலேயே போடுகிறார்கள்.

**காலம் மாறுகிறது**

இப்போது பதவியில் இருக்கும் மோடி அரசுக்கு, ஜெயலலிதாவின் ஆதரவை நாட வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால், அவருடைய செல்வாக்கை மைய அளவிலும் அவரால் தேக்கி வைத்துக்கொள்ள முடியும். இப்படியெல்லாம் கணக்குப் போடுகிறார்கள். ஆனால், ஒரு விடயத்தை எல்லோரும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்: காலம் மாறுகிறது. இன்றைக்கு மக்களிடம் அனுதாப அலைகூட வீசலாம். அது இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அப்படியே நீடிக்குமா?

ஜெயலலிதாவின் கட்சியினருக்கு இன்றைக்கு மிகப் பெரிய சவால் அவர்கள் முன் நிற்கிறது.

இந்த இடைப்பட்ட இரண்டு ஆண்டுகளில், மக்களைப் பாதிக்கும் எவ்வளவோ பிரச்சினைகளில், அரசையும் நடத்த வேண்டும்; கட்சியையும் நிர்வகிக்க வேண்டும். இந்த இரு நிர்வாகமும் ஜெயலலிதா நேரடியாகக் களத்தில் இல்லாத சூழலில், தனித்து இயங்கி சாதித்துக் காட்ட வேண்டும். அவர்களால் முடியுமா? சந்தேகம் தான்.

**இளைய தலைமுறையைக் கவனியுங்கள்**

தி.மு.க. தொடர்ந்து ஒரு தவறைச் செய்துவருகிறது. அதாவது, மக்களிடையே - குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே - ஊழல் மீது ஏற்பட்டிருக்கும் கடுமையான வெறுப்பை அந்தக் கட்சி குறைத்து மதிப்பிட்டு வருகிறது. அதற்கான விலையைக் கடந்த சட்டப்பேரவை, மக்களவைத் தேர்தல்களில் கொடுத்ததோடு மட்டும் அல்லாமல், இன்னும் தலையெடுக்க வழியில்லாமல் நிற்கிறது. இன்றைக்கு அதே தவறை அ.தி.மு.கவும் செய்கிறது. ஊழல் விடயத்தில் மக்கள் தி.மு.க. - அ.தி.மு.க. என்று பாகுபாடு காட்டப்போவதில்லை.

ஜெயலலிதா ஊழல் குற்றவாளி என்ற தீர்ப்பு வெளியானதில் தொடங்கி, அ.தி.மு.கவினர் நடத்தும் போராட்டங்கள் ஏற்படுத்தியிருக்கும் விளைவு என்ன? மக்களிடம் ஏற்பட்ட இயல்பான அனுதாபத்தையும் காலிசெய்து, அவர்களை அதிருப்தியை நோக்கித் தள்ளியிருப்பதுதான் ஒரே விளைவு. சொத்துக்குவிப்பு ஊழல் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பைக் கண்டிக்கும் முகமாக அதிமுகவினர் நடத்திவரும் அராஜகங்கள், நீதித் துறையையும், வழக்கில் சம்பந்தப்பட்ட நீதிவான்களையும் கண்டபடி அவதூறாக அவர்கள் தூற்றும் அவலங்கள் இவையெல்லாம் இந்திய நாட்டின் எல்லா நீதிபதி களையுமே விரோதித்துக்கொள்ளக் கூடிய அநாகரிகங்கள் என்பது கூடத் தெரியாமல்தானே அ.தி.மு.கவினர் அரசியல் செய்கின்றனர்? இங்கு நடக்கும் கூத்துகளையெல்லாம் பார்த்த என்னுடைய டெல்லி நண்பர்கள் பலர், திராவிடக் கட்சிகள் என்றாலே அதிகாரத் துஷ்பிரயோகத்திலும், ஊழலிலும், அராஜகத்திலும், வன்முறையிலும் ஈடுபடுவதுதான் இயல்பா? என்று கேட்டார்கள். நான் என்ன பதில் சொன்னேன் என்பது ஒருபுறம் இருக்கட்டும். உலகம் நம்மை எப்படிப் பார்க் கிறது என்பதற்கு ஓர் உதாரணம் இது.

**இடைவெளி அதிகரிக்கும்**

ஜெயலலிதாவுக்கும் அவருடைய கட்சியினருக்குமான உறவு நேரடியாக, அன்றாடத் தொடர்பில் இருப்பது அல்ல. இது எல்லோருக்கும் தெரிந்தது. இந்த வழக்கிலிருந்து விடுபடும் வரையிலான காலகட்டம் அவருக்கும் கட்சியினருக்குமான இடைவெளியை மேலும் அதிகரிக்கச் செய்யும். இதே போல, இன்னொருவர் முதல்வராக இருக்கும் வரை அ.தி.மு.கவினர் முழு ஈடுபாட்டுடன் செயற்படுவதும் சந்தேகமே. இது மக்களுக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே இடைவெளியை உருவாக்கும். இந்த இடைவெளியானது கட்சியையும் ஆட்சியையும் அவருடைய பார்வைக்கு அப்பாற்பட்டுக் கொண்டு செல்லும். இது எல்லாவற்றுக்கும் மேல், முதல்வராக அமர்ந்திருக்கும் இன்னொருவர், எத்தனை நாள்களுக்குத் தான் பணிந்தே செயற்படுவார் என்று சொல்ல முடியும்?

**சிம்மசொப்பனம் இந்த வழக்கு!**

ஜெயலலிதா இன்னமும் கொஞ்ச நாள்களில் பிணையில் வந்துவிடலாம். ஆனாலும், பறிபோன முதல்வர் பதவி பறிபோனதுதான். அவர் முற்றிலும் நிரபராதி என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்குமேயானால், அவர் இன்னொரு ஆட்டம் விளையாடலாம். ஆனால், அது எத்தனை நாளில் சாத்தியமாகலாம் என்பது யாருக்கும் தெரியாது. ஒருவேளை உச்ச நீதிமன்றத்திலும் அவருடைய மேல்முறையீடு தோற்றுப்போகுமேயானால், அவருடைய ஆதிக்கம் முடிந்துவிட்டது என்றே கொள்ள வேண்டும்!

# ஆந்திராவில் சீற்றம் கொண்டது 'ஹூட்ஹூட்'

## 6 பேர் உயிரிழப்பு; இயல்பு நிலை பாதிப்பு

டில்லி, ஒக்.14

வங்கக் கடலில் உருவான ஹூட்ஹூட் புயல் ஆந்திரத்தின் விசாகப்பட்டினம், ஒடிஸாவின் கோபால்பூர் இடையே நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நண்பகல் கரையைக் கடந்தது. இதில், ஆந்திரத்தில்தான் புயலின் சீற்றம் அதிகமாக இருந்தது.



200 கி.மீற்றர் வேகத்தில் கரையைக் கடந்த இந்தப் புயலால் இரு மாநிலங்களிலும் 6 பேர் உயிரிழந்தனர்.

ஆந்திரத்தில் விசாகப் பட்டினத்திலும், ஸ்ரீகாகுளத்திலும் மரம் விழுந்து 2 பேரும், மதில் சுவர் இடிந்து விழுந்து ஒருவருமாக 3 பேர் உயிரிழந்தனர்.

ஒடிஸா மாநிலத்தில், புரி மாவட்டத்தில் மீனவர் ஒருவரும், கேந்திரபாராவில் கடந்த சனிக்கிழமை படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி ஒரு சிறுவனும், சத்பயா பகுதியில் பவுன்சகாடி ஆற்றில் மற்றொரு படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி ஒரு சிறுமியுமாக 3 பேர் உயிரிழந்தனர். இரு மாநிலங்களிலும் நேரம் செல்லச் செல்ல புயலின் வேகம் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

கடலோர மாவட்டங்களான விசாகப்பட்டினம், ஸ்ரீகா குளம், விஜயநகரம் ஆகிய மாவட்டங்களில் புயல் காரணமாக மின் விநியோகம் தடைப்பட்டது. மரங்கள் வேருடன் சாய்ந்தன. அந்தப் பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பலத்த காற்றால் கடல் அலை 1.5 -2 மீற்றர் உயரம் வரை எழுந்தது. புயல் அச்சுறுத்தல் உள்ளதாக 5 மாவட்டங்களிலும் உள்ள 356 கிராமங்கள் கணிக்கப்பட்டு அந்தக் கிராம மக்களுக்காக 300 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. முன்னதாக, கிழக்கு கோதாவரி, விசாகப் பட்டினம், ஸ்ரீகாகுளம், விஜயநகரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 90,000 பேர் வெளியேற்றப்பட்டனர்.

ஒடிஸாவில் புயல் காரணமாக முன்னெச்சரிக்கையாக சுமார் 1.56 லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு 1,690 மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தின் தென் மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கன மழை பெய்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மீட்புப் பணியில் இராணுவம்

ஆந்திரத்தில் பாதிப்பிலிருந்து மக்களை மீட்க விசாகப்பட்டினத்தில் 6 ஹெலிகள், படையினரும் தயார் நிலையில் இருந்தனர். அதுபோல, ஒடிஸாவுக்கு 5 ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

மீட்புப் பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 44 குழுவினர் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தக் குழுக்களில் மொத்தம் 2,000 வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். மீட்புப் பணியில் 220 படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, திருப்பதி- புவனேசுவரம் வழித்தடத்தில் செல்லும் 40 விரைவு. பயணிகள் ரயில்கள் ரத்துச் செய்யப்பட்டன. கடலோர மாவட்டங்களில் அரசுப் பேருந்துகள் ரத்துச் செய்யப்பட்டன. மேலும், தனியார் பேருந்து நிர்வாகிகளும் பஸ்களை இயக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

புயலின் வேகம் குறையும் வரை பொதுமக்கள் எவரும் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று ஒடிஸா அரசு கேட்டுக்கொண்டது.

அதேபோல், ஆந்திரத்திலும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு பாதுகாப்பற்ற வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியேறி முகாம்களில் தங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

### உணவுப் பொட்டலங்கள் விநியோகம்

ஆந்திரத்தில் கடலோரத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் புயலால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு விநியோகிப் பதற்காக கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் இருந்து ஒரு லட்சம் உணவுப் பொட்டலங்கள் அனுப்பி வைக்கப்பட்டன என்று மாவட்ட ஆட்சியாளர் நீத்து பிரசாத் தெரிவித்தார்.

### அனைத்து உதவிகளையும் அளிக்க மோடி உறுதி

ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடுவை பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது புயல் பாதிப்பு நிலைவரம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து நாயுடுவிடம் கேட்டறிந்து ஆந்திர மாநி லத்துக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

புயல் பாதிப்புக்குள்ளான கடலோர மாவட்ட மக்களுக்கு உதவும் வகையில், ராஜமுந்திரி தொடக்கம் விசாகப்பட்டினம் வரை 4 ரயில் நிலையங்களில் மக்கள் தங்குவதற்காக வெற்று ரயில் பெட்டி களை தென் மத்திய ரயில்வே நிர்வாகம் நிறுத்தியுள்ளது. (வ)

## ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். செயற்கைகோள் 16 இல் விண்ணுக்கு



ஸ்ரீஹரிகோட்டா, ஒக்.14

ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1 சி செயற்கைகோளை விண்ணில் செலுத்துவதற்கான நேரக் கணிப்பு (கவுண்ட் டவுன்) நேற்றுக் காலை 6.32 மணிக்கு ஸ்ரீஹரி கோட்டாவில் ஆரம்பமாகியது.

குறித்த செயற்கைக் கோள் நேற்று விண்ணில் செலுத்தப் படுவதாக இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் செயற்கைக் கோளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

அதையடுத்து, ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.1 சி செயற்கைக் கோள் நாளைமறுதினம் 16 ஆம் திகதி விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்தது.

இந்திய கடற்பகுதிகளைக் கண்காணித்தல் உள்ளிட்ட பணிகளுக்காக ஐ.ஆர். என். எஸ்.எஸ்.1 சி செயற்கைகோள் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பல்வேறு தொழில்நுட்பத் தேவைகளுக்கு பயன்படும் வகையில் 7 செயற்கைக் கோள்களை அனுப்ப இஸ்ரோ முடிவு செய்தது.

அதன்படி, புவி இருப்பிட அமைப்பை அறிந்து கொள்வதற்காக ஐ.ஆர்.என். எஸ். எஸ் 1 ஏ மற்றும் ஐ.ஆர்.என்.எஸ்.எஸ் 1 பி ஆகிய இரண்டு செயற்கைக் கோள்களை ஏற்கனவே இஸ்ரோ விண்ணுக்கு அனுப்பி உள்ளது. தற்போது மூன்றாவதாக, ஐ.ஆர். என். எஸ்.எஸ் 1 சி செயற்கை கோள், பி.எஸ்.எல்.வி. சி 26 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரி கோட்டா சதீஷ் தவான் விண் வெளி தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)



ஒடிஸா, மாநிலத்தின் விசாகப்பட்டினம் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை 'ஹூட்ஹூட்'புயல் தாக்கத்தால் பெரியளவில் சேதங்கள் ஏற்பட்டன. புயல் அச்சம் காரணமாக கிழக்கு வங்கக் கடற்கரையில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வசிக்கும் குழந்தை ஒன்று பிளாஸ்ரிக் வாளி உள்ளே அமர்ந்துள்ள காட்சி. (வ)

## தேர்தல் பரப்புரையில் சிறுவர்கள் வேண்டாம்

### ஈடுபடுத்தினால் கட்சி அங்கீகாரம் ரத்து என்கிறது தேர்தல் ஆணையகம்

டில்லி, ஒக்.14


சிறுவர்களை தேர்தல் பரப்புரையில் ஈடுப்படுத்தினால் கட்சி அங்கீகாரம் நீக்கப்படும் என்று தேர்தல் ஆணையகம் கடுமையாக எச்சரித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு மே மாதமும், 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமும் தேசிய அளவில் அங்கீகாரம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளுக்கும், சிறுவர்களை தேர்தல் பரப்புரையில் ஈடுபடுத்தக் கூடாது என்று கடிதம் எழுதி உள்ளதாக தலைமைத் தேர்தல் ஆணையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது மராட்டியம், ஹரியானா மாநிலத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் மறுபடியும் இந்த எச்சரிக்கையைத் தேர்தல் ஆணையகம் விடுத்துள்ளது. (வ)

## 15 ஆம் நூற்றாண்டு நடுகல் தர்மபுரி அருகே கண்டுபிடிப்பு

தர்மபுரி மாவட்டத்தில் 2 இடங்களில் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வரலாறும், தொன்மையும் வளமும் உள்ள மாவட்டம் தர்மபுரி.



கற்கால மக்களின் தடயங்கள் தர்மபுரியில் உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் நடுகல் அதிகம் தென்படுகிறது. புலிகுத்துபட்டான் நடுகல், சதிகல் உள்ளிட்ட நடுகல்கள் அதிகம் தென்படுகின்றன. தர்மபுரி மாவட்டம் மிட்டா ரெட்டிஅள்ளியில் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலிகுத்தி நடுகல் மற்றும் விஜய நகர பேரரசைச் சேர்ந்த நடுகல்லும் வரலாற்று மாணவர்களின் களஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (வ)

## மே.வங்கத்தில் குண்டு வெடிப்பு; மூவர் காயம்

மால்டா, ஒக்.14

மேற்கு வங்க மாநிலம், மால்டா மாவட்டத்தில் உள்ள ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 3 பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இதுகுறித்து மால்டா நகர பொலிஸ்துறை கூடுதல் கண்காணிப்பாளர் அபிஷேக் மோடி கூறியதாவது:

மேற்கு வங்க மாநிலம், வங்க தேசத்தின் எல்லைப் பகுதிக்கு சமீபமாக அமைந்துள்ள மால்டா மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி குண்டு வெடித்ததில், வீடு கடுமையாகச் சேதமடைந்தது. அப்போது வீட்டின் அருகில் நின்றிருந்த 3 பேர் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற பின்னர் வீட்டின் உரிமையாளரைக் காணவில்லை என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 2ஆம் திகதி மேற்கு வங்க மாநிலம், பர்த்வான் நகரில் உள்ள வீடொன்றில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் 2 பேர் உயிரிழந்தனர். (வ)

## காதலியுடன் இணைந்த ஸ்னோடென் மகிழ்ச்சி




மொஸ்கோ, ஒக்.14
ரஷ்யாவில் வசித்து வரும் எட்வர்ட் ஸ்னோடென் தனது காதலியுடன் இணைந்துள்ளார்.
அமெரிக்காவின் இரகசிய புலனாய்வுத்துறையின் கணினிப் பிரிவில் பணி புரிந்த எட்வர்ட் ஸ்னோடென் அந்த நாடு ஏனைய நாடுகளை இரகசியமாகத் துப்பறிவதை வெளியுலகுக்குத் வெளிப்படுத்தியதன் மூலம் அந்த நாட்டு அரசின் கோபத்துக்கு ஆளானார். தண்டனைக்குப் பயந்து அங்கிருந்து தப்பிய அவருக்கு ரஷ்யா அடைக்கலம் கொடுத்துள்ளது.
இந்தநிலையில் அமெரிக்காவில் வசித்து வரும் அவரது காதலி லிண்டே மில்ஸ் தற்போது ரஷ்யாவிலுள்ள ஸ்னோடனுடன் இணைந்துள்ளதாக அவரது சட்டத்தரணி அனடோலி கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது. ஸ்னோடனின் நீண்ட கால காதலியும், நடன நங்கையுமான லிண்ட்சே கடந்த ஜூலை மாதம் மொஸ்கோவில் ஸ்னோடெனைச் சந்தித்து விட்டு நாடு திரும்பிய நிலையில் சனிக் கிழமை மீண்டும் ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார்.
எப்பொழுதெல்லாம் லிண்ட்சே ரஷ்யா வருகிறாரோ அப்பொதெல்லாம் ஸ்னோடனுடன் தான் அவர் வசிப்பதாகவும், அது ஸ்னோடனை ஊக்கப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.
விசா கட்டுப்பாடுகள் காரணமாக லிண்ட்சே ரஷ்யாவில் நிரந்தரமாகத் தங்க முடியாத நிலை ஏற்பட்டாலும், அடிக்கடி அவர் அங்கு வந்து செல்வதாகவும், இருவரும் இணைந்து ரஷ்யாவில் உள்ள திரையரங்குகள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சியாகப் பொழுதை கழிப்பதாகவும் அனடோலி கூறியுள்ளார். (வ)



கொலம்பியாவில் நடைபெற்ற மிருகவதைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் அங்குள்ள மக்கள் தமது வளர்ப்பு நாய்களுடன் கலந்துகொண்டபோது.... (வ)

## பிளாஸ்டிக் பைகளின் ஆயுள் முடிவுக்கு வருகிறது பிரான்ஸில்

பாரிஸ், ஒக்.14
பிரான்ஸ் நாட்டில் 2016 ஆம் ஆண்டு முதல் பிளாஸ்டிக் பைகள் உபயோகப்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸில் கடந்த வெள் ளிக்கிழமை நடைபெற்ற தேசிய சுகாதார கூட்டமைப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.
மேலும் இந்தச் சட்டம் மீண்டும் உபயோகப்படுத்தக் கூடிய பைகளுக்கும், மக்கும் தன்மையுடைய பைகளுக்கும் பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதிப்பது பல நாடுகளில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில், சுற்றுச்சூழல் மற்றும் கடல் வாழ் உயிரினங்களுக்கு பிளாஸ்டிக்கால் ஆபத்து ஏற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டதையடுத்து பிரான்ஸ் தற்போது இந்தச் சட்டத்தை பின்பற்ற முன் வந்துள்ளது. (வ)

# ரஷ்யப் படைகள் வாபஸ் உக்ரைன் எல்லையிலிருந்து

### ஜனாதிபதி புடினின் கட்டளையை அடுத்து

உக்ரைன், ஒக்.14
உக்ரைன் எல்லையிலுள்ள சுமார் 17, 600 ரஷ்யப் படையினரை அங்கிருந்து திருப்பி அழைத்து தமது தளங்களுக்குத் திரும்புமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கட்டளை பிறப்பித்திருப்பதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
எனினும் உண்மையில் இந்தக்கட்டளையால் படைகள் மீளத் திரும்பத் தொடங்கி விட்டனவா என்று இன்னமும் தெளிவாகவில்லை. மேலும் மீளப்பெறும் நடவடிக்கை ஆரம்பித்ததற்கான அறிகுறி இதுவரை தென்படவில்லை என்றும் நேட்டோ அறிவித்துள்ளது.
இந்தநிலையில் பயிற்சி நடவடிக்கைக்காகவே தமது படைகள் உக்ரைன் எல்லை அருகே முகாமிட்டு இருந்ததாகவும், தற்போது இது நிறைவடைந்து மீளத் திரும்புவதாகவும், ரஷ்யா தகவல் வெளியிட்டுள்ளதாக அந்தநாட்டு செய்தி ஊடகம் ஒன்று அறிவித்துள்ளது. எனினும் உக்ரைன் எல்லை அருகே ரஷ்யாவின் படைக் குவிப்பு உக்ரைனை ஆக்கிரமிப்பதற்கான ஓர் கட்டம் என்றே மேற்குலகின் பார்வை இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. சில மாதங்களுக்கு முன்பு உக்ரைனின் கிரிமியா மாநிலத்தை ஆக்கிரமித்துத் தன்னுடன் ரஷ்யா இணைத்துக் கொண்டதுடன் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் கியேவ் நிர்வாகத்திடம் இருந்து சுதந்திரம் பெற்று விட்டதாக சுயமாக அறிவித்திருந்தனர். இதனால் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய எல்லைப் பகுதியில் கிளர்ச்சியாளர்களுக்கும் உக்ரைன் படைகளுக்கும் இடையே வன்முறை மூண்டது. இந்த வன்முறைகளால் 2500 உயிர்கள் இதுவரை இழக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. மேலும் கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களினது சர்ச்சைக்குரிய வான்பரப்பில் பறந்த மலேசியன் ஏர்லைன்ஸின் எம்.எச்.17 பயணிகள் விமானமும் மர்மநபர்களால் ஏவுகணை மூலம் தாக்கி வீழ்த்தப்பட்டதில் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்திருந்தனர். அதனை அடுத்து பெலாருஸில் இரு தரப்பும் கடந்த மாதம் சந்தித்து போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருந்த போதும் இது இரு தரப்பாலும் பல தடவைகள் மீறப்பட்டன.



இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடினும், உக்ரைன் ஜனாதி பதி பெட்ரோ பொரொஷெங்கோவும் அடுத்த வாரம் மிலான் நகரில் ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்கான கூட்டத்தில் சந்தித்துப் பேசத் தயாராகி உள்ள நிலையில் தான் ரஷ்யா தனது படைகளை மீளப் பெறுவதற்கான அறிவிப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஈரானில் வீழ்ந்தது விமானம் 7 பேர் சாவு

ஈரானில் பொலிஸ்துறைக்குச் சொந்தமான விமானமொன்று நொறுங்கி விழுந்ததில் மூத்த அதிகாரியொருவர் உட்பட 7 பொலிஸார் உயிரிழந்தனர்.
பாகிஸ்தானை அண்மித்த எல்லைப் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணைமேற்கொள்ள டெஹ்ரானிலிருந்து சனிக்கிழமை இரவு ஒரு சிரேஷ்ட அதிகாரி, 3 காவலர்கள் கொண்ட விமானம் புறப்பட்டது. மூன்றுவிமானிகளும் அதில் பயணம் செய்தனர். இவ்விமானம், அந்நாட்டின் தென் கிழக்குப் பகுதியில் இருக்கும் ஸாஹிதான் நகருக்கு வெளியே மலைப் பிரதேசத்தில் நொறுங்கி விழுந்தது.
இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்தனர். (வ)

## கொபானே அகதிகளுக்காக 3.9 மில்லியன் யூரோ நிதியுதவி

### ஐரோப்பிய யூனியன் வழங்குகிறது

கொபானே, ஒக்.14
சிரியாவில் தற்போது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு கடுமையான முற்றுகைப் போரை மேற்கொண்டுவரும் குர்திஷ் நகரான கொபானேயிலிருந்து அகதிகளாக வெளியேறி வரும் மக்களுக்காக 3.9 மில்லியன் யூரோக்கள் நிதியுதவி அளிப்பதாக ஐரோப்பிய யூனியன் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறைந்தது 1,80 000 சிரியர்கள் கொபானேயில் நடைபெற்றுவம் தீவிர சண்டையால் அகதிகளாக அண்டை நாடான துருக்கிக்கு இடம் பெயர்ந்திருப்பதாகவும் இது நிகழ்காலத்தின் மிகப்பெரிய மனித அவலம் என்றும் சர்வதேச கூட்டமைப்பு, மனிதாபிமான உதவி மற்றும் குழப்ப நிலை தவிர்ப்பு அமைப்பின் ஆணையாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார்.

**குடிதண்ணீர், மருந்து மற்றும் தங்குமிட வசதி என்பன சிரிய அகதிகளுக்கு இயன்றளவு அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.**

இந்தநிலையில் 2014 ஆம் ஆண்டு சிரியாவுக்கான ஐரோப்பியயூனியனின் மொத்த உதவித் தொகையான 150 மில்லியன் யூரோக்களுடன் இந்த உதவியும் சேர்க்கப்படுவதாகவும் அதன் மூலம் குடிதண்ணீர், மருந்து மற்றும் தங்குமிட வசதி என்பன சிரிய அகதிகளுக்கு இயன்றளவு அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.
கடந்த 3 வாரங்களாக துருக்கி எல்லை அருகேயுள்ள நகரான கொபானேயைக் கைப்பற்ற ஐ.எஸ்.ஐ.எஸ். கடுமையான போரில் ஈடுபட்டு வருவதால் அங்கிருந்து குறைந்தது 3 லட்சம் குடிமக்கள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சிரியாவுக்கான மொத்த மனிதாபிமான உதவியான 3 பில்லியன் யூரோக்களில் ஐரோப்பிய யூனியனின் பங்கும் பெருமளவு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(வ)

## எபோலா இறப்புத் தொகை 4 ஆயிரத்தை தாண்டியது

### உலக சுகாதார நிறுவனம் தகவல்

நியூயோர்க்க, ஒக்.14
எபோலா என்னும் கொடிய நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆபிரிக்காவின் மேற்குப்பகுதி நாடுகளில் ஒருவகை உயிர் கொல்லி நோய் பரவி வருகிறது. எய்ட்ஸைவிட கொடிய நோயாகக் கருதப்படும் எபோலோ பரவாமல் தடுக்க உலக சுகாதார நிறுவனம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. எபோலா நோயைக் கட்டுப்படுத்த, உலகளாவிய அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.
இந்தநிலையில், கடந்த 8 ஆம் திகதி உலக சுகாதார நிறுவனம் எபோலா நோயால்



இறந்தவர்களின் எண்ணிக்கையை வெளியிட்டது. அதில் 7 நாடுகளைச் சேர்ந்த 8,399 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 4,033 பேர் இதுவரை இந்த நோயால் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த முறை உலக சுகதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையின் போது, 8033 பேர் நோயால் பாதிக்கப்பட்டதாக பதியப்பட்டுள்ளதாகவும் 3,865 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்ப்புக்கள் அகலும். கடினமான வேலைகளையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் தேவை.

**இடபம்**: மனதில் தைரியம் உண்டாகும். எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும். எதிலும் முன்னேற்றம் காணப்படும். உங்கள் இஷ்டத்துக்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும், முடிவுகள் சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும்.

**மிதுனம்**:வேற்றுமொழி பேசுபவர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பதவி அல்லது கூடுதல் பொறுப்புக்கள் கிடைக்கப் பெறுவார்கள்.

**கடகம்**: பெண்களுக்கு மனதில் வீண்குழப்பம் உண்டாகும். உங்களிடம் ஆலோசனை கேட்டு உங்களை நாடி சிலர் வரக்கூடும். உத்தியோகத்தில் உயர்வுபெற எடுக்கும் முயற்சிகள் நல்ல பயன் தரும். சக ஊழியர்களின் ஆதரவும் கிடைக்கும். மன அமைதி உண்டாகும்.

**சிங்கம்**: நன்மைகள் உண்டாகும். பெரியோர்களின் உதவி கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ ஏற்படாது. தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். வாக்குவன்மையால் இலாபம் அதிகரிக்கும்.

**கன்னி**: மன நிம்மதியும், சந்தோசமும் உண்டாகும். கடின உழைப்பும் முயற்சிகளில் வெற்றி பெறும் திறனும் அடைவீர்கள். நீண்ட நாள்களாக மனதில் இருந்த திட்டம் முழுவதுமாக செயற்பட வாய்ப்பு உள்ளது. எதிர்த்துச் செயற்பட்டவர்கள் ஒதுங்கி விடுவார்கள்.

**துலாம்**: நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். வேண்டியவர்களுடன் மனஸ்தாபம் உண்டாகும். தொழில் தொடர்பாக அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும்.

**விருச்சிகம்**: உத்தியோக மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம். கவனம் தேவை. குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பூர்வீக சொத்துக்கள் மூலம் வரவேண்டியவை தாமதப்படும்.

**தனுசு**: வீண் அலைச்சல் உண்டாகும். எந்த ஒரு செயலையும் சிந்தித்துச் செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்**: மற்றவர்களுடன் வீண் விவாதம் ஏற்படலாம். கவனம் தேவை. செய்யும் தொழிலில் இலாபம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி துணிச்சல் உண்டாகும். மற்றவர்களுடன் விரோதம், கௌரவ பங்கம் ஏற்படலாம்.

**கும்பம்**: எச்சரிக்கையுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். வீண் கவலை, வீண் வாக்குவாதங்கள் ஆகியவை ஏற்படும். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புக்கள் அகலும். நீண்ட நாள்களாக இழுப்பறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும்.

**மீனம்**: உங்களின் திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். குடும்ப உறுப்பினர், பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சி வியத்தகு முன்னேற்றம் பெறும். விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வீர்கள்.

## நாளை

**புரட்டாதி-29 புதன்கிழமை | 15.10.2014**

திதி: ஸப்தமி பி.ப.02.41 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.ப.11.50 வரை
சுபநேரம்:04.32-06.02 வரை
இராகுகாலம்:12.02-01.32 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## மதங்களின் கருத்து தெளிவாக இருக்க வேண்டும்.

நாம் எவ்வளவுதான் தடுத்தாலும் எமது வாழ்க்கையில் பெரும் பகுதி தீமை நிறைந்ததாகத்தான் இருக்கும். நடைமுறையில் இந்தத் தீமை ஏறக்குறைய எல்லையற்றதாக இருக்கிறது என்பதை நாம் பார்த்தோம். ஆதிகாலம் முதல் இதற்குப் பரிகாரம் காண்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அது என்னவோ அப்படியேதான் இருக்கிறது. அதிகமாகப் பரிகாரங்களைக் கண்டுபிடிக்கின்ற அளவுக்கு மேன் மேலும் நுட்பமான தீமைகள் எம்மைச் சூழ்கின்றன. மதங்களின் போதனைகளைப் பார்க்கும்போது முதலில் எமக்குத் தோன்றுவது, நாம் வாழ்க்கைக்கு முடிவுகட்டுவதே மேல் என்பதுதான். வாழ்க்கையின் தீமைகளுக்கு எப்படிப் பரிகாரம் காண்பது என்ற கேள்விக்கு, வாழ்க்கையை முடித்துவிடலாம் என்பதுதான் உடனே தோன்றும் பதிலாக இருக்கிறது.இது ஒருபழைய கதையை நினைவூட்டுகிறது. ஒரு மனிதனின் தலையில் ஒரு கொசு உட்கார்ந்தது. கொசுவைக் கொல்ல விரும்பிய அவனுடைய நண்பன் ஒரு பலத்த அடி கொடுத்தான். கொடுத்த அடியில் கொசு, மனிதன் இரண்டு பேருமே காலி. தீமைக்குப் பரிகாரமும் இது போன்றதாகத்தான் தோன்றுகிறது. வாழ்க்கை தீமை நிறைந்தது, உலகம் தீமை நிறைந்தது. உலகைப் பற்றி அறிந்த அனுபவசாலிகள் யாரும் இதை மறுக்க முடியாது.

மதங்கள் இதற்குச் சொல்லும் பரிகாரம் என்ன? இந்த உலகம் பயனற்றது என்பது தான். இந்த உலகுக்கு அப்பால் உண்மையான ஏதோ ஒன்று இருக்கிறது. இங்கே தான் பிரச்சினை ஆரம்பமாகிறது. மதங்கள் சொல்லும் பரிகாரம், எல்லாவற்றையும் அழிப்பதாகவே தோன்றுகிறது. அழிவு எப்படி ஒரு பரிகாரமாக இருக்க முடியும்? அப்படியானால் வேறு வழியே இல்லையா? மதங்கள் சொல்வதெல்லாம் சரி தான், ஆனால் அவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்என்கிறதுவேதாந்தம். மதங்களின் கருத்து தெளிவாக இல்லாததால் மக்கள் அவற்றைத் தவறாகப் புரிந்துகொள்ள நேர்கிறது.

# கணினி உலகில் புரட்சியை ஏற்படுத்த வரும் புதிய சாதனம்



எக்சைற் என்ற நிறுவனமானது 'எக்' என்று அழைக்கப்படும் புதிய சாதனம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

முட்டை வடிவில் அமைந்த இந்தச் சிறிய சாதனத்தைப் பயன்படுத்தி கிளவுட் ஸ்டோரேஜ் எனப்படும் இணையத்தில் தரவுகளைச் சேமிக்கும் வசதியைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், இதனை வலைத்தள சேவையகமாகவும் பயன்படுத்த முடியும்.

இதில் வை-பை வயர்லெஸ் தொழில்நுட்பம், 2.4 அங்குல அளவு, 320 X 240 பட அளவுடைய திரையும் காணப்படுகின்றது.

அவற்றுக்கும் மேலாக 10 - 12 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக மின்சக்தியை வழங்கக்கூடிய மின் கலத்தையும் உள்ளடக்கியுள்ளது.

தற்போது இந்தச் சாதனம் 'கிக்ஸ்ராட்டர்' இணையத் தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 4 | | 7 |
| 5 | 1 | | | 4 | 9 | | | 2 |
| 4 | | | | | 8 | 6 | 9 | |
| 6 | 5 | | | 9 | 7 | | 1 | |
| 9 | | 8 | | | | 7 | | 5 |
| | 3 | | 4 | 8 | | | 2 | 6 |
| | 2 | 5 | 8 | | | | | 9 |
| 3 | | | 1 | 5 | | | 7 | 8 |
| 8 | | 1 | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 6 | 8 | 9 | 3 | 4 | 2 | 1 |
| 3 | 1 | 8 | 2 | 5 | 4 | 9 | 7 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 1 | 7 | 3 | 8 | 5 |
| 8 | 9 | 4 | 1 | 3 | 2 | 5 | 6 | 7 |
| 1 | 3 | 7 | 5 | 4 | 6 | 2 | 9 | 8 |
| 2 | 6 | 5 | 9 | 7 | 8 | 1 | 4 | 3 |
| 5 | 2 | 3 | 7 | 6 | 9 | 8 | 1 | 4 |
| 6 | 8 | 1 | 4 | 2 | 5 | 7 | 3 | 9 |
| 4 | 7 | 9 | 3 | 8 | 1 | 6 | 5 | 2 |

14 OCT 2014

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஒக். 14

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு: வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணிக்கும் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# குகனின் ஹற்றிக் கோல்களினால் சம்பியனானது யங்ஸ்ரார் அணி



யாழ்ப்பாணம், ஒக். 14

குகனின் ஹற்றிக் கோல்களினால் அல்மதார் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டு சம்பியன் ஆனது யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி.

நிர்மலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அல்மதார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண் டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் சமபலத்துடன் மோதிக் கொண்டதால் மைதானத்தில் விறுவிறுப்புக்கும் பரபரப்புக்கும் குறைவில்லாமல் ஆட்டம் இடம் பெற்றது. இதன்போது ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெயந்திரன் தனது அணிக்கான முதலாவது கோலினையும், 12ஆவது, 18 ஆவது நிமிடங்களில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் குகன் தனது அணிக்கான 2ஆவது, 3ஆவது கோலினைப் போட்டார். பதிலுக்கு அல்மதார் விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோலினைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடினர். அவர்களால் தமது அணிக் கான கோலைப் பெறமுடியவில்லை. ஆட்டம் இடை வேளைக்காக நிறுத்தப்பட்ட போது யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணியினரும் தமது அணி சார்பில் சில மாற்றங்களை மேற்கொண்டு மோதிக் கொண்டதால் ஆட்டம் சூடு பிடிக்கத் தெரடங்கியது. இரண்டாம்பாதி ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் குகன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான4ஆவதுகோலைப் போட்டார். அல்மதார் விளையாட்டுக்கழக அணியினர் கோல் போடும் முயற்சியில் எதிர் அணியின் கோல் பரப்பை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். இதன் போது ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் யங்ஸ்ரார் அணி வீரன் குகன் தனக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 5ஆவது கோலைப் போட்டார். ஆட்ட நேர முடிவில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

## காலிறுதியாட்டங்கள் வியாழனன்று

இரணைமாதா நகர் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கமும் இரணைமாதா நகர் கிராம அபிவிருத்திச்சங்கமும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 9பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு: முதலாவது காலிறுதியாட்டத்தில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விடத்தற்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

2 ஆவது காலிறுதியாட்டத்தில் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இலுப்பைக்கடவை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

3ஆவது காலிறுதியாட்டத்தில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது.

இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி 4ஆவது காலிறுதியாட்டத்தில் நாச்சிக்குடா ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக 'பி' அணியுடன் மோதவுள்ளது. (த-23)

## 15 வயதுப் பெண்கள் கபடியில் முதல் 3 இடங்களும் வடக்குக்கு

இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற குழு நிலைப் போட்டி களில் வட மாகாண அணி பிரகாசிக்கத் தவறியபோதிலும் 15 வயதுப் பிரிவினருக்கான பெண்கள் அணி கபடிப்போட்டியில்முதல்மூன்று இடங்களையும் பெற்று வட மாகாணத்துக்கு புகழ் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக வடமாகாணப் பாடசாலை அணிகள் குழு நிலைப் போட்டிகளில் 8 பதக்கங்கள் பெறப்பட்டுள்ள போதிலும் கபடிப் போட்டியில் 5 பதக்கங்களைப் பெற்றுள்ளன.

பெறப்பட்ட பதக்கங்களின் விவரம் வருமாறு:

15 வயதுப்பிரிவுகபடி(பெண்கள்)
முதலாம் இடம்-பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.
இரண்டாம் இடம்-வவுனியா பரக்கும்பா மகாவித்தியாலயம்.
மூன்றாம் இடம்- வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்உயர்தரப்பாடசாலை.

15 வயதுப் பிரிவு கபடி (ஆண்கள்)
இரண்டாம் இடம்-வடமராட்சி கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

19 வயதுப் பிரிவு கபடி (ஆண்கள்)
இரண்டாம் இடம்-வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலயம்.

உடற் பயிற்சி (ஆண்கள்)
இரண்டாம் இடம்- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.
மூன்றாம் இடம்-ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம் (ஆண்கள்)
மூன்றாம் இடம்- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 14

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசேரத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

கரணவாய்,ஒக்.14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை கழக மைதான்த்தில் இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும் சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (த-108)

# ஊரெழு லயன்ஸ், கார்மேல் போய்ஸ், ஞானம்ஸ் வெற்றி

கரணவாய், ஒக்.14

ஊரெழு லயன்ஸ் விளையாட்டுக் கழகம், கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன ஆட்டங்களில் வெற்றியீட்டின.

கம்பர்மலை கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 8 பேர் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொம்மாந்தறை கழுகுகள் விளையாட்டுக் கழகமும் ஊரெழு லயன்ஸ் விளையாட்டுக் கழகமும் விளையாடின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஊரெழு லயன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சதீஸ் 36 ஓட்டங்களையும், பிரதாப் 32 ஓட்டங்களையும், சஜி 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வனகன் 2 இலக்குகளையும் பவன், நந்தபாலன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 120 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கழுகுகள் அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று 29 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அந்த அணி சார்பாக வனஜன் 25 ஓட்டங்களையும் செந்தூரன் 13 ஓட்டங்களையும் அதிகமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சசி 2 இலக்குகளையும் தவா சதீஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.



அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் விளை யாட்டுக்கழகம் 7.4 பந்துப் பரிமாற்றங் களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 71 ஓட்டங் களை மட்டும் பெற்றது.

அதில் அச்சுதன் 27 ஓட்டங்களையும் பவிலியன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பவி 2 இலக்குகளையும் உதயன் , அயன், றொக்ஜன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும்கைப் பற்றினர்.

இதனை அடுத்து 72 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கார்மேல் போய்ஸ் அணி 6 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்து 6 இலக்குகளால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக தேசி கன் 41 ஓட்டங்களையும் ஞானி 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சேது ஒரு இலக்கையும் கைப்பற்றினார்.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் கல்வியங்காடு ஜி.பி.எஸ். விளையாட்டுக்கழகமும், கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஞானம்ஸ் அண்ி எதிரணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கல்வியங்காடு ஜி.பி.எஸ் அணி 4 பந்துப் பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் பறிகொடுத்தது.

அந்த அணி சார்பாக சாரு 11 ஓட்டங்களையும் ராம் 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அனுசயந்தன் 3 இலக்குகளையும் சேந்திரன் 2 இலக்குகளையும் கணாதீபன் ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.

இதனை அடுத்து 30 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு களமிறங்கிய ஞானம்ஸ் அணி 4 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக சுகந்தன் 93 ஓட்டங்களையும் பிரகாஸ் 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (த-108)

# இந்திய வீரர்களை புகழும் கவாஸ்கர்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.
மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் படுதோல்வியடைந்த இந்தியா, 2ஆவது ஒருநாள் போட்டியில் 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அந்த அணியை வீழ்த்தியது. இந்த வெற்றி குறித்து இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் கூறுகையில், டில்லியில் மேற்கிந்திய வீரர்களுக்கு எதிரான 2வது ஒருநாள் போட்டியில் இந்திய அணி சிறப்பாக விளையாடியது.
உலக சம்பியனுக்கு உரிய பொறுப்புடன் ஆடியது. 4ஆவது வீரர் வரிசைக்கு மாற்றப்பட்ட பிறகு விராட் கோஹ்லி சிறப்பாக ஆடினார். இதே ஆட்டத்திறமையை ரெய்னாவும் வெளிப்படுத்தினார். அமித் மிஸ்ராவின் பந்துவீச்சும், களத்தடுப்பும் அபாரமாக இருந்தது என்று கூறியுள்ளார். (த)




# உலக சம்பியனுக்கு அதிர்ச்சி வரலாறு படைத்த போலந்து

2016 யூரோ உதைபந்து தொடருக்கான தகுதிச் சுற்றுப்போட்டியில் ஜேர்மனியை வீழ்த்தி போலந்து அணி வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் முதன் முறை யாக ஜேர்மனியைத் தோற் கடித்து போலந்து அணி வரலாறு படைத்துள்ளது.
போலந்து தலைநகர் வர்ஸோவில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் மோதின.
போலந்து அணிக்கு அர்கடியுஸ் மிலிக், செபாஸ்டியன் மிலா ஆகிய இருவரும் கோல் அடித்தனர். ஆனால், உலக சம்பியனான ஜேர்மனி அணி கடைசி வரை ஒரு கோல் கூட அடிக்கவில்லை.
பிரேசிலில் நடைபெற்ற உலகக் கிண்ணத்துக்குப் பின் ஜேர்மனி பெரிதாகச் சாதிக்கவில்லை. நட்பு உதைபந்து ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவிடம் 4-2 என தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது. இதே வேளை, பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்ற சர்வதேச நட்பு கால்பந்து ஆட்டத்தில் பிரான்ஸ் 2-1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை வீழ்த்தியது.
ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்திலேயே கரீம் பென்ஸிமா கோல் அடிக்க, பிரான்ஸ் 1-0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் போர்த்துக்கல் ஆக்ரோஷமாக ஆடியது. 51ஆவது நிமிடத்தில் மூலை உதையை, போர்த்துக்கல் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தலையால் முட்டி கோல் அடிக்க முயன்றார். ஆனால், பிரான்ஸ் கோல் காப்பாளர் ஸ்டீவ் மண் டன்டா அற்புதமாக டைவ் அடித் துத் தடுத்து விட்டார்.
ஆட்டத்தின் 69ஆவது நிமிடத் தில் இடது புறத்தில் இருந்து போர்த்துக்கல் பின்கள வீரர்களை ஏமாற்றி பேட்ரிஸ் எவ்ரா அற்புதமாக கரீம் பென்ஸிமாவுக்கு பாஸ் கொடுத்தார். தன்னைச் சுற்றிலும் போர்த்துக்கல் வீரர்கள் சூழ்ந்ததை உணர்ந்த பென்ஸிமா அருகில் இருந்த போக்பாவிடம் பந்தை பாஸ் செய்ய, போக்பா அழகாக பந்தை வலைக்குள் செலுத்தினார். இதன்மூலம் பிரான்ஸ் 2-0 என முன்னிலைபெற்றது. ஆட்டம் முடிவதற்கு 15 நிமிடங்கள் இருந்தபோது ரொனால்டோ முழங்கால் காயம் காரணமாக வெளியேறினார். அடுத்த சில நிமிடங்களில் போக்பா, ஜாவோ மரியாவிடம் மோதலில் ஈடுபட போர்த்துக்கலுக்கு தண்டனை உதை கிடைத்தது.
அதை ரிச்சர்டோ குரேஸ்மா கோலாக மாற்றினார். இருப்பினும், முடிவில் பிரான்ஸ் வெற்றி பெற்றது. தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் பிரான்ஸ் ஏற்கெனவே, 2016 யூரோ கால்பந்து தொடருக்குத் தகுதி பெற்றது. ஆனால், முதல் தகுதிச் சுற்று ஆட்டத்திலும் போர்த்துக்கல், அல்பேனியாவிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# பாகிஸ்தானுடன் மோத இலங்கை அணி தயாரா?

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியர் கான் 15 வயதிற்குட்பட்ட இலங்கை அணியினரைப் பாகிஸ்தானில் விளையாடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.
இலங்கைக்குத் திடீர் பயணம் மேற்கொண்ட சஹாரியர் கான், இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ஜயந்த தர்மதாஸவுடன் கலந்துரையாடியுள்ளார்.
இதன்போது, நீண்டகாலமாக பாகிஸ்தானில் நிலவி வந்த தீவிரவாத அச்சுறுத்தல் ஒழிக்கப்பட்டு தற்போது பாகிஸ்தான் பாதுகாப்பான நாடாக உள்ளது என சஹாரியர் கான் உறுதியளித்துள்ளார். மேலும் இந்தச் சந்திப்பு தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபையின் ஏனைய அதிகாரிகளுக்கு முன்னரே தெரிவிக்கப்படாத நிலையில், இந்தச் சந்திப்பு திடீரென நிகழ்ந்ததாகவும் டில்லியிலிருந்து துபாய்க்குச் செல்லும் வழியில் தன்னை சஹாரியர் கான் சந்தித்து பேசியதாகவும் ஜயந்த தர்மதாஸ குறிப்பிட்டுள்ளார். (த)



சஹாரியர் கான்

# ஆஸி. மீண்டும் முதலிடம்



இறுக்கமாக நடைபெற்ற ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் ஆஸ்திரேலியா அணி அபார வெற்றி ஒன்றைப் பெற்று தொடரை வெள்ளையடிப்புச் செய்து 3:0 எனக் கைப்பற்றியுள்ளது. பாகிஸ்தான் அணி வெற்றி பெறக் கூடிய வாய்ப்பிருந்த போதும், இறுதி ஓவரை வீசிய கிளன் மக்ஸ்வெல் ஓட்டம் எதனையும் வழங்காமல் 2 இலக்குகளைக் கைப்பற்றி ஆஸ்திரேலியா அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.
அபுதாபியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய ஆஸ்திரேலியா அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்டீபன் ஸ்மித் 77 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 56 ஓட்டங்களையும், ஜேம்ஸ் பக்னர் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சொஹைல் தன்வீர் 3 இலக்குகளையும், சஹிட் அப்ரிடி 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பாடிய பாகிஸ்தான் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆஷட் சபிக் 50 ஓட்டங்களையும், சொஹைப் மக்சூட் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கேன் ரிச்சட்சன், கிளன் மக்ஸ்வெல், ஜேம்ஸ் போல்க்னர், சேவியர் டொஹர்ட்டி ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலம் தரப்படுத்தல்களில் ஆஸ்திரேலியா அணி இழந்த முதலிடத்தை மீண்டும் பெற்றுள்ளது. கிளன் மக்ஸ்வெல் போட்டியின் நாயகனாகவும், ஸ்டீபன் ஸ்மித் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (த)

# வெற்றியின் இரகசியம் இதுதான்



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் மேற்கொண்ட புதிய வியூகம் வெற்றிக்கு கைகொடுத்தது என இந்திய அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.
இந்தியா வந்துள்ள மேற்கிந்திய தீவுகள் அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் போட்டியில் தோல்வியடைந்த இந்திய அணி, டெல்லியில் நடந்த 2ஆவது போட்டியில் வெற்றி பெற்றது.
இந்த வெற்றி குறித்து டோனி கூறுகையில், விராட் கோஹ்லி அனுபவமான வீரர். அணிக்கு என்ன தேவை என்பதை நன்கு அறிவார்.
துடுப்பாட்ட வரிசையில் 3ஆவது வீரராக வரும் இவரை 4ஆவது வீரராக களமிறக்குவது என வியூகம் வகுத்தோம். இது அணிக்கும், இவருக்கும் சிறந்தது என்பதை புரிந்து கொண்டார். அரைசதம் கடந்து வெற்றிக்கு கைகொடுத்தார். மேலும் எமது பந்து வீச்சாளர்கள் திறமையுடன் செயல்பட்டனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர்களுக்கு நெருக்கடி தந்தனர். குறிப்பாக, ஷமி அசத்தலாக பந்துவீசினார். தொடர்ந்து போட்டியில் வெற்றி பெறவே விரும்புகிறோம். தனி ஒரு வீரர் அணியில் இடம்பெறுவதை விட, ஒட்டுமொத்த அணியின் நலனில்தான் கவனம் உள்ளது. மேற்கிந்திய தீவுகள் அணியை ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது. அதிரடியாக விளையாடக்கூடிய வீரர்கள் அதிகம் பேர் உள்ளனர் என்று கூறியுள்ளார். (த)




# மண்ணை கௌவிய மெஸ்ஸி, ரொனால்டோ

மெஸ்ஸியின் அர்ஜென்டினா, ரொனால்டோவின் போர்த்துக்கல் அணிகள் நட்பு உதைபந்து போட்டியில் தோல்வியடைந்துள்ளன.

சீனாவில் உள்ள பீஜிங்கில் நடந்த சர்வதேச நட்பு ரீதியிலான உதைபந்து போட்டியில் ஆர்ஜென்ரீனா, பிரேசில் அணிகள் மோதின.

இதன் முதல் பாதியில் 28ஆவது நிமிடத்தில் பிரேசில் அணியின் தியாகோ டார்டெலி ஒரு கோல் அடித்தார். இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய தியாகோ மீண்டும் (64ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து பிரேசில் அணியை வலுப்படுத்தினார்.

பெனால்டி' வாய்ப்பை நட்சத்திர வீரர் மெஸ்ஸி வீணடித்தார். இதன் பலனாக ஆர்ஜென்ரீனா அணி 0-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

மற்றொரு நட்பு போட்டியில் போர்த்துக்கல் அணி, பிரான்ஸை சந்தித்தது. பிரான்ஸ் அணிக்கு கரீம் பென்சிமா (3ஆவது நிமிடம்), பால் போக்பா (69ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர்.

மெஸ்ஸி 51ஆவது நிமிடத்தில் கோல் அடிக்கும் வாய்ப்பைநழுவவிட்டார். கடைசியில், போர்த்துக்கல் அணிக்கு ரிக்கார்டோ (77ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். முடிவில், போர்த்துக்கல் அணி 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. (த)


# கோடிகளைக் குவிக்கும் கவாஸ்கர், சாஸ்திரி

இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான கோஹ்லி, டோனியை விட முன்னாள் அணித்தலைவர்களான சுனில் கவாஸ்கர், ரவி சாஸ்திரி அதிக சம்பளம் பெறுகின்றனர்.

இந்திய அணியின் இயக்குனர் மற்றும் ஐ.பி.எல் பொறுப்பில் உள்ள ரவி சாஸ்திரி, சுனில் கவாஸ்கர் ஆகியோர் ஆண்டுக்கு ரூபா 2 கோடி சிறப்பு ஊதியமாக பெறுகின்றனர்.

மேலும் ரவி சாஸ்திரி 2015ஆம் ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ணம் வரை இந்திய கிரிக்கெட் அணியின் இயக்குனராக செயல்படவுள்ளார்.

ஏற்கெனவே வர்ணனையாளர் பணிக்காக கவாஸ்கர், ரவி சாஸ்திரி ஆண்டுக்கு ரூபா 4 கோடி வருமானம் பெறும் நிலையில், உச்சநீதி மன்றம் சிறப்பு ஊதியமாக ரூ.2.37 கோடி அளிக்க உத்தரவிட்டுள்ளது.



இதன் மூலம் இவர்களுக்கு ஆண்டுக்கு ரூபா 4 கோடி என்ற நிலையில் உள்ள ஊதியம் தற்போது ரூபா 6 கோடியாக உயர்ந்துள்ளது.


இந்திய அணியின் நட்சத்திர வீரர்களாக உள்ள அணித்தலைவர் டோனி, கோஹ்லி இவர்களை விட குறைவான ஊதியமே வாங்குகின்றனர்.

டோனி 35 போட்டிகளில் விளையாடி ரூபா 2.59 கோடியும், கோஹ்லி 39 போட்டிகளில் விளையாடி ரூபா 2.75 கோடியும் வாங்கியுள்ளனர்.

தற்போது வெளியாகியுள்ள போர்ப்ஸ் பத்திரிகையில், அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் இந்திய அளவில் டோனி முதல் இடத்தையும், சர்வதேச அளவில் 5வது இடத்தையும் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (த)

# டிராவிட் என் உண்மையான குரு

## சுயசரிதையில் உருகும் பீற்றர்சன்



இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் கெவின் பீற்றர்சன் தனது சுயசரிதை புத்தகத்தில் டிராவிட்டைப் பாராட்டி கூறியுள்ளார்.

கெவின் பீட்டர்சன் இங்கிலாந்து அணி நிர்வாகத்துடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார்.

இந்தநிலையில் அவர் தனது சுயசரிதை பற்றிய புத்தகம் ஒன்றை இந்த வாரம் வெளியிடுகிறார். இந்த புத்தகத்தில் பீற்றர்சன் இங்கிலாந்து அணியில் உள்ள சில வீரர்களை பற்றி கடுமையாக விமர்சித்து உள்ளார்.

மேலும் தனது சுயசரிதையில் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் ராகுல் டிராவிட்டை பாராட்டியுள்ளார். அவரை தனது குரு என்றும் வெகுவாக புகழ்ந்து எழுதி உள்ளார்.

இதுபற்றி பீற்றர்சன் அந்த புத்தகத்தில் கூறியிருப்பதாவது.

நான் விளையாடிய காலகட்டத்தில் டிராவிட் இந்திய துடுப்பாட்டக்காரர்களின் ஹீரோவாக திகழ்ந்தார். சுழற்பந்தை எதிர்கொள்வதில் அவர் மிகவும் திறமையானவர்.


நான் அவரிடம் சுழற்பந்தை எதிர்கொள்வது பற்றிய பல்வேறு நுணுக்கங்களை கேட்டு அறிந்தேன். ஈமெயில் மூலம் எங்களது உரையாடல்கள் இருந்தன். எனது கிரிக்கெட் ஆட்டம் மேம்பாடு அடைய டிராவிட் மிகவும் உதவியாக இருந்தார்.

ஐ.பி.எல். போட்டியும் எனக்குப் பல்வேறு வகையில் உதவியாக இருந்தது. எனது எதிர்காலம் இனி ஐ.பி.எல். போட்டி தான். என்னால் அந்தப் போட்டியில் தொடர்ந்து இயல்பாக விளையாட முடியும் என்று கூறியுள்ளார்.(த)

# மரண அறிவித்தல்

## முருகேசு கிருபாகரன்

(ஒய்வு பெற்ற ஆசிரியர்)



யாழ்.புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 73 மணல்தறை ஒழுங்கை,கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கிருபாகரன் கடந்த (11.10.2014) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலம் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்-யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் விஷ்ணுதாஸ், தமிழினி(லண்டன்), யாழினி(ஆசிரியை, யாழ் /விக்கினேஸ் வரா வித்தியாலயம்-தொல்புரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புச் சகோதரரும், மணிவண்ணன்(சுவிஸ்), அவர்களின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, இரத்தினம், சோமசுந்தரம், சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் இன்பன் (லண்டன்), கல்பனா (இந்தியா), இளங்கோவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌரிகா(சுவிஸ்) அவர்களின் சிறிய தந்தையும் பிரவீன், மதுஷன், பிரவீனா(லண்டன்), ஜகான்(இந்தியா) ஜகீர்தன், பானுஷன், சுகிர்தா(சுவிஸ்), சத்விகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்மு.ப 10.00மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# பொல்லார்ட்டை விழி பிதுங்க வைத்த டோனி




மேற்கிந்தியத் தீவுகள் அணியின் நட்சத்திர வீரர் பொல்லார்ட், தான் செய்த தேவையில்லாத செயலால் தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை நடந்த 2ஆவது ஒருநாள் போட்டியில் முதலில் இந்திய அணி துடுப்பெடுத்தாடியது. 6 இலக்குகள் இழப்புக்கு 245 ஓட்டங்கள் குவித்திருந்த நிலையில் 48ஆவது பந்துப்பரிமாற்றத்தை வெய்ன் பிராவோ வீசினார்.

அந்த பந்துப் பரிமாற்றத்தின் 2ஆவது பந்தை எதிர்கொண்ட புவனேஷ்வர் குமார் அதை அடிக்க அது நேராகப் பொல் லார்ட் கைக்குச் சென்றது. இந்தநிலையில் அந்த பந்தை பிடித்த பொல்லார்ட் அதைத் திரும்பி வீசாமல் அதைக் கோட்டை விட்டவர் போல பாவனை செய்து கொண்டிருந்தார். ஆனால் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் இதை உணர்ந்த டோனியும், புவனேஷ்வர் குமாரும் மீண்டும் வேகமாக ஓடி மற்றொரு ஓட்டம் எடுத்தனர். இந்தச் சம்பவம் மூலம் பொல்லார்ட் தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டார். இதனையடுத்து. ஒரு நிமிடம் அரங்கமே ரசிகர்களின் ஆரவாரத்தால் அதிர்ந்து போனது. இந்தப் போட்டியில் இந்தியா 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (த)




# வேட்டியுடன் ஆட்டம் போட்டார் பிராவோ

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டெய்ன் பிராவோ தமிழில் உலா என்ற ஒரு படத்தில் வேட்டியில் நடனமாடிக் கலக்கியுள்ளார். தற்போது இந்தியா- மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் அசத்தி வரும் பன்முக வீரர் பிராவோ இந்த படத்தில் 'ஏண்டா' என்ற ஒரு பாடலுக்கு சுமார் 1.26 நிமிடத்துக்கு வேட்டியில் கை, கால்களைத் தூக்கி நடனமாடி அசத்தியுள்ளார். (த)

# அரசின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் மக்கள்

## கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.14

அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் எம்.எஸ். எம்.சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற பாராட்டு விழாவில் உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்;

"ஜனாதிபதித் தேர்தலா, பொதுத் தேர்தலா என்ற வாத, விவா தங்களுக்கு அப்பால் எந்தத் தேர்தல் வந்தாலும், அது குறித்து மக்கள் முன்னதாகவே முடிவெடுத்து விட்டார்கள்.

நாங்கள் கடந்த காலங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் அவரது அரசுக்கும் பூரண ஆதரவை வழங்கி யிருந்தோம். உள்ளூராட்சித் தேர்தலிலும் மாகாணசபைத் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அரசுடன் நின்று ஆதரவளித்தோம். அப்படியி ருந்தபோதும், இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து



விட்டார்கள்.

இந்த வேளையில், பெரும் பான்மைச் சமூகத்தினரின் மத்தியில் சிறுபான்மையின ரைப் பற்றிய தெளிவான புரி தல்களை, சிறுபான்மையி னருக்குள்ள உரிமைகளை, அச்சமின்றி வாழக்கூடிய பாது காப்பை ஜனாதிபதி பகிரங்க மாக வலியுறுத்தி தெளிவுபடுத்த வேண்டும். அப்படியானால் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதும் இந்த அரசின் மீதும் மக்கள் நம்பிக்கை வைப்பார்கள்.

கடந்த பிரதேச சபைத் தேர் தலில் நாம் ஆளும் கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டபோது, கணிசமான வாக்குகளை பெற் றுக் கொண்டோம். கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் அரசுடன் சேர்ந்து போட்டி யிட்டு ஆசனங்களை பெற்றுக் கொடுத்தோம்.

அவ்வாறிருந்தும், இன்று கிழக்கு மாகாணத்தில் எமது மாகாணசபை இருக்கின்ற திருகோணமலை நகரத்தில் பாதுகாப்பு உயர் வலயத்தி லுள்ள பல நூறு வருடங்கள் பழைமையான கரிமலை யூற் றுப் பள்ளிவாசலுக்கு இந்த அரசால் பாதுகாப்பு அளிக்க முடியாமல் போய் விட்டது.

மக்கள் பிரதிநிதிகளான எங்க ளுக்குக்கூட, அங்கு சென்று பள்ளிவாசலை பார்க்க முடியாத அளவுக்கு இன்று கிழக்கு மாகாணம் மாறி விட்டிருக்கி றது.

எனவே, இனியொரு தேர்தல் வருகின்றபோது கட்சி அரசி யல் தலைமைகள் என்ன முடி வுகள் எடுத்தாலும், அதற்காக காத்திருக்காமல் நடப்பு நிகழ் வுகளை வைத்து மக்கள் ஏற் கெனவே முடிவுகளை எடுத்து விட்டார்கள்.

இந்த அரசு தனது சொந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான் மைச் சமூக மக்களை மிக இதயசுத்தியோடு அவர்கள் பெரும்பான்மையினரோடு இணைந்து வாழ்கின்ற, இன நல்லுறவை வலுப்படுத்து கின்ற விடயங்களை நாட்டின் தலைவர் என்கின்ற வகையில் ஜனாதிபதி மீண்டும் வலியு றுத்துகின்ற போதே இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கை வைப்பார்கள் -என்றார். (வ)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 210 நாய்களுக்கு கருத்தடை

மட்டக்களப்பு, ஒக்.14

மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் ஆரையம்பதி பிரதேச சபை பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 7ஆம் திகதி யிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரை 210 நாய்களுக்கு கருத் தடை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டதாக ஆழிப்பேரலை கால் நடை மக்கள் கூட்டமைப்பின் முகாமையாளரும், கால்நடை வைத்தியருமான ஆர்.தினேஸ் வெல்லாவெல தெரிவித்தார்.

ஆழிப்பேரலை, கால்நடை மக்கள் கூட்டமைப்பின் ஏற் பாட்டில், மட்டக்களப்பு கால் நடை வைத்திய சுகாதார அலு வலகம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார அலுவலகம், மட்டக் களப்பு சுகாதார அலுவலகம், மட்டக்களப்பு மாநகரசபை ஆரையம்பதி சுகாதார அலு வலகம், ஆரையம்பதி பிரதேச சபை ஆகியவற்றின் அனு சரணையுடன் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், மட்டக்களப்பு மாநகரசபை பிரிவில் 3 தினங் களும் ஆரையம்பதி பிரதேச சபை பிரிவில் 3 தினங்களும் இந்தத் திட்டம் முன்னெடுக் கப்பட்டது.

நாய்களின் இனப்பெருக்கத் தைக் குறைப்பதற்கும் நீர் வெறுப்பு நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்குமாக கருத்தடை சிகிச்சையும் தடுப்பூசி வழங் கலும் முன்னெடுக்கப்பட்டதாக ஆழிப்பேரலை கால்நடை மக்கள் கூட்டமைப்பின் கால் நடை வைத்திய அதிகாரி மருத் துவர் ஜூட் சுவேன் தெரிவித் தார். (வ)

## சூரிய மின்விளக்கு அமைக்கும் பணி



மட்டக்களப்பு, ஒக்.14

அட்டாளைச்சேனை, கோணா வத்தைக் கரையோர உடற் பயிற்சி நடைபாதை அமைக் கும் பணியையும் சூரிய மின் விளக்கு அமைக்கும் இரண் டாம் கட்ட வேலைத் திட்டத் தையும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் வீடமைப்பு, கிராமிய மின்சார அமைச்சர் மீரா சாகிபு உதுமாலெப்பை சனிக் கிழமை நேரில் சென்று பார் வையிட்டார்.

கிழக்கு மாகாண அமைச்சு மற்றும் பொருளாதார அபி விருத்தி அமைச்சும் இதற்காக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை மேற்கொண் டுள்ளன.

அட்டாளைச்சேனை றகுமானி யாபாத் மற்றும் 12,13,03ஆம் பிரிவிலுள்ள கரையோரங் களின் 2 கிலோ மீற்றர் தூரம் வரையிலான நடை பாதை கற்களால் அமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும், கரையோரங்களின் இருமருங்கிலும் சூரிய சக்தி யில் இயங்கக் கூடிய மின் விளக்குகளும் பொருத்தப் பட்டுவருகின்றன. (வ)

## செட்டிபாளையத்தில் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஒக்.14

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செட்டிபாளையம் கடற்கரையி லிருந்து செட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த மயில் வாகனம் இராசதுரை (வயது-56) என்பவரின் சடலத்தை நேற்றுக் காலை மீட்டுள்ளதாக களுவாஞ் சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த 3 பேர் மீன் பிடிப்பதற்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கடலுக்குச் சென்றனர்.

அவர்கள் கடற்கரையிலிருந்த தோணியை கடலுக்குள் தள்ளிக்கொண்டிருந்த போது, அங்கு வீசிய சுழல் காற்றாலும் பெரிய கடல் அலை யாலும் குறிப்பிட்ட நபர் காணாமற் போன துடன், தோணியும் கவிழ்ந்து 3 துண்டு களாக உடைந்தது.

சம்பவத்தில் மற்றும் ஒருவர் சிறு காயங் களுக்கு உள்ளான நிலையில் நேற்று முன்தினம் களு வாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் கூறினார்.

மூன்றாவது நபர் எந்த வித பாதிப்புமின்றி உயிர் தப்பியுள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட சடலம் களுவாஞ்சிக் குடி மருத்துவமனை யில் ஒப்படைக்கப்பட் டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்தொடர் பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசார ணைகளை மேற் கொண்டுள்ளனர். (வ)

### ஏல விற்பனை

மருதனார்மடம், சுன்னாகத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத் தில் பாவித்துப் பழுதடைந்த கணினி உப கரணங்கள் மற்றும் தளபாடங்கள் 20.10. 2014 அன்று முற்பகல் 10.00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வட மாகாணம்.

(சி16891)
(12.3.6)

### தவறிவிட்டது


5" நீளம், வெள்ளி நிறமுடைய அயன்சேவ் திறப்பு யாழ்ப்பாணத்துக்கும், கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 078 272 9015

(53207)(12.3.6)

### மரண அறிவித்தல்

#### கனகசபை அழகராசா



மறவன்புலோ மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட கனகசபை அழகராசா 12.10.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகசபை- பொன் னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமநாதர்-மனோன்மணி தம்பதியரின் மருமகனும், உமா தேவி யின் அன்புக்கணவரும், சபேசினி, சாந்தினி (கனடா), சாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மராஜா, சதானந் தன் (கனடா), சோபனா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சிவபுண்ணியம், தறுமலிங்கம் மற்றும் பறுவதம், நடராஜா, கந்தையா ஆகியோரின் சகோதரனும், நாகேஸ்வரி, சின்னத்தங்கம், விநாயகமூர்த்தி, நிர்மலாதேவி, நாகராணி, மகேஸ்வரன், இரத்தினகாந்தி, கணேஸ்வரன், குமரேஸ்வரன், ஜெயமளாதேவி, கருணாதேவி ஆகியோரின் மைத்துன ரும், தரணிகாந், தஹ்ஷாயி, தேனுகாந், சுமிகா, சுருதிகா, சகானா, சாந் மகிழ்வாமி, சாஸ் வதன், சபீனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தனிப் பனையடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மறவன்புலோ மேற்கு, சாவகச்சேரி. (53209)(6.4.3) தகவல்: குடும்பத்தினர்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு
ஆசிரியர்களுக்கான அதி உயர்விருதான
பிரதீபா பிரபா விருதினைப் பெற்ற
எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி
அரியமலர் லோகேஸ்வரன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில்
பெருமகிழ்வடைகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், வேலணை.

### RAVEENS E.M.C KARAVEDDY
### yr-6 Admission 2015

(English Medium) ( Scholors only)

Forms for Admission Test are available

Closing date : 25.10.2014 (Saturday)
Director : P. Easwaranathan B.Sc (Agr) Hons
T.Phone : 021 226 3321

(51963)(10.6.3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக ஆசிரியர் தினமான
06.10.2014 அன்று
அதிமேதகு பிரதமர் டி.எம்.ஜயரத்ன
அவர்களின் தலைமையில்
நல்லாசிரியர் விருதான
'பிரதீபா பிரபா'
விருது பெற்ற எமது பாடசாலை
ஆசிரியர்
திருமதி சாரத பவானி
சுந்தரலிங்கம்
(B.A., Dip. in Edu) SLTS - I
அவர்கள் விருதினைப் பெற்றதையிட்டு மனமுவந்து
வாழ்த்துகின்றோம். மேலும் பல பட்டங்கள் பெற்று
நல்லாசியுடன் வாழ
இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர் :
வட்டமேசை
யா/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி

(47310)(7.6.3)


# மாதுலுவாவே சோபித தேரர் சில கட்சிகளுடன் இணக்கம்

கொழும்பு, ஒக்.14

சமூக மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் சில அரசியல் கட்சிகளுடன் இணக்கத்துக்கு வந்துள்ளார். தம்மை நேற்றுச் சந்தித்த கட்சிகளுடனேயே இந்த இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

மெளபிம ஜனதாக்கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சரான ஹேமகுமார நாணயக்காரா நவ சிஹல உறுமய மற்றும் 5 கட்சிகளின் பிரதிநிதிகள் சோபித தேரரை சந்தித்தனர்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வி கண்டுள்ள நிலையில் அதனை நிறைவேற்ற அனைத்துக் கட்சிகள் மத்தியிலும் ஓரிணக்கம் ஏற்பட வேண்டும் என்று இதன் போது சோபித தேரர் குறிப்பிட்டார்.



## ஓட்டோ விபத்தில் இளைஞர் காயம்

சாவகச்சேரி, ஒக்.14

வீதியின் குறுக்கே நாய் ஓடியதால் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. ஓட்டோவில் பயணித்த இளைஞருக்கு கால்களில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று மட்டுவில் தெற்கில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த தேவதாஸ் ஜட்சன் (வயது-18) என்பவரே இரு கால்களும் பாதிப்படைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-9)

## கத்தி வெட்டி பெண்ணொருவர் காயம்

மகள் பற்றையை வெட்டித் துப்புரவு செய்து கொண்டிருந்த சமயம், கத்தி அருகில் நின்ற தாயின் முகத்தில் தாக்கி காயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் கைதடியில் நடந்துள்ளது. குமரநகரைச் சேர்ந்த சின்னத்துரை ராஜேஸ்வரி (வயது -59) என்பவரே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாயும் மகளும் இணைந்து வளவு துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும், மகள் வெட்டிப் போடும் பற்றைகளை தாய் அப்புறப்படுத்திக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்றும் தெரியவருகின்றது. (ற-9)

**கட்டடம் வாடகைக்கு உண்டு**

இல.66, கன்னாதிட்டி சந்தியில் அமைந் துள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

(Soft Logic இற்கும் Cargicls இற்கும் இடைப்பட அமைந்துள்ளது)

தொ.பே: 077 032 8362 (53210) (7.6.3)

தொடர்ச்சி

### மாணவர்

போதும், பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். அதன் பின்னர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

யாழ்தேவி ரயிலில் பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாவற்குழியில் அமைக் கப்பட்ட புதிய ரயில் நிலையத்தை திறந்து வைத்தார். ரயில் நிலையத்தை திறந்து வைத்த பின்னர், அங்கு நின்று பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு ஜனாதிபதி கை கொடுத்தார்.

ஜனாதிபதி கைகொடுக்க, ஆர்வக்கோளாறால் மாணவிகள் முண்டியடித்து அவரின் கைகளைப் பற்றினர். அதனால் ஓரிரு நொடிப் பொழுது தடுமாறினார் ஜனாதிபதி மஹிந்த. ஆயினும் பின்னர் அவர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். பின்னர் பாதுகாப்பு பிரிவினர் ஜனாதிபதியை பத்திரமாக அழைத்துச் சென்றனர்.(ற-5)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை நடன ஆசிரியை திருமதி யாழினி இளங்கோவன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**முருகேசு கிருபாகரன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம் யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம் சுழிபுரம். (53211) (7.6.3)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 18 . 05 . 1977 | 14 . 09 . 2014 |

கடந்த 14.09.2014 இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

**நாகராசா அகிலன்**

B.Com, MA

(நிதி முகாமையாளர்- வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.)

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (14.10.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மேலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் வைத்தியசிகிச்சையின்போதும், மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்தும் தோள்கொடுத்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மஞ்சத்தடி, இணுவில்.
077 899 5431.

குடும்பத்தினர். (53216)(10)

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



செல்வி விஜயசேகரம் வினோதினி

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவி 2014 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று சித்திபெற்றுள்ளதையிட்டு இவர் மேன்மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா (சந்திரா), தாத்தா, சித்திமார், மாமாமார், அம்மா, தம்பி (53212)(10.6)

**கண்ணீர் அஞ்சலி**



பாலபாஸ்கரன் கிரிஷாந்

(மாணவமுதல்வன் A/L J.H.C 2012)

எமது ஆருயிர் நண்பன் பாலபாஸ்கரன் கிரிஷாந் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2012 உயர்தர மாணவர்கள்
யாழ். இந்துக் கல்லூரி.

**10ஆம் ஆண்டு நினைவுகள்**

தோற்றம் 07 - 02 - 1933

மறைவு 04 - 10 - 2004



அமரர் சின்னத்தம்பி-இராசு (J.P)

(உத்தரவு பெற்ற வியாபாரி)

அப்பா ஆண்டுகள் பத்து கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் ஆலமரமாய் இருந்து
அறிவுரைகள் கூறி எம்மை ஏணியாக உயர்த்தி
வைத்த எங்கள் அப்பாவே - கனவுகள்
கலைந்து போகலாம் ஆனால் உங்கள்
நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அழியாது

விநாயகர் பல்பொருள் வாணிபம்
பழம் றோட், கந்தர்மடம்.
021 222 6565

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**

சிவஞானம் பத்மநாதன்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)



அல்வாய் வீதி இமையாணன்மேற்கு உடுப்பிட்டியை சேர்ந்த சிவஞானம் பத்மநாதன் (13.10.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் அன்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற Dr.காசிப்பிள்ளை (வேதாரணியம்)-பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் பத்மாவதியின் கணவனும் பிரேமாவதி (முகாமைத்துவ உதவியாளர்-நகரசபை வல்வெட்டித்துறை), பிறேம் சிவபத்மன், (தொழில்நுட்ப அலுவலர் பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி), பிறேம் வாசுகி (மதியக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, லீலாவதி, சச்சிதானந்தம் (கனடா), மகாதேவன் மற்றும் சிவராசா(வாமதேவன்- கனடா), ஆகியோரின் சகோதரனும் உருத்திராபதி(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்), காலஞ்சென்றவர்களான கங்காபதி, பூபதியம்மா, சோமாபதி மற்றும் அனுசியாபதி (நல்லூர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00மணியளவில் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல் :
குடும்பத்தினர்.
077 9411393

## தொடர்ச்சிகள்

### 24 வருடங்களின்

நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்தனர். இவர்கள் இலங்கை மற்றும் இந்திய தேசியக் கொடிகளைக் கைகளில் ஏந்தியவாறு கைதட்டி ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர்.

காலை 10.10 மணிக்கு பளையிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி ரயில் கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி முதலான 3 பிரதான ரயில் நிலையங்களையும் 7 உபரயில் நிலையங்களையும் கடந்து 11.13 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

மகிழ்ச்சியில் மக்கள்

கடந்த 24 வருடங்களின் பின்னர் யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணத்துக்கு வந்ததையிட்டு யாழ். மக்கள் பெரும் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

குறிப்பாக பிரதான ரயில் நிலையங்களான பளை, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்ப்பாணம் ஆகியவற்றில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர். மேற்படி அனைத்து ரயில் நிலையங்களிலும் பெரியோர், சிறியோர், பாடாசாலை மாணவர்கள் என அனைவரும் இலங்கை மற்றும் இந்திய தேசியக்கொடிகளை ஏந்தி நின்றனர். அத்துடன் யாழ்தேவி ரயிலை தமது கையடக்கத் தொலைபேசியிலும், கமராவிலும் ஒளிப்படம் எடுத்தனர்.

பளையிலிருந்து யாழ். நோக்கிச் செல்லும் ரயில் வீதியின் இரு பக்கங்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக கூடிநின்று கை அசைத்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

யாழில் கோத்தா

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குச் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. அத்துடன் இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்கள். (த-5)

### காப்புறுதிச்

இதற்குக் காரணம்.

வெளிக்கள அரச உத்தியோகத்தர்கள் 4 ஆயிரத்து 500 பேருக்கு நேற்று மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதாக முன்னரே அறிவிக்கப்பட்டது. அதன்படி அவர்கள் அனைவரும் மைதானத்தில் கூடி நின்றனர்.

ஜனாதிபதி அங்கு சென்று மோட்டார்சைக்கிள்களை வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்து விட்டுச் சென்றார். அதன் பின்னர் பிற மாவட்டங்கள் மற்றும் நெடுங்கேணி, பருத்தித்துறை மற்றும் தீவகப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இன்றும் (நேற்று) ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு நாளையும் (இன்று) மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைக்கப் படும் என்று ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் அவற்றை வழங்கிக் கொண்டிருக்கும் போதே அவர்களுக்கிடையே குழப்பம் ஏற்பட்டது. மோட்டார் சைக்கிள்களுக்குக் காப்புறுதிப் பத்திரம் பெறுவதற்கு ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும், பின்னர் முழுமையாகக் காப்புறுதி செய்வதற்கு 5 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும் என்றும் அங்குள்ள காப்புறுதி தாரர்களால் கூறப்பட்டது.

அந்தக் காப்புறுதி நிறுவனம் வடக்கில் எங்குமே தனது கிளை நிறுவனங்களை வைத்திருக்கவில்லை. அதனால் இங்கு விபத்து ஏதாவது இடம்பெற்றால் காப்புறுதி பெறுவது எப்படி? என்ற சந்தேகம் எழுப்பப்பட்டமையாலேயே மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்யச் சென்றவர்களுக்கு அவ்வாறு குழப்பம் ஏற்பட்டது. இதனால் குறித்த காப்புறுதி நிறுவனத்தினருடனும் அலுவலர்கள் முரண்பட்டுக் கொண்டனர்.

எனினும் விரைவில் 5 மாவட்டங்களிலும் தமது கிளைகளை அவர்கள் ஆரம்பிப்பர் என்று கூறப்பட்டுள்ளது. (த-4)

### பெண்களே

வருகிறது. அத்துடன் தாக்குதல் நடத்திய ஆண்களை (கணவன், தந்தை, சகோதரன், உறவினர்) மருத்துவமனை விடுதிக்கு அழைத்து அவர்களுக்கு ஆற்றுப்படுத்தலுடன் அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

தற்போது வெளியாகும் திரைப்படங்களைப் பார்த்து விட்டு பெண்களே பெண்களைத் தாக்கும் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுப் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று தினங்களில் பெண் ஒருவர் மற்றொரு பெண்ணைத் தாக்கி வீழ்த்திக் காலால் மிதித்துப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார். மற்றொரு பெண் 3 மாதக் கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் இரு கைகளாலும் இடித்துத் தாக்கியுள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டு வரும் பெண்களை எந்த விடுதியில் அனுமதிப்பது என மருத்துவமனை நிர்வாகம் குழப்பமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (த-9)

### ஆசிரியர்களுக்கும்

கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த வெளிக்கள அரச உத்தியோகத்தர்களுக்கு வரியில்லாது மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்துள்ளார். ஆசிரியர்களும் அரச உத்தியோகத்தர்களே. அவர்களில் ஆசிரிய ஆலோசகர்களுக்கும், கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கும் மோட்டார் சைக்கிள்களை வழங்க வேண்டும். நாட்டில் பல பிரதேசங்களிலும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளபோதும் ஆசிரியர்களுக்கு மாத்திரம் வழங்கப்படாதமை தொடர்பிலேயே சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளதோடு ஆசிரியர்களுக்கும் அவற்றை வழங்கவேண்டும் - என்றார். (த-4)

### தினமும்

முற்பகல் 11 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மாலை 5.40 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தை சென்றடையும்.

4022 இலக்க குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி சேவை பிற்பகல் 1.45 மணிக்கு யாழ். நிலையத்தில் இருந்து புறப்பட்டு இரவு 8 மணிக்குக் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

4090 இலக்க இரவு தபால் ரயில் சேவை இரவு 7.05 மணிக்கு யாழ். நிலையத்தில் இருந்து புறப்பட்டு அதிகாலை 4.23 மணிக்குக்கொழும்புபுறக்கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

இதேவேளை, குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி ரயில் யாழ். நிலையத்தில் இருந்து பிற்பகல் 1 மணிக்குப் புறப்பட்டுப் பளை ரயில் நிலையம் வரை சேவையில் ஈடுபடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-14-ரி)

### முஸ்லிம்களின்

வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் போது யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் வீட்டுத் திட்டம் தொடர்பில் பிரச்சினை எழுப்பப்பட்டது. முஸ்லிம் மக்கள் மீது பிரதேச செயலாளர் பாகுபாடு காட்டுகின்றார் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேரடியாக குற்றம் சுமத்தினார்.

இதன் போது யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், "முஸ்லிம் மக்கள் இங்கு பதிவுகளை மேற்கொண்டு விட்டு புத்தளத்தில் இருக்கின்றனர். அத்துடன் இங்குள்ள முஸ்லிம் மக்களுக்கு காணிகளும் இல்லை. இதனால் வீட்டுத் திட்டம் வழங்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன"- என்று தெரிவித்தார். அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "அப்படியானால் தொடர்மாடி வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்" என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாண பிரதேச செயலர், "யாழ். மாவட்டதில் குடியேறுவதற்காக 2 ஆயிரத்து 22 குடும்பங்கள் பதிவு செய்துள்ளன. ஆனால் 773 குடும்பங்களே இங்கு இருக்கின்றன" என்று சுட்டிக்காட்டினார். அத்துடன் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 246 முஸ்லிம்கள் வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களை ஆய்வு செய்வதற்காக உத்தியோகத்தர்கள் சென்றபோது 89 குடும்பங்கள் மாத்திரமே தங்கியிருந்தன. இதன் பின்னர் 157 குடும்பங்களின் பெயர்களையும் மீளவும் புள்ளியிடல் உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக், "இப்போது நடந்து கொண்டிருப்பது கட்டம் - 4. நீங்கள் கட்டம் - 1 இல் எத்தனை முஸ்லிம்களுக்கு வீடு கொடுத்தீர்கள்?" என்று கேட்க, "யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு கட்டம் - 3 இல்தான் தெரிவு செய்யப்பட்டது" என்று பிரதேச செயலர் பதிலடி கொடுத்தார்.

இதன் பின்னரும், இந்த விடயம் நீண்டு செல்வதை விரும்பாத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முஸ்லிம் மக்களின் வீட்டுத் திட்டம் தொடர்பில் ஆராய குழு நியமித்தார். அமைச்சர்களான ரிசாட் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோரே அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-5)

### இரணைமடு

யின் வேலை. 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தில் நான் தலையிடமாட்டேன். ஆனாலும் இரணைமடுத் திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண சபை முதல்வருடன் நானே நேரடியாகப் பேசுகின்றேன்"- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி மீளாய்வு இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மாவட்ட அபிவிருத்தி நிலைமை தொடர்பில் குறிப்பிடும் போது, இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு பலவீனமாகக் காணப்படுவதால் அதனைப் புனரமைக்க வேண்டும் என்பது பற்றிக் குறிப்பிட்டார்.

அதனையடுத்து இரணைமடு விவகாரம் பற்றி பேசப்பட்டது. வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குறிப்பிடும் போது, "வடக்கு மாகாணசபையில் இரணைமடுத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டமை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று அவைத் தலைவர் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கடிதம் எழுதியுள்ளார். ஆனால் வடக்கு மாகாண சபையில் எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு பொய் கூறியுள்ளனர்." என்று குறிப்பிட்டார்.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரசு சார்பானவர்கள் மாத்திரமே கலந்து கொண்டிருந்தமையால் சகலரும், இரணைமடு குடிதண்ணீர் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றே குறிப்பிட்டார்.

அப்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "நேற்று இரவு (நேற்று முன்தினம்) இரணைமடுக் குளத்தின் அருகிலேயே தங்கியிருந்தேன். இன்று காலை (நேற்று) இரணைமடுக் குளக்கட்டின் மீது நடந்தேன். அந்தக் குளக்கட்டு மிகவும் பழமையானது என்று தன்னால் உணரக் கூடியதாக இருந்தது"- என்று தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் கொடுப்பது பற்றி பின்னர் பார்க்கலாம். முதலில் இரணைமடு குளக்கட்டு புனரமைக் கப்பட வேண்டும்"- என்றும் அவர் குறிப்பிட்டார்.

அப்போது, கொழும்பு அரசின் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், இரணைமடுக் குளத்தை கொழும்பு அரசுக்கு மாற்றித் தந்தால் தாமே அந்த அணைக்கட்டை புனரமைக்கத் தயார் என்று தெரிவித்தனர். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, "இது 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைக்குரிய விடயம். நான் அதில் தலையிட முடியாது. வேண்டுமானால் வடக்கு முதலமைச்சருடன் நேரடியாகப் பேசிவிட்டு அதுகுறித்து தீர்மானிக்கலாம்"- என்று தெரிவித்தார். (ற-5)

### வடக்கு

விருத்தி நடவடிக்கைகளில் மத்திய அரசு, மாகாண அரசு என்று வேற்றுமை பார்க்கத் தேவையில்லை. அபி விருத்தியும் அரசியலும் ஒன் றல்ல. அரசியல் செய்வதற்கு வேறு வழிகளும், வேறு இடங்களும் இருக்கின்றன. மக்களுடைய நலன்சார் விடயங்களில் இரு அரசுகளும் ஒன்றிணைந்து செயலாற்றலாம்."- என்றும் அவர் அதன்போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

"மாகாண அபிவிருத்தி தொடர்பிலான நல்லதொரு கலந்துரையாடல் இன்றைய தினம் (நேற்று) நடைபெறுகின்றது. இதில் வடமாகாணசபையினர் குறிப்பாக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் கலந்துகொள்வார்கள் என்றே எதிர்பார்த்தோம்.

மாகாணத்தின் வீதி புனரமைப்பு மற்றும் குடிதண்ணீர் விநியோகம் மற்றும் வடிகால்கள் புனரமைப்பு ஆகியவற்றுக்காக சுமார் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா வரையிலான நிதியை மத்திய அரசு செலவிட்டிருக்கின்றது. யாழ். மாவட்டத்தின் அனைத்து முக்கியமான பிரதான வீதிகளும் முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளன.

இதற்காக மட்டும் 34 மில்லியன் ரூபா நிதியைச் செலவிட்டிருக்கின்றோம். மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களுக்கான பிரதான வீதிகளை புனரமைப்பதற்காக மட்டும் சுமார் 80 மில்லியன் ரூபா நிதியைச் செலவிட்டிருக்கின்றோம். ஆனாலும் இந்த மாகாணத்தின் சகல வீதிகளும் புனரமைக்கப்படவில்லை என்பதை நான் அறிவேன்.

வடக்கில் 90 வீதமான மக்களுக்கு மின்சார வசதியை செய்து கொடுத்திருக்கின்றோம். மேலும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று நேற்றய தினம் (நேற்று முன்தினம்) கிளிநொச்சியில் ஒரு வைத்தியசாலைக்குச் சென்றபோது அங்கிருந்த வைத்தியர் ஒருவர் எனக்கு கூறிய விடயம், சமகாலத்தில் தாய் மரணவீதம், சிசு மரணவீதம் போன்றன முழுமையாக குறைந்துள்ளதாக குறிப்பிட்டார். எனவே இதன் அர்த்தம் இலங்கையின் மற்றைய மாகாணங்களை விடவும் வடக்கில் சகலதுறைகளிலும் அபிவிருத்தி உச்ச அளவில் இருக்கின்றது என்பதே. நான் நினைத்திருந்தால் வடமாகாணத்தை ஒதுக்கிவைத்திருக்கலாம்.

அல்லது இன்று செய்திருக்கும் அபிவிருத்தியை இன்னும் 5 வருடங்கள் பின்பாக செய்திருக்கலாம். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் நான்கில் மூன்று பகுதி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் வடக்கில் மேற்கொள்ளப் படுகின்றன" - என்றார். (ற-5)

### ஜனாதிபதி

சிங்கம் மண்டபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்தினார். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்கெடுக்கவில்லை. அத்துடன் அவர்களுக்கு ஆசனங்களும் ஒதுக்கப் பட்டிருக்கவில்லை. அந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டிருந்தது. பி.ப 2 மணியளவிலேயே கூட்டம் முடிவடைந்தது.

அதன் பின்னர் துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து 4 ஆயிரத்து 200 அரச உத்தியோகத்தர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மோட்டார் சைக்கிள் வழங்கினார். தொடர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் வைத்து, புலமைப்ப பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கினார்.

அதன்பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாலை 4 மணியளவில் சென்று அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார். இறுதியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கன்னங்கரா தின நிகழ்வுகளில் பங்கெடுத்தார்.

இன்று செவ்வாய்க் கிழமை, வேலணை பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் அலுவலகம் என்பவற்றை திறந்து வைப்பதுடன் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களையும் திறந்து வைக்கவுள்ளார். (ற-5,108)

### சிங்களவரை

மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. அதன் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்தனர். "1990 ஆம் ஆண்டு மிகக் குறுகிய கால அவகாசத்தில் முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்"- என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

அப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதைப் போல் இங்கிருந்து 1980 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சிங்கள மக்களும் வெளியேற்றப்பட்டார்கள். முஸ்லிம் மக்களின் குடியேற்றம் இடம்பெறுவதைப் போல் சிங்கள மக்களும் குடியேற்றப்பட வேண்டும்.

போர் முடிவுக்கு வந்ததும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை குடியமர்த்தினேன். அது முடிவுக்கு வந்திருக்கின்றது. ஏனைய இன மக்களையும் குடியமர்த்த வேண்டும்" என்று குறிப்பிட்டார். (ற-5)

### யாழில்

நாவற்குழி, யாழ்ப்பாணம் முதலான நான்கு ரயில் நிலையங்களிலும் கடும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இந்த ரயில் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் சுமார் 10 மீற்றர் இடைவெளியில் பொலிஸாரும் இராணுவத் தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், ரயில் நிலையங்களிலிருந்து சுமார் ஓரிரு கிலோ மீற்றர் இடை வெளிக்குள் 100 மீற்றர் இடைவெளியில் ஒவ்வொரு இராணுவமும் பொலிஸாரும் நிறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் பிரதான மற்றும் உப ரயில் கடவைகளிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். விசேடமாக யாழ்தேவி ரயில் பளையிலிருந்து - யாழ். நோக்கி வரும்வரை ரயிலுக்குச் சமாந்தரமாக பிரதான வீதியில் பாதுகாப்புத் தரப்பினர் ஜனாதிபதிக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். (ற)

# 'ஜெ' இன் பிணை மனு ஒக்.17 இல் விசாரணை

## உச்ச நீதிமன்றம் அறிவிப்பு

பெங்களூர், ஒக்.14
சொத்துக்குவிப்பு வழக்கில், பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிணை மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ள உச்ச நீதிமன்றம், எதிர்வரும் 17 ஆம் திகதி அந்த மனு மீது விசாரணை நடைபெறும் என்று அறிவித்துள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகாலசிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ள அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா, பிணை கோரி கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, பிணை கேட்டு கடந்த வாரம் உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தநிலையில் உச்ச நீதி மன்ற தலைமை நீதிவான் எச்.எல். தத்து. நீதிவான்கள் சிக்ரி, லோகூர் ஆகியோர் அடங்கிய அமர்வுமுன்பு, ஜெயலலிதா சார்பில் சட்டத்தரணி பாலின் நரிமன் முன்னிலையாகி, மனுவை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதையடுத்து பிணை மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிவான்கள், எதிர்வரும் 17 ஆம் திகதி ஜாமீன் மனு மீதான விசாரணை நடைபெறும் என்று அறிவித்தனர். (வ)

# உதட்டுக்குள் செலுத்திய உலகிலேயே பெரிய தட்டு



உலகிலேயே உதட்டுக்குள் மிகப்பெரிய தட்டொன்றை உட் செலுத்திய பெண் தென் எதியோப்பிய பள்ளத்தாக்கு பிராந்தியத்தில் வாழ்வது கண்டறியப்பட்டுள்ளது.

எதியோப்பியாவுக்கு ஆவணப் படம் ஒன்றை எடுக்கச் சென்ற ஆஸ்திரேலிய திரைப்படத் தயாரிப்பாளர் ஆபிரஹாம் ஜொபி தலைமையிலான குழுவினர் மேற்படி பெண்ணை முதன்முதலாக கண்டு பிடித்து அது தொடர்பில் அறிவித்துள்ளனர்.

அதயி எலிகிடக்னி (வயது -20) என்ற அந்தப் பெண் 59.5 சென்ரிமீற்றர் சுற்றளவும் 19.5 சென்ரிமீற்றர் விட்டமும் கொண்ட இறுகிய களிமண் தட்டை தனது உதட்டுக்குள் உட்செலுத்தியுள்ளார்.

எதியோப்பியாவில் மேற்படி உதட்டுக்குள் களிமண் தட்டை உட்செலுத்தும் பாரம்பரியம் 1896 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து வழக்கத்தில் உள்ளது. தமது கணவர்மாரைக் கவர்வதற்கான வழிமுறையாக இந்த வழக்கத்தை எதியோப்பிய பெண்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

உதட்டில் களிமண் தட்டுக்களை உட்செலுத்துவதற்கு அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ள போதும், பின் தங்கிய பிராந்தியங்களில் அந்த வழக்கம் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் உதட்டுக்குள் உட்செலுத்தப்பட்ட மிகப் பெரிய தட்டின் விட்டம் 15 சென்ரிமீற்றர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழருக்கு நன்மையில்லை

## மட்டு. எம். பி. அரியநேத்திரன் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஒக்.14
இலங்கையை 'இராமன் ஆண்டாலும் சரி, இராவணன் ஆண்டாலும் சரி,' யார் ஆண்டாலும் தமிழ் மக்களுக்கு விமோசனம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இந்தநிலையில், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இந்தமுறையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவு எடுக்கும் என்பதுடன், எமது முடிவை வட, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை தான் பகிரங்கமாக தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

இப்போது அரசுக்கு ஒரு தலையிடி வந்திருக்கின்றது. இப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலை தீர்மானிக்கின்ற சக்தியாக மாறியிருக்கின்றது என்பது தெரிந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இளைஞர் விவசாயத்திட்டக் கிராமத்தில் சங்காரவேல் சனசமூக நிலையம் ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

'வாசிப்பு கட்டாயமானதாகும். பாடசாலைகளில் சென்று படித்தாலும் மேலும் தேடிப் படிக்கவேண்டிய பல விடயங்கள் உள்ளன. வாசிப்பு ஒரு மனிதனுக்கு இருக்குமாக இருந்தால், எதிர்காலத்தில் பூரணத்துவப்படுத்தப்பட்ட எமது சமூகத்தை கட்டியெழுப்பலாம்.

அபிவிருத்தி மனித வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது. இது குடும்பம் முதல் நாடு வரை இடம்பெறவேண்டும். ஆனால், எமது தமிழ்ச் சமூகம் கடந்த 64 வருடகாலமாக சுதந்திரமில்லாத பிரசைகளாக வாழ்ந்துகொண் டிருக்கின்றது. இந்தச் சுதந்திரத்தை பெறவேண்டும் என்பதற்காக அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராட்டங்கள் இடம்பெற்றன.

தற்போது மூன்றாம் கட்டமாக எமது பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக எமக்கு ஒரு தீர்வு வரவுள்ளது. இதற்கு எமது மக்கள் அனைவரும் உணர்வாளர்களாக மாற வேண்டும்.

தற்போது கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டத்துக்காக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் 10 லட்சம் ரூபா நிதியில் 7 லட்சம் ரூபாவே வழங்கப்படுகின்றது. மிகுதி 3 இலட்சம் ரூபா சுருட்டப்படுகின்றது.

ஆயுதப் போராட்டம் முடிந்தாலும் வடக்கு, கிழக்கு என்பது தமிழர் தாயகமாக இருந்து கொண்டிருக்கின்றது. இந்த வகையில், அபிவிருத்தி தேவையே. ஆனால், அபிவிருத்தி என்பதற்கும் வாக்குரிமை ஏன்பதற்கும் வித்தியாசம் உள்ளது. வாக்குரிமை என்பது இன விடுதலையைப் பெறுவதற்கு பயன்படுத்த வேண்டும். அதற்காக வேண்டி அபிவிருத்தி மாயைக்குள் சென்று விடக்கூடாது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைப் பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் அத்துமீறி சிங்கள மக்கள் குடியேற்றப்படுகின்றார்கள்.

அதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுத்து நிறுத்தியுள்ளது. முன்னாள் முதலமைச்சரோ, இன்னாள் பிரதியமைச்சரோ அதைத் தட்டிக் கேட்கவில்லை. நாம் நீதிமன்றம்வரை சென்றுள்ளோம். எமது நிலத்தை தக்க வைக்கும்போதே அடுத்த நகர்வாக எமது பணியை மேற்கொள்ளமுடியும்.

எமது மக்கள் கடந்த போரால் இன்று அங்கவீனர்களாகவும், அநாதைகளாகவும், விதவைகளாகவும் இருக்கும் இவ்வேளையில், படுவான்கரைப் பிரதேசத்தில் மாத்திரம் 2,000 இற்கும் மேற்பட்ட மாவீரர்களையும் இழந்திருக்கின்றார்கள், இது வரலாறாகும். இந்த வரலாற்றை இப்படியே விட்டுவிட முடியாது. இதுகுறித்து நன்கு ஆராயப்பட வேண்டும். இதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச ரீதியில் சமாதானத்தின் ஊடாக மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த தேர்தலை இலக்கு வைத்து வாக்குகளை கேட்கவில்லை. எமது அடுத்த சந்ததியினர் வாழவேண்டும் என்பதை இலக்கு வைத்தே வாக்குகளைக் கேட்போம்.

அரியநேத்திரன் தேர்தலில் போட்டியிடுவார்; அல்லது போட்டியிடாமல் விடுவார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடும். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரம் வாக்களித்தாலே எமது பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். இருந்தாலும், கடந்த போரில் பலவற்றை நாம் இழந்திருந்தாலும், கல்வியையும் உணர்வையும் எமது சமூகம் இழக்கவில்லை.

அரசியல், அபிவிருத்தி, மனித வாழ்வு என்பன பின்னிப் பிணைந்துள்ளன. இன்னும் சில காலங்களில் தேர்தல் இலங்கையில் வர இருக்கின்றது. அது ஜனாதிபதித் தேர்தல் என்று பலர் கூறுகின்றார்கள். இந்தத் தேர்தலில் எமது தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவிக்கும்'- என்றார். (வ-12)

# 'கத்தி' மற்றும் 'புலிப்பார்வை' படங்களுக்குத் தடை நீக்கம்







மதுரை, ஒக்.14
'கத்தி' மற்றும் 'புலிப்பார்வை' படங்களை தடை செய்யக் கோரி மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில், விஜய் நடித்துள்ள படம் 'கத்தி'. இந்தத் திரைப்படத்தை லைகா நிறுவனம் சார்பில் சுபாஷ் கரண் தயாரித்துள்ளார். அவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமானவர் என்றும், இதனால் அந்தப்படத்தை தடை செய்ய வேண்டும் என்றும் தமிழகத்தில் பல்வேறு தரப்பினர் போராட்டம் நடத்தினர்.

இதற்கிடையே பிரவீன் காந்தி இயக்கத்தில் உருவான 'புலிப்பார்வை' என்ற திரைப்படம், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் வாழ்க்கையைமையமாகக் கொண்டு தயாராகியுள்ளது. இந்த படத்துக்கும் எதிர்ப்புக் கிளம்பியது.

இந்தநிலையில் இந்த இரண்டு படங்களையும் தடை செய்ய வேண்டும் என்றுகோரி உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் ரமேஷ் என்ற சட்டத்தரணி வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிவான் கிருபாகரன், ஒரு படம் தணிக்கையான பின்னர் அதில் தலையிட முடியாது என்றும், எனவே இந்தப்படங்களுக்கு தடை விதிக்க முடியாது என்றும் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார். (வ)

## குற்றங்களும் கைதுகளும்

ஏறாவூர்

### போலி நாணயத் தாள்களுடன் ஏறாவூரில் ஒருவர் சிக்கினார்

போலி நாணயத் தாள்களை வைத்திருந்த ஒருவர் ஏறாவூர் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடை ஒன்றுக்குச் சென்ற சந்தேகநபர் ஆயிரம் ரூபா நாணயத்தாளை பயன்படுத்தி பொருள் கொள்வனவில் ஈடுபட முற்பட்டுள்ளார். இதன்போது அது போலி நாணயத்தாள் என்று அடையாளம் கண்டுகொண்ட கடை உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் வசமிருந்து, மேலும் இரண்டு போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (வ)

ஏறாவூர்

### கல்முனையில் இந்தியர் கைது

அம்பாறை, ஒக்.14
கல்முனை பிரதேசத்தில் சுற்றுலா நுழைவிசைவு மூலம் இலங்கைக்கு வந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 45 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவராவார். சந்தேகநபரை கல்முனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

வலி.வடக்கு

### கைபேசி அபகரிப்புச் சம்பவம்; சந்தேகநபர்கள் பிடிபட்டனர்

ஓட்டோவில் வந்தவர்கள் வீதியில் கையடக்க தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வந்தவரின் கையடக்க தொலைபேசியை பறித்துச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நால்வர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சைக்கிளில் வந்தவர் தள்ளி வீழ்த்தப்பட்டு கையடக்க தொலைபேசி பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த நபர் சத்தமிட்டார். அதைத்தொடர்ந்து அந்த இடத்துக்குச் சென்றவர்கள் ஓட்டோவின் இலக்கத்தை சேகரித்து பொலிஸாரிடம் வழங்கியதன் அடிப்படையில் குறிப்பிட்ட நபாகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஏழாலைப் பகுதியைச் சேர்ந்தவர்களே இந்தச் சம்பவத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ—86)

# வடக்கு மாகாண சபையை விமர்சித்த மஹிந்தவுக்கு நாடாளுமன்றில் பதிலடி

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சூளுரை*



*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நெல்லியடியில் நிகழ்வொன்றுக்குச் சென்று கொண்டிருந்தபோது ஆவரங்கால் பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் ஜனாதிபதியைக் கண்டதும் கொடிகளை அசைத்து தமது ஆரவாரத்தைத் தெரிவித்தனர். இதனைப் பார்த்த ஜனாதிபதி சந்தோசத்தில் திடீரென வாகனத்தை நிறுத்துமாறு கூறி நடு வீதியில் இறங்கி மாணவர்களுடன் அளவளாவியதுடன் அவர்களுடன் சேர்ந்து புகைப்படங்களும் எடுத்தார்.(கு)*

கொழும்பு,ஒக்.14

"வடக்கு மாகாண முதலமைச்சரையும், வடக்கு மாகாண சபையையும் கண்டபடி விமர்சித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உரிய நேரத்தில் பதில் வழங்குவேன். இந்தப் பதிலை நாடாளுமன்றில் வைத்துத் தெரிவிக்கத் திட்டமிட்டுள்ளேன்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் சில அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும், வடமாகாண சபையினரும் அரசுக்கு அனுமதி தரவில்லை. அவர்களும் அவற்றைச் செய்கிறார்கள் இல்லை. வட மாகாண சபை வைக்கோல் பட்டடை நாய் போல செயற்படுகின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியிருந்தார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 20 ஆயிரம் பேருக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மஹிந்த கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற் கண்டவாறு தெரிவித்திருந்தார்.

வடக்கு மாகாணசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருக்கின்றது. இந்த நிலையில், ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் கூட்டமைப்பின் பதில் என்னவென்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்று 'உதயன்' வினவியது.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண முதலமைச்சரையும், வடக்கு மாகாண சபையையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டபடி விமர்சித்துள்ளார். இதற்கான பதிலை முதலமைச்சர் விக்னேஸ்வரனும், வடக்கு மாகாண சபையினரும் வழங்குவார்கள். எனினும், வடக்கு மாகாணசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருப்பதனால் கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் அதற்கான பதிலை உரிய நேரத்தில் வழங்குவேன். - என்றார்.

# அதிகாரங்களை வழங்காது வடக்கு சபையை விமர்சிப்பது அர்த்தமற்றது

*ஜனாதிபதியை சாடுகிறது ஐ.தே.க.*

கொழும்பு,ஒக்.14

வடக்கு மாகாண சபைக்கு உரிய அதிகாரங்களை வழங்காது அதன் செயற்பாடுகளுக்கு கடிவாளம் போடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அச்சபையானது மத்திய அரசுடன் இணைந்து செயற்படுவதில்லை என விமர்சிப்பது அர்த்தமற்ற செயலாகும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

வடக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வின்போது-

வடக்கு மாகாண சபை வட பகுதிக்கான அபிவிருத்திக்கு தடையாக இருக்கின்றது என்று குற்றஞ்சாட்டியதுடன், வைக்கோல் பட்டடை நாயுடன் அதை ஒப்பிட்டு கருத்து வெளியிட்டிருந்தார்.

அத்துடன், ஈழக்கோரிக்கையை கைவிட்டால், ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு தான் தயார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே ஐக்கியதேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தலைமைத்துச் சபை உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பேசுவதற்கு ஒன்றும் இல்லாததால், ஜனாதிபதி மஹிந்த தற்போது எதை எதைப் பற்றியோ பேசி வருகின்றார். இவ்வாறானதொரு கதைதான் ஜனாதிபதி முறைமையை நீக்கப் போவதாக கூறும் அவரின் அறிவிப்பு.

தனி ஈழத்தை ஆதரிக்கப்போவதில்லை என தெரிவித்து உயர் நீதிமன்றத்துக்கு கூட்டமைப்பு சத்தியக்கடதாசியை வழங்கியுள்ளது. அப்படியானால், ஜனாதிபதி முறைமையை மஹிந்த நீக்கலாம் தானே?

அதேவேளை, வடக்கு மாகாண சபைக்கு உரிய அதிகாரங்களை மத்திய அரசு வழங்கவில்லை. கூட்டமைப்புடன் முரண்படும் ஆளுநரையும் பிரதம செயலாளரையும் அவர் நீக்கவில்லை. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவில்லை. இந்த நிலையில், வடக்கு மாகாண சபை ஒத்துழைச்சுச் செயற்படவில்லை என ஜனாதிபதி கூறுவது அர்த்தமற்ற விடயமாகும்- என்றார்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கணினிப்பயிற்சி நெறி**
க.பொ.த உயர்தரம் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கு வேலைவாய்ப்பு அதிகம் மிக்க இணைய வடிவமைப்பு, வலையமைப்பு தொடர்பான பயிற்சி நெறிகள். மைக்ரோசொப்ற் கணினிப்பொறியிலாளர்களினால் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள எம்.சி.எஸ் கணினி வளாகத்தில் கட்டணமின்றி கற்பிக்கப்படுகின்றது சான்றிதழ்களும் அங்கத்துவமும் ஐக்கிய அமெரிக்க மைக்ரோசொப்ற் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது. ஆர்வமுடையவர்கள் தமது பெயர் மாவட்டம், பிறந்த திகதி என்பவற்றை 772395895 என்ற இலக்கத்திற்கு SMS அனுப்பி உடன் பதிவினை மேற்கொள்ளவும்.பயிற்சி நெறிகள் யாவும் புதன்கிழமை தொடக்கம் சனிக் கிழமை வரை காலை 9 மணி முதல் 2 மணி வரை நடைபெறும்.

**மஹிந்தோதய ஆய்வுகூட திறப்பு விழா**
யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில்
மேற்படி நிகழ்வானது
இன்று (2014.10.14) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில்
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்
அதி மேதகு ஜனாதிபதி
**மஹிந்த ராஜபக்ஷ**
அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.
இந் நிகழ்வில் தங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர். - அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
(53200)(4.3.6)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSYயின் கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள் (பிரெஞ் ஆசிரியர் உட்பட) சரியான உச்சரிப்பு. CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS.
யாரும் படிக்கலாம்.ஓரிரு மாதங்களும் படிக்கலாம்
உடன் பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்கள்,தொழில் புரிவோருக்கான 3 மாத வார,வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 18.10.2014
பிரிவு 1. மாலை 3.00-05.00
செவ்வாய்,வியாழன் பிரிவுகள் ஆரம்பம் - 21.10.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
நெல்லியடியில்
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 18.10.2014 மாலை : 03.00
திங்கள்,புதன் பிரிவுகள் ஆரம்பம் : 20.10.2014 மாலை : 03.00
18.10.2014 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு 20 புத்தகங்கள்,சான்றிதழ் இலவசம்.
SAAMSON Experts in English Training
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
24, நெல்லியடி சந்தி, நெல்லியடி.
077 621 4567
021 320 3313

**மீண்டும் வந்திட்டுது! வெல்லுங்கள் பரிசு**
நொக்கியா நிறுவனத்தை வாங்கிய நிறுவனம்?
a.மைக்ரோசொப்ற் b.ஓராக்கிள் c.எச்.பி d.ஐ.பி.எம்.
விடையுடன், பெயர், முகவரி என்பவற்றை 775520940 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பவும்.
CIMA, Banking, Computer கற்கைநெறிகளை கற்பதற்கான வவுச்சர்களை வென்றிடுங்கள்
பரிசு விபரங்கள் SMS மூலமாக அறிவிக்கப்படும்
கல்வியங்காட்டு சந்தியில்
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
www.mcai.edu.lk, www.jcsociety.org.lk

தற்போது யாழ் நகரில்...



- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747
Macro Ads
Building Careers - Transforming Lives

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.